
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

அயோத்தி வெறியாட்டம்: ஆர்.எஸ்.எஸ். அரசு எந்திரம் கூட்டு!

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
16-30 நவம்பர் '90 1/6 விலை ரூ.2.00




## அம்பானி - ராஜீவின் எடுபிடி ஆட்சி!

படிப்பகம்

www.padippakam.com

# சிறையினுள்....
# ஒரு நேரடி அனுபவம்....

கருப்பம்புலம் அரசு மருத்துவமனை டாக்டர் சந்திரசேகரன் கொடுத்த பொய் வழக்கில் திருத்துறைப்பூண்டி சிறையில் அடைக்கப்பட்டார் தோழர் குணசேகரன். அச்சிறையில் சேகரித்த விபரங்கள் மூலம் - அரசின் அடக்குமுறை கருவிகள், மக்கள் விரோத நிறுவனங்களை அதன் குகைக்குள்ளேயே அம்பலப்படுத்துகிறார், தோழர்! அவர் சந்தித்த திருத்துறைப்பூண்டி சிறை கைதிகளில் சிலர்...

செல்லையன் வயது 45. வெள்ளப் பள்ளம் என்ற ஊரைச் சேர்ந்தவர். கூலி ஏழை விவசாயி. இவருடைய 8 மா தரிசு நிலத்தை அதே ஊரைச் சேர்ந்த குப்புசாமி கவுண்டர் பண்படுத்தி தருவதாக பெற்றார். அதற்கு ஈடாக அந்நிலத்தில் ஒரு வருடம் சாகுபடி செய்து கொள்வதாக சொன்னவர் இரண்டாண்டுகளுக்குப் பிறகும் அந்நிலத்தை ஒப்படைக்கவில்லை. மீதியை செல்லையாவே சொல்கிறார்.

''நிலத்தை திரும்ப கேட்டதற்கு, அவரிடம் நான் ரூ1500 கடன் பெற்றதாக பொய் பத்திரம் காட்டினார். நான் அந்த நிலத்தில் அத்துமீறி இறங்குவதாக தலை ஞாயிறு போலீசாரிடம் புகார் செய்தார். விதை நெல் வாங்க சென்ற என்னை பஸ்ஸில் வைத்து போலீசு கைது செய்தது.

என்னிடம் இருந்த ரூ.150-யும் பிடுங்கிக் கொண்டு அடித்து இழுத்து சென்றார்கள். கள்ளச்சாராயம் காய்ச்சியதாக பொய் வழக்குப் போட்டு இரண்டு நாள் போலீசு நிலையத்தில் வைத்து அடித்தார்கள். கண் தெரியாத தந்தையை தவிர எனக்கு யாருமில்லை'' என்று கூறினார்.

சுப்ரமணியன், வயது 43. செம்போடை என்ற ஊரைச் சேர்ந்தவர். 5 வருடத்திற்கு முன் இவர் மீது ஒரு வீட்டை எரித்ததாக வழக்கு நடந்து முடிந்து போனது. இவர் நாகப்பட்டினம் (ஓ.என்.ஜி.சி.) எண்ணெய் எரிவாயு நிறுவனத்தில் வேலை செய்பவர். திடீரென இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இவர் வேலை செய்யும் இடத்திற்கு போலீசு வந்தது. அங்கேயே அவரை கைது செய்தது.

''ஏன் என்ன கைது செய்யறீங்கன்னு கேட்டதுக்கு வீடு எரிச்ச வழக்குல கைது செய்ய சொல்லி வாரண்ட் இருக்குன்னு சொன்னாங்க. நான் கேசுதான் 1985-லேயே முடிஞ்சு போச்சேன்னு சொன்னேன். அவங்க, அதெல்லாம் தெரியாது நீ ஸ்டேஷன்ல வந்து சொல்லுன்னாங்க. ஸ்டேஷன்ல 6 நாள் வச்சிருந்தாங்க. அதுக்கப்புறம் கேசு போட்டு சிறையில தள்ளிட்டாங்க. 6 மாதத்துக்கு மேலே நான் சிறையிலே இருக்கேன். வக்கீல் வச்சி விசாரிச்சா எந்த கோர்ட்லேயும் என் மேல வழக்கு இல்லேங்கிறாங்க. ஆனால் திருத்துறைப்பூண்டி மாஜிஸ்டரேட் எழுத்து மூலமா அப்படி உத்திரவு வந்தாத்தான் விடுதலை செய்வேன்னு சொல்றாரு'' என்று வேதனையோடு குமுறினார்.

நாராயணன் வயது27. திருத்துறைப்பூண்டியைச் சேர்ந்தவர். அவர் சொன்னார். ''தப்பே செய்யாம இருந்த என் மேலே இரண்டு பொய் வழக்கு போட்டு உள்ளே தள்ளிட்டாங்க. தப்புச் செய்யாம சிறைக்கு வர்றதை விட தப்பு செஞ்சிட்டு வரலாம்ன்னு 'பிக்பாக்கெட்' அடிக்க ஆரம்பிச்சேன்'' என்கிறார். ''அதன்பிறகு திருந்தி கடையில வேலைப்பார்த்துகிட்டு இருந்தேன். அப்பவும் என்னை போலீசு விடலை'' என்று விரக்தியுடன் சொன்னார்.

இப்படி சிறையிலே நூற்றுக்கு எண்பது பேர் நிரபராதிகளாகவே இருக்கின்றனர். குற்றவாளி யார் என்று கண்டுபிடிக்க முடியாதபோது யாராவது ஒருவர் மீது — கேள்வி கேட்க ஆளில்லாத ஏழைகள் மீது போலீசு வழக்கு போட்டு விடுகிறது. அவர்களிடம் போலீசும் நீதிமன்றமும் மக்களுக்கானது அல்ல என்று கூறியபோது அனைத்தையும் ஏற்றுக் கொண்டார்கள். ஒரு போராட்டம் இல்லாமல் இதற்கெல்லாம் முடிவு வராது என்று கூறியபோது, நம்பிக்கையின்றி என்னைப் பார்த்தார்கள்.

**தகவல்: குணசேகரன்.**

## ரேஷன் கடை ஊழல்களுக்கு எதிராக...

கருணாநிதி ஆட்சியின் ஆரம்பகால குரத்தனங்கள் 5 கிலோ இலவச அரிசி, ரேஷன் கடைகளுக்கு மந்திரிகள் திக் விஜயம் எல்லாம் காணாமல் போனது! கருணாநிதியின் கையாலாகாத - ஊழல் நிர்வாகத்திற்கு சாட்சியங்களாய் விளங்கும் ரேஷன் கடைகளின் ஒழுங்கீனங்கள் - ஊழல்களை எதிர்த்து 8.10.90 அன்று மதுரை பொன்மேனி புதூர் ரேஷன் கடை முன் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

மக்கள் கலை இலக்கிய கழகம், மதுரை கிளை தோழர்கள் 25 பேருக்கும் அதிகமாக இதில் கலந்து கொண்டனர். சம்மட்டிபுரம், பொன்மேனி, புதூர் பகுதிகளில் 4 பிரதான இடங்களில் இதையொட்டி மக்கள் ஆதரவுடன் தெருமுனை கூட்டங்கள் நடத்தப்பட்டது.

## நள்ளிரவில் தோழர்கள் கைது!
## ஊழல் மருத்துவ அதிகாரி - போலீசு கொட்டம்!

வேதாரண்யம் தாலுக்கா கருப்பம்புலத்தில் உள்ள அரசு மருத்துவமனையின் ஊழல் - சீர்கேடுகளையும், அதற்கெதிரான வேதாரண்யம் புதிய ஜனநாயகம் வாசகர் வட்டத்தின் நடவடிக்கைகளையும் சென்ற புதிய ஜனநாயகத்தில் (நவம்.23-24/5) தெரிவித்திருந்தோம். அதன் பிறகும் அம்பலப்படுத்தும் போராட்டம் தொடர்ந்தது. பிரச்சாரம் வீச்சாகப் பரவியது.

சந்திரசேகரின் ஊழல், கருப்பம்புலம் முழுக்க சிரிப்பாய் சிரிக்கிறது. இவர் தனது பினாமி மூலம் செங்கை மெடிக்கல்ஸ் நடத்தி வருவது ஊரறிந்த ரகசியம். மருத்துவம் பார்க்க வரும் நோயாளிகளிடம் இங்கிருந்து செலின். குளுக்கோஸ், மற்றும் உயர்வகை மருந்துகளை வாங்கி வரச் சொல்லுவார். பிறகு, அரசு மருத்துவமனை மருந்துகள் மூலமே வைத்தியம் பார்த்துவிட்டு, நோயாளிகள் வாங்கி வந்ததை மீண்டும் கடைக்கு எடுத்துச் சென்று விடுவார்...!

மருத்துவமனை ஊழலின் கதாநாயகன் டாக்டர் சந்திரசேகரன் கும்பல் அரண்டு போனது. தனக்கேயுரிய கிரிமினல் புத்தியுடன் போலீசு துணையுடன் தோழர்களின் மீது பொய் வழக்கு ஜோடித்தது. ஊழல் திலகம் டாக்டர் சந்திரசேகரன், தன்னிடம் தோழர்கள் நிதிகேட்டு அவர் ரூ.25 கொடுக்க அதை மறுத்து ரூ.500 கேட்டு மிரட்டியதாகவும் கூறினார்.

மேலும், தோழர்கள், ''நாங்கள் புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம் என்ற பெயரில் இயங்கும் தீவிரவாதிகள்; நக்சல்பாரிகள்; உன்னை கொன்று விடுவோம். மருத்துவமனைக்கு வெடிகுண்டு வைத்து தகர்ப்போம். உன்மீது பொய்ச் செய்திகள் எழுதி ஒட்டி அவமானப்படுத்துவோம்'' என்று கூறி ஆயுதங்களைக் காட்டி மிரட்டியதாக பொய் புகாரை போலீசுக்கு கொடுத்தார்.

அதற்காகவே காத்திருந்த போலீசு அப்புகாரை கவ்விக் கொண்டு தோழர்களை இரவோடு இரவாக வீட்டினுள் புகுந்து படுக்கையிலே கைது செய்தது. வேதாரண்யம் எஸ்.ஐ. மனோகரன் தலைமையில் 3 பேர் கொண்ட போலீசு கும்பல் தோழர்கள் குணசேகரன், கிருஷ்ணமூர்த்தி, வீரப்பன், முருகையன் ஆகியோரைக் கைதுசெய்து சிறையில் அடைத்தது. வீட்டில் கைதுசெய்து பேருந்து நிலையத்தில் கைது செய்ததாக வழக்கும் போல் புளுகியது, தோழர்கள் பின் வாங்காது, அக்கும்பலை மக்கள் ஆதரவுடன் மேலும் தோலுரித்து வருகின்றனர்.





படிப்பகம்

www.padippakam.com


புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஆறாமாண்டு

1

16-30 நவம்பர் '90

உள்நாடு
தனிஇதழ் : ரூ.2.
ஆண்டு சந்தா : ரூ.48

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுசந்தா : US $ 11



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.


# இந்துமதவெறி பாசிச அபாயமும் சமூகவிரோத கிரிமினல் கும்பலின் ஆட்சியும்

நாடு இதுவரை கண்டிராத அளவு மிக மோசமான சந்தர்ப்பவாத, சமூகவிரோத, கிரிமினல் கும்பல் ஆட்சியைப் பிடித்துள்ளது. லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் மட்டு மல்ல; தேர்தல் மோசடி - கொலைகள் முதல் போலி ஆவணத் தயாரிப்பு வரை கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்டு பணம், பதவியைப் பிடிப்பது இந்த சந்திரசேகர் - தேவிலால் கும்பலின் கைவந்தகலை. இதன் பின்பலமாய் உள்ளவர்கள் யார், யார்? ஆயுதம் - போதைமருந்து கடத்தல், விபச்சாரம் மற்றும் தரகுத் தொழில்களில் ஈடுபட்டுள்ள சர்வதேச கிரிமினல் மாஃபியா, இரகசிய உலகப் பேர்வழிகளான ஆதனான் கஷோகி சந்திராசாமி; அந்நியச் செலாவணி மற்றும் நிதி மோசடிக் குற்றவாளிகளும் மிகப்பெரும் தரகு அதிகார முதலாளிகளுமான அம் பாணி, இந்துஜா; தொழில்முறை கிரிமினல் கொலைகாரர்களை வைத்து நிலக்கரி கடத்துவது போன்ற தொழில்களைக் கொண்ட தான்பாத் சூர்யதேவ்சிங், பிரபுநாத்சிங்; பெரும் நிலப்பிரபுக் களான ராவ்பீரேந்திரசிங், தேவிலால்; அரசியல் தில்லுமுல்லுப் பேர்வழிகளான சிமன்பாய் பட்டேல், சுப்பிரமணியம் சுவாமி, ஓம்பிரகாஷ் செளதாலா; இவர்கள் அனைவருக்கும் மேலாக ஆட்சியின் சூத்திரதாரியாக பாசிச ராஜீவ் கும்பல். எப்படிப்பட்ட நபர்களுடனும் கூடிக் குலாவு வதும், எந்தக் கட்சியுடனும் கூட்டு வைத்துக் கொள்வதும் தவறில்லை என்பதுதான் சந்திரசேகர் - தேவிலால் கும்பலின் கொள்கை. எந்த ஒரு பிரச்சினையிலும் தமது நிலைப்பாடுகள் எதையும் கூறாததுதான் அரசியல்.

நாடு இன்று எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை இப்படிப்பட்ட ஆட்சியாளர்களால் தீர்க்க முடியுமா? அல்லது தீவிரமடையாமலாவது தடுக்க முடியுமா? எல்லா மட்டங்களிலும் பரவி யுள்ள லஞ்ச ஊழல் - அதிகார முறைகேடுகள் உச்சகட்டத்தை எட்டிவிட்டன. போஃபார்ஸ், நீர்மூழ்கிக் கப்பல் போன்ற லஞ்ச ஊழல் விவகாரங்கள் கிடப்பிலே போடப்பட்டுவிட்டன. விலைவாசி ஏற்றமும் வேலையில்லாத திண்டாட்டமும் தலைவிரித்தாடுகின்றன. பட்ஜெட் பற்றாக்குறை 10,000 கோடியை எட்டிவிட்டது; ஏற்கனவே பெருகிவரும் அன்னிய செலாவணி பற்றாக்குறையோடு வளைகுடா நெருக்கடியும் சேர்ந்து பொருளாதாரத்தை நிலை குலைவுக்குத் தள்ளிவிடும். எனவே சர்வதேச நிதியத்திடமிருந்து அவசர ஈட்டுநிதி வசதியைப் பயன்படுத் திப் பல ஆயிரம் கோடி கடன் பெறுவதும், அதன் நிபந்தனைகளுக்கு பொருளாதாரத்தை அடகுவைப்பதும் தவிர்க்க முடியாது. பஞ்சாப், காஷ்மீர், அசாம் மற்றும் வடகிழக்கு இந்தியப் பிரச்சினைகள் உள்நாட்டுப் போர் அளவுக்கு முற்றிவிட்டன. இவை அனைத்துக்கும் மேலாக மண்டல் அறிக்கை அமலாக்கம் மற்றும் அயோத்தி விவகாரம் நாட்டைச் சாதிரீதியாகவும் மதரீதியாகவும் - பிளவுபடுத்தி கொலைவெறித் தாண்டவமாடுகிறது.

பதவிவெறி, மதவெறி, சாதிவெறி, பாசிச சக்திகளால் உருவாக்கப்படும் இப்பிரச்சினைக ளால் நாடு அடுத்தடுத்த நெருக்கடிக்குள் சிக்கி திணறுகிறது. நாடு எதிர்கொள்ளும் பிரச்சினைக ளைத் தீர்க்க வேண்டுமானால் நிலையான ஆட்சி வேண்டும்; கொள்கைத் தெளிவும், நிர்வாகத் திறனும், தியாக உணர்வும், பரிசுத்தக் கரங்களும் கொண்ட தலைவர்கள் வேண்டும் என்று முதலாளித்துவ அரசியல் விமர்சகர்கள் கோருகின்றனர். ஆனால் அற்ப ஆயுசுடைய, சந்திரசே கர் - தேவிலால் ஆகிய சமூகவிரோத கிரிமினல்களின் பிரதிநிதிகள் தான் ஆட்சியில் அமர்த்தப் பட்டுள்ளனர். உண்மையாக சொல்வதானால் இப்போது இடைத் தேர்தல்களும் நடத்த முடி யாது என்கிற நிலை உருவாகி இப்படிப்பட்ட சந்தர்ப்பவாத, பதவிவெறி பிடித்த கும்பலிடம் நாடாளுமன்ற ஜனநாயகம் தஞ்சமடைந்துள்ளது. வி.பி.சிங், ராஜீவ் மட்டுமல்ல; இந்துமதவெறி யர் அத்வாணி, போலிக் கம்யூனிஸ்டு ஜோதிபாசு உட்பட இன்றைய அரசியல் தலைவர்கள் - அமைப்புகள் அனைத்துமே இந்த நாட்டை ஆள்வதற்கான தகுதியும், தார்மீக உரிமையையும் இழந்துவிட்டதையே இது குறிக்கிறது. சாதி, மதவெறிச் சண்டைகளால் மக்கள் இரத்த வெள்ளத் தில் மிதக்கும் வேளையில் ஆதரவாளர்களின் தலைகளை எண்ணுவது, எம்.பி.க்கள், மந்திரி பதவிகளை விலைபேசுவது, அதற்காக மூட்டை மூட்டையாகத் தரகு அதிகார முதலாளிகளின் பணத்தை வாரி இறைப்பது ஆகியவற்றில் ஒரு பிரிவு அரசியல் கட்சிகள் ஈடுபட்டுள்ளன. இன்னொரு பிரிவுக்கட்சிகளோ இடைத்தேர்தல்களை எதிர்பார்த்து இழப்புகள், வரவுகளைக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்துமதவெறி பாசிச பாரதீய ஜனதா தவிர வேறு எக்கட்சியும் தேர்தல்களை எதிர் கொள்ள அஞ்சுகிறது. தேர்தல்கள் வந்தால் சாதி-மதக் கலவரங்களில் நாடு மூழ்கிவிடும் என்று சமாதானம் கூறுகின்றனர். அசாம், பஞ்சாப், காஷ்மீரில் இப்படித்தான் சூழ்நிலை சாதகமாக இல்லை என்று தேர்தல்களைத் தட்டிக்கழித்தனர். இப்போது இந்துமத வெறியர்களின் தயவுக்கு நாடாளுமன்ற ஜனநாயகத் தேர்தல்கள் நடத்துவது விடப்பட்டுள்ளது. அதிகாரவர்க்கம், போலீசு துணை - உடந்தையுடன் கிளம்பியுள்ள இந்துமதவெறி பாசிசம் நாட்டின் பிரதான அபாயமாக வளர்ந்துவிட்டது. அக்டோபர் 30, அயோத்தி பள்ளிவாசலைத் தாக்கி கடும் சேதம் விளைவித்ததின் மூலம் ''இந்து ராஷ்டிரத்துக்கான போர் துவங்கிவிட்டது'' என்ற இந்துமதவெ றியர்கள் பகிரங்கமாகப் பிரகடனப் படுத்திவிட்டனர்.

இன்றைய கட்சிகள், தலைவர்களின் கையாலாகாத்தனம் திரும்ப திரும்ப நிரூபிக்கப்பட்டு விட்டது. அதோடு இப்போதைய நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறையே தோல்வி கண்டு விட்டதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த அமைப்பு முறைக்குள்ளேயே நெருக்க டிகளுக்குத் தீர்வுகாண முயல்வது முட்டாள்த்தனமானது. அதுமட்டுமல்ல, இந்துமதவெறி பாசிசம் பிரதான அபாயமாகியுள்ள இந்நிலையில் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்கள் தலை மையிலான மதச்சார்பற்ற, சாதிகளற்ற புதிய ஜனநாயக அமைப்பு முறைக்கான புரட்சியே அவசிய, அவசரத் தேவையாக உள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

- பள்ளிவாசலின் மூன்று குவிமாடங்கள் தகர்க்கப்பட்டன.
- பள்ளிவாசலைத் தகர்ப்பதற்கு போலீசு உடந்தை.
- நீதித்துறை, இராணுவம், போலீசில் இந்துமதவெறி.
- பள்ளிவாசலைக் காக்கவும், கலவரத்தை ஒடுக்கவும் இராணுவம் மறுப்பு.
- அத்வானியைக் கைதுசெய்ய அதிகாரி - போலீசு மறுப்பு.
- சாதுக்களா? மதவெறி குண்டர்களா?

# அயோத்தி: இந்துமதவெறி பாசிசத்தின் தாக்குதல்

அயோத்தியிலுள்ள பாபர் பள்ளிவாசலின் மூன்று குவிமாடங்களையும் தகர்த்து, காவிக்கொடியேற்றியதன் மூலம் இந்து மதவெறி பாசிசம் தனது முதல் வெற்றியைப் பிரகடனப்படுத்தி விட்டது. அது இந்து மதவெறி பாரதீய ஜனதா கட்சி மற்றும் அதன் கூட்டு அமைப்புகள் தவிர நாட்டிலுள்ள அனைத்து ஓட்டுக்கட்சிகளும் பேசிவரும் மதச்சார்பின்மை, தேசியம், ஜனநாயகம் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட தோல்வியைக் குறிக்கிறது.

அதுமட்டுமல்ல; உண்மையான மதச்சார்பின்மைக்கும் ஜனநாயகத்துக்கும் போராடிவரும் புரட்சிகரச் சக்திகளுக்கும் அக்டோபர் 30 அயோத்தி சம்பவங்கள் ஒரு பின்னடைவைக் குறிக்கின்றன. பாசிசத்துக் கெதிராகப் பெருமளவில் மக்களைத் திரட்டி அதை முறியடிப்பதில் நாம் வெற்றி பெற்று விட்டோம் என்று கூறிவிட முடியாது.

இந்து மதவெறி பாசிசம் ஈட்டியுள்ள வெற்றி மத்தியிலும் சில மாநிலங்களிலும் ஆட்சி மாற்றங்களைக் கொண்டு வந்துவிட்டன. சாதாரண முதலாளித்துவ விமர்சகர்கள் இதை மட்டுமே பார்க்கின்றனர். ஆனால் இதைவிட முக்கியமாக நாட்டின், மக்களின் அரசியல், சமூக வாழ்வில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விளைவுகள் தோன்றியுள்ளன.

அரசியலையும் மதத்தையும் கலக்கி இணைப்பதில் பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். கும்பல் வெற்றி பெற்றுவிட்ட அதே சமயம், போலித்தனமான மதச்சார்பின்மை, தேசியம், ஜனநாயகம், முற்போக்கு பேசி வந்த பிற முதலாளித்துவக் கட்சிகள் பிளவுபட்டுக் கிடக்கின்றன. இதே போன்றதொரு சூழ்நிலைமையை உருவாக்கித்தான் - யூத எதிர்ப்பு, ஆரிய இன, தேசிய வெறியைத் தூண்டி - ஜெர்மனியில் நாஜி இட்லர் ஆட்சியைப் பிடித்தான்.

பாபர் மசூதியின் சுவர்களைத் தகர்த்து, கலசங்களை இடித்து காவிக் கொடியேற்றும் இந்து வெறியர்கள்.



பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் அத்வானி அயோத்தி நோக்கி சோமநாதபுரத்திலிருந்து குளுகுளு ரதத்தில் யாத்திரை துவங்கிய நாளிலிருந்தே மதவெறிப் படுகொலைகள் அதிகரித்து வந்தன. சிறுபான்மை மதத்தினரிடையே பீதியும், பல நகரங்களில் பீதியும், கலவரங்களும் வளர்ந்து, அத்வானி கைதோடு உச்சநிலையை அடைந்திருந்தது. முன்னாள் பிரதமர் வி.பி.சிங்கும், முதல்வர் முலயாம் சிங் யாதவும் அடித்த சவடால்களைக் காப்பார்களா, இந்துமத வெறியர்களின் சவால்களை முறியடிப்பார்களா என்கிற கேள்விகள் எழுந்தன.

''அயோத்தியிலுள்ள மசூதியைப் பாதுகாப்பதற்காக, நாற்காலியை மட்டுமல்ல; உயிரையே தியாகம் செய்யத் தயங்கமாட்டேன்'' என்று வீராவேசமாகப் பேசினார் வி.பி.சிங்.

ஏறக்குறைய ஒரு யுத்தம் நடத்துவதற்குரிய பெரும்படையைத் திரட்டி, உ.பி.மாநிலம் முழுவதும் பெரும் புழுதியைக் கிளப்பிவிட்டார் முலயாம். எல்லைக் காவல்படை, மத்திய ரிசர்வ் போலீசுப்படை, இந்திய - திபேத் எல்லைப் போலீசு, உ.பி. ஆயுதப்படை, தேசிய காவற்படை (கறுப்புப் பூனைகள்) மற்றும் உ.பி. போலீசு ஆகியவை அடங்கிய 120 கம்பெனிகள் குவிக்கப்பட்டன. அயோத்தியில் மட்டும் 52 கம்பெனிகள் நிறுத்தப்பட்டன.

சாலைத் தடுப்புகளும், காங்கிரீட் சுவர்களும், சோதனைச் சாவடிகளும், பதுங்கு குழிகளும் கூட தோண்டப்பட்டன. அயோத்தி நகருக்குள் வானொலி வலைப்பின்னல் அமைப்பு, தகவல் தொடர்புச் சாதனங்கள், ஆயுத சோதனைக் கருவிகள் கூட வைக்கப்பட்டன. மசூதியைச் சுற்றி தடுப்புச் சுவர்கள், இருப்புத் தடைகள், முள்வேலிகள் என் ஒரு சுற்று பாதுகாப்பு ஏற்பாடுகள் இருந்தன. மொத்தம் 20 கோடி ரூபாய் செலவிட்டதாகக் கணக்கு. நான்கு நாட்களுக்கு முன்பிருந்தே ஊரடங்கு உத்திரவும், இராணுவம் கொடி அணிவகுப்பும் நடத்தியது.

இவ்வளவு இருந்தும் ஆயிரக்கணக்கான இந்து மதவெறியர்கள் பள்ளிவாசல் வளாகத்துக்குள் புகுந்து, மூன்று குவிமாடங்களையும், சுவர்களையும் தகர்த்து, கலசங்களின் (மினாரட்) மீது காவிக்கொடி ஏற்றிவிட்டனர். இது எப்படிச் சாத்தியமானது? அரசு நிர்வாகம் என்ன செய்தது?



படிப்பகம்


www.padippakam.com

வேலியே பயிரை மேய்ந்துவிட்டது என்பதுதான் உண்மை. அரசு நிர்வாகமும், போலீசும் இந்து மதவெறியர்களுக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்து உடந்தையாய் இருந்தது. "போலீசு, துணை இராணுவ ஒத்துழைப்பின்றி இந்த வெற்றியை நாங்கள் சாதித்திருக்க முடியாது. போலீசே ராம ஜன்ம பூமியின் வாசல்களைத் திறந்துவிட்டு, எங்கள் தொண்டுப் பணியிலும் பங்கேற்றது" என்கிறார் விசுவ இந்து பரிசுஷத் தலைவர்.

இப்படி நடக்கும் என்பது அரசுத் தலைவர்களுக்கு முன்னமேயே தெரியும்; தெரிந்திருக்க வேண்டும். 1940களில் அயோத்தி பள்ளிவாசலுக்குள் ராமர் - சீதை முதலிய சிலைகளைக் கள்ளத்தனமாக வைத்து, கோர்ட் விவகாரமாக்கிப் பூட்டியது; பிறகு இந்துக்கள் அச்சிலையை வணங்குவதற்கு, பூசிப்பதற்கு அனுமதித்தது; 1986-இல் பள்ளிவாசலை இந்துக்களுக்கு முழுமையாகத் திறந்துவிட்டது ஆகியவற்றில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், 'நீதி'பதிகள், போலீசு அதிகாரிகள் அனைவரும் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள். அப்போதைய மாவட்ட அதிகாரி கே.கே.நய்யார் ஜனசங்க கட்சி எம்.பி. ஆக்கப்பட்டார். அப்போது மாவட்ட போலீசு அதிகாரியாக இருந்த எஸ்.சி.தீக்சித் இப்போதைய விசுவ இந்து பரிசுஷத் துணைத்தலைவர். அதன் தலைவராக உள்ள அசோக் சிங்கால் ஒரு முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி. வி.இ.ப; பஜ்ராங்தள், கோவில் நிர்மாணக்கமிட்டி போன்ற ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதாவின் துணை அமைப்புகள் அனைத்தின் தலைவர்களும் முன்னாள் அரசு நிர்வாக - போலீசு அதிகாரிகள்.

அக்டோபர் 30 அயோத்தி மதவெறியாட்டங்களை இவர்கள் தலைமையேற்று நடத்துவதற்கு, இப்போதைய நிர்வாகம் முழு ஒத்துழைப்பு கொடுத்தது. இதற்கான அறிகுறியும் முன்பே தெரிந்ததுதான். அயோத்தியில் லட்சக்கணக்கான பக்தர்கள் ஆண்டுதோறும் கூடி சராயு ஆற்றில் மூழ்கி பஞ்சகோசி பரிகிரம விழா நடத்தும் தேதிகள் அக்.28, 30, நவம்பர்-2இல் வந்தது. அப்போதுதான் திட்டமிட்டு பள்ளிவாசல் இடிப்பு - கோவில் நிர்மாண வேலையை இந்து மதவெறியர்கள் நடத்த முடிவு செய்தனர். இந்த விழாவுக்குத் தடைவிதிக்க மறுத்ததோடு, கோவில் நிர்மாண சேவகர்களைத் தடுப்புக் காவலில் பிடிப்பது என்ற பெயரில் பக்தர்களைத் தடுக்கக்கூடாது என்றும், பள்ளிவாசலில் வைக்கப்பட்டுள்ள சிலைகளுக்குப் பூசை செய்வதைத் தடுக்கக் கூடாதென்றும் நீதித்துறை முழுக்கவும் மதவெறி அமைப்பாக உத்திரவு போட்டது.

பாசிச ராஜீவுடன் வி.இ.ப. போட்டுக் கொண்ட ஒப்பந்தத்தின்படி கடந்த ஆண்டு அடிக்கல் நாட்டும் பூசை நடந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ள சிலைகள், படங்கள், கூரையை அதிகாரிகளே அகற்றிவிட்டு, அதையே காரணமாகக் காட்டி மதவெறிக்குத் தூபமிடும் வதந்திகளைப் பரப்பினர். இதற்காக கோர்ட்டில் வழக்கும், அதற்கு ஒரு விசாரணைக் கமிஷனும் போடப்பட்டு மேலும் மதவெறித் தீயில் எண்ணெய் வார்க்கப்பட்டது.




ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட நிர்மாண சேவகர்கள் கைது செய்யப்பட்டதாகக் கூறினாலும் போலீசே அவர்களைத் தப்புவித்து, இரகசிய வழிகளில் அயோத்திக்கு அனுப்பி வைத்தது. அக்.29-ந் தேதி காலை சமஸ்திப்பூரில் அத்வானி கைது செய்யப்பட்டார். ஆனால் அக்.27ந் தேதியே தான்பாத் நகரில் அவரைக் கைது செய்யும்படி போட்ட உத்திரவை மாவட்டத் துணை ஆணையாளரும், போலீசு அதிகாரியும் அமுல்படுத்த மறுத்துவிட்டனர். அக்டோபர் 28ந் தேதி மத்தியப் பிரதேசத்தில் இருந்து உத்திரப் பிரதேசத்துக்குள் நுழைய முயன்ற நிர்மாண சேவகர்கள் வெறியாட்டத்தில் இறங்கியபோது, துப்பாக்கி சூடு நடத்த உ.பி. ஆயுதப் போலீசுப் படை மறுத்துவிட்டது.

இவற்றை விட முக்கியமானது அயோத்தி பள்ளிவாசல் பாதுகாப்பு பிரதானமாக உ.பி. ஆயுதப் போலீசுப் படையிடம் ஒப்படைக்க ப்பட்டிருந்தது. இந்தப் படைதான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மீரட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லீம்களை நிராயுதபாணிகளாய்ப் பிடித்துப் போய் சுட்டுக்கொன்று கால்வாயில் மிதக்கவிட்டு பீதி கிளப்பியது!

அக்டோபர் 30ந் தேதி, அயோத்தியில் என்ன நடக்கப் போகிறது என்பது முதல் நாளே தீர்க்கமாகத் தெரிந்துவிட்டது. வி.இ.ப. தலைவர் அசோக் சிங்காலைக் கைது செய்வதற்காக நிரித்யு கோபால்தாஸ் என்கிற மகந்துவின் பீடத்துக்குப் போலீசுப் படை அனுப்பப்பட்டது. மகந்து சரணடைந்தார். ஆனால் அங்கிருந்த இந்து மதவெறி சாமியார்கள் போலீசுப் படையைச் சூழ்ந்து கொண்டு தாக்கி, மாவட்ட மாஜிஸ்ட்ரேட் கார், போலீஸ் ஜீப்புகளைக் கொளுத்தினர். கலவரத்தின்போது மகந்து தப்பிவிட்டார்.

அதேமாதிரி ராமஜென்மபூமி மீட்புக் குழுத் தலைவரான ராமச்சந்திர பரமகான் என்ற மகந்துவின் பீடத்துக்குப் போன போலீசும் தாக்கப்பட்டது. வி.இ.ப. தலைவர் அசோக் சிங்காலும் துணைத்தலைவர் எஸ்.சி.தீக்சித்தும் அரசாங்க உத்திரவுப்படி கைது செய்யப்பட வேண்டியவர்கள். அவர்கள் இருவருமே அரசு அதிகாரிகள், போலீசு உதவியுடன்தான் அயோத்தி போய்ச் சேர்ந்து, தாக்குதலைத் தலைமையேற்று நடத்தினர்.

"நாங்கள் எப்படி அயோத்தி வந்தோம் என்கிற இரகசியத்தைச் சொன்னால் அரசு உயர் அதிகாரிகள் பலரது பதவி பறி போய்விடும்; அவர்கள்தான் உதவினர்" என்கிறார் தீக்சித்.

பள்ளிவாசல் மீது தாக்குதல் நடந்து கொண்டிருக்கும்போதே, போலீசு முகாமிலேயே பத்திரிக்கையாளர் கூட்டம் நடத்த தீக்சித் அனுமதிக்கப்பட்டார். கும்பலில் அடிபட்ட அசோக். சிங்காலும், தீக்சித்தும் பிடிவாரண்ட் இருந்தும் தாக்குதலுக்குத் தலைமை ஏற்கவும் தப்பிப் போகவும் அனுமதிக்கப்பட்டனர்.

அயோத்தியைச் சுற்றிப் பல தடுப்பு வளையங்கள் இருந்தபோதும், லட்சத்துக்கும் மேற்பட்ட நிர்மாண சேவகர்கள் அனுமதிக்கப்பட்டனர். சராயு ஆற்றுப் பாலத்தில் காவல் புரிந்த சீக்கிய அதிகாரிதான் அவர்களைத் தடுக்க முயன்றார். அவரும் 'பெயர் பட்டை'யைக் கழட்டிவிட்டுப் பணிபுரிந்தார்; அங்கு நடந்த கலவரம், தடியடி துப்பாக்கிச் சூட்டுக்குப் பிறகு அங்கிருந்து அகற்றப்பட்டார்.

பள்ளிவாசல் மீது தாக்குதல் முடிந்த பிறகு, "நீங்கள் ஒத்துழைத்திரா விட்டால் நாங்கள் இதைச் சாதித்திருக்க முடியாது! போலீசுக்கு நன்றி!" என்று கட்டித் தழுவிக் கொண்டனர். அவர்கள் கொடுத்த பிரசாதங்களைப் பயபக்தியுடன் போலீசு வாங்கிக் கொண்டது.

அக்.30ந் தேதி ஊரடங்கு உத்திரவு இருந்தபோதும் பல ஆயிரம் இந்து மதவெறியர்கள் அயோத்தித் தெருக்களில் குவிய அனுமதிக்கப்பட்டனர். "ஸ்ரீஜெயராம்!" "ராமப்பிரபு, உன்னைக் காண வந்திருக்கிறோம்!" "ராமலாலா! உன் பிறப்பிடத்திலேயே கோவில் கட்டுவோம்!" ஆகிய மதவெறிக் கூச்சலோடு வி.பி.சிங், முலாயம்சிங் யாதவ் இருவருக்கும் எதிரான ஆபாச முழக்கங்களும் எதிரொலித்தன.

பள்ளிவாசலுக்குச் சற்றுத் தொலைவில் உள்ள அனுமார் கோவிலருகே கலவரம் செய்து கொண்டிருந்த கும்பலை போலீசு

படிப்பகம்

www.padippakam.com

சமாளித்துக் கொணடிருந்தது. 150 சாமியார்கள், நிர்மாண சேவகர்களை ஏற்றிய பஸ் ஒன்றை ஒரு சாமியார் அதிவேகமாக ஓட்டி வந்தார்! அது பள்ளிவாசலைச் சுற்றியிருந்த முள்வேலி, இரும்பு தடுப்புகளைத் தகர்த்துக் கொண்டு மதில் சுவர் மீது மோதி நின்றது.

துப்பாக்கியுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போலீசு பஸ்ஸின் டயரைச் சுட்டிருந்தாலே நிறுத்தியிருக்க முடியும். 5,6 கிலோமீட்டருக்கு அப்பாலிருந்து அதிவேகத்தில் வந்தது அந்த பஸ். வானொளி வலைபின்னல், 'வயர்லஸ்' போன்ற வசதிகள் இருந்தும் அதை யாரும் கவனிக்கவோ, தடுக்கவோ முயலவில்லை. அந்தப் பஸ்ஸைத் தொடர்ந்து, பள்ளிவாசலை இடிப்பதற்கான கொந்தாளம், கடப்பாறை போன்ற ஆயுதங்களுடன் அதன் வளாகத்துக்குள் இந்து மதவெறி கும்பல் புகுந்தது. மதில்சுவரை இடிக்கவும், கதவின் மீது ஏறித்தாண்டவும் முயன்றது.

பிடிவாரண்டுள்ள தீக்சித்தை கை கொடுத்துத் தூக்கிவிட்ட போலீசு அவரது தூண்டுதலை ஏற்று பூட்டைத் திறந்துவிட்டது. உள்ளே நுழைந்த கும்பல் பள்ளிவாசலுக்குள் வைக்கப்பட்டிருந்த ராமர்சிலையைப் பூசிக்காமல் பள்ளிவாசலின் குவிமாடங்கள் மீது ஏறி செங்காவிக் கொடிகளை ஏற்றியது. அதுகண்ட மதவெறிக்கூட்டம் நாலாபுறங்களிலும் மதிலேறி உள்ளே குதித்தது. பிறகு குவிமாடங்களையும், சுவர்களையும் தகர்க்கத் துவங்கியது.

போலீசுப் படை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது; ஒரு பிரிவு இடிப்பதிலும் பங்கேற்றது; அதிகாரிகள் காணாமல் போய் விட்டனர். பள்ளிவாசலை உடனே இடித்து விடுவது அவர்கள் நோக்கமில்லை. தொடர்ந்து மதவெறியைத் தூண்டுவதற்கு அது அவசியமாயுள்ளது. எனவே முதல் வெற்றியை சாதித்துக் கொண்டதும், போலீசு - நிர்வாகம் கெஞ்சியதை ஏற்பதாக நாடகமாடிய தீக்சித் உத்திரவு போட, இந்து மத வெறியர்கள் பள்ளிவாசல் வளாகத்தை விட்டு வெளியேறினர்.

"பள்ளிவாசலுக்கு எவ்வித சேதமும் இல்லாமல் பாதுகாத்து விட்டோம். அதன் வளாகத்துக்குள் நுழைய முயன்ற நிர்மாண சேவகர்கள் விரட்டப்பட்டனர்" என்று வானொளி, வானொலி மூலம் வி.பி.சிங்கும், முலயாம் சிங்கும் புளுகினர். போலிக் கம்யூனிஸ்டுத் தலைவர்கள் அவர்களைப் பாராட்டினர்; முஸ்லீம் தலைவர்கள் நன்றி தெரிவித்தனர்.

ஆனால் அயோத்தியிலேயே பஞ்சகோசி சர்வதேச செய்தி நிறுவனம் என்கிற இந்து மதவெறியர்களின் அமைப்பு ஒலி - ஒளி அஞ்சல் மூலம் லண்டன், நியூயார்க் போன்ற நகரங்களில் உள்ள வானொலி, வானொளி செய்தி நிறுவனங்களுக்குத் தகவல் அனுப்பியது. மூன்று குவிமாடங்கள் தகர்க்கப்படுவதை பி.பி.சி. அறிவித்தது; அடுத்தநாள் படத்துடன் செய்திகள் வந்தன. இடிப்பு வேலையைத் தடுக்க முடியாமல் போனதற்கு வி.பி.சிங் - முலயாம்சிங் நிர்வாகத்தைக் கண்டிப்பதற்குப் பதில் செய்தி வெளியிட்ட, பத்திரிக்கைகள் மீதுதான் போலி கம்யூனிஸ்டுகள் முதலானவர்கள் பாய்ந்தனர்.



மசூதி மீது தாக்குதல் முடிந்த பிறகு, இந்து வெறிப் பண்டாரம் அளிக்கும் பிரசாதத்தை பயபக்தியுடன் வாங்கிக் கொள்ளும் போலீசு.

பள்ளிவாசலின் மீது தாக்குதல் நடந்தபோது தலையிட்டுக் காக்கும்படி இராணுவத்தைச் சில அதிகாரிகள் அணுகிய போது அது மறுத்துவிட்டது. மீண்டும் வரும் தாக்குதலைத் தவிர்ப்பதற்காக உ.பி. ஆயுதப் போலீசுப்படை அகற்றப்பட்டு தமிழ்நாடு சிறப்புக் காவல்படை நிறுத்தப்பட்டது.

பள்ளிவாசலைத் தகர்த்த செய்தி அறிந்ததும் அயோத்தி, பைசாபாத் நகரங்கள் மட்டுமல்லாது டெல்லி, பாட்னா, அகமதாபாத், ஜெய்ப்பூர், ஐதராபாத் எனப் பலநகரங்களிலும் தீபமேற்றி, பட்டாசு வெடித்து, மத்தாப்புக் கொளுத்தி, இனிப்பு வழங்கிக் கூத்தாடினார்கள் இந்துமத வெறியர்கள். "அயோத்தியில் 100க்கும் மேற்பட்ட துறவிகளும், சேவகர்களும் கொல்லப்பட்டு ரத்தவெள்ளம் ஓடியது!" என்று நாடு முழுவதும் வதந்தியைப் பரப்பிய ஆர்.எஸ்.எஸ். பல நகரங்களில் மதவெறிப் படுகொலைகளை நடத்தியது. "பாரத் பந்த்" நடத்தி கலவரங்களைத் துவக்கி வைத்தது.

உ.பி, ம.பி. பீகார், குஜராத், ராஜஸ்தான், ஆந்திரா என பல மாநிலங்களின் நகரங்களில் இராணுவம் நிர்வாகத்தை மேற்கொண்டது. இருந்தபோதும் கலவரங்கள் தொடர்கின்றன. ஒரே வாரத்தில் 1500க்கும் மேற்பட்டவர்கள் மதவெறியர்களால் கொல்லப்பட்டனர்.

வெற்றியைக் கொண்டாடும் முகமாக அயோத்தியில் பெரும் யாகம் நடத்தப்பட்டது; ஆர்.எஸ்.எஸ். - முலயாம்சிங் பேச்சு வார்த்தைக்குப் பிறகு, பள்ளிவாசலுக்குள் உள்ள ராமர் சிலையைத் தரிசிப்பதற்கும், பூசிப்பதற்கும் நிர்மாண சேவகர்கள் அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு அவர்கள் 'உரிமை' அங்கீகரிக்கப்பட்டு, மதவெறியேற்றி திரும்பவும் பிரச்சாரம் செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

ராமர்கோவில் கட்டுவது புனிதமான தெய்வீக நோக்கத்துக்காக அல்ல; அடுத்த தேர்தலில் மத்திய அரசைக் கைப்பற்றும் நோக்கத்துக்காகத்தான் என்பதை ஆர்.எஸ்.எஸ்., வி.இ.ப. மற்றும் பாரதீய ஜனதாக் கட்சியினர் பகிரங்கமாகவே ஒப்புக் கொள்கின்றனர். ஆனால் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கை - விருப்பம், இந்து தேசிய ஒருமைப்பாடு, உண்மையான மதச்சார்பின்மை என்கிற முழக்கங்கள் வைத்து முலாம் பூசுகின்றனர்.

மதச்சார்பின்மை லட்சியத்துக்காகப் பதவியைத் தியாகம் செய்தேன் என்று இப்போது கதறும் வி.பி.சிங் வாக்களித்தபடி இந்துமத வெறியர்களின் தாக்குதலில் இருந்து பள்ளிவாசலைப் பாதுகாக்கத் தவறிவிட்டார். அதுமட்டுமல்ல, கடைசி நிமிடம் வரைப் பதவியைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இந்துமத வெறியர்களிடமும், ஓட்டு வங்கியை உறுதிப்படுத்தக் கொள்வதற்காக முஸ்லீம் மதவாதத் தலைவர்களிடமும் மாறி மாறிப் பேரங்கள் நடத்தினார்.

வி.பி.சிங்கின் கையாலாகத்தனம் பற்றி மட்டுமே பேசும் ராஜீவ் - சந்திரசேகர் - தேவிலால் கூட்டு கும்பல், அயோத்தி விவகாரம் தோன்றியது முதல் எந்த ஒரு நிலைப்பாடும் எடுக்கவில்லை. நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சியைப் பிடிப்பதிலேயே குறியாக இருந்து சாதித்துக் கொண்டது.

ஆர்.எஸ்.எஸ். பாரதீய ஜனதா முதலிய பகிரங்கமான இந்து மதவெறி அமைப்புகள் தவிர போலிக் கம்யூனிஸ்டுகள் உட்பட அனைத்துக் கட்சிகளுமே அவற்றுக்கு விட்டுக் கொடுத்துப் போகவே விழைகின்றன. ராமர் பிறந்த இடம், அங்கிருந்த கோவிலைப் பாபர் இடித்து மசூதி கட்டினார் என்பதற்கு அணுவளவு கூட ஆதாரம் இல்லை. இருந்தாலும் ராமனுக்குக் கோவில் கட்டும் இந்துக்களின் விருப்பத்தை மதிப்பதாக இக்கட்சிகள் கூறுகின்றன. விவகாரம் அதுவா? பள்ளிவாசலை இடிக்கவேண்டும்; அது தான் ராமன் பிறந்த இடம்; முஸ்லீம் மதவெறி மன்னர்கள் இந்துக்கோவில்களைத் தகர்த்து, மசூதிகளைக் கட்டினர் என்று மதவெறி ஏற்றுவது; அதன் மூலம் இந்து மதவெறி பாசிசத்தை நிறுவுவதற்கு வழிவகுப்பதுதானே! அதை முறியடிப்பதற்கு என்ன தீர்வு வைக்கிறார்கள்?

எவ்வித ஆதாரமுமின்றி ஒரு விவகாரத்தை இந்து மதவெறியர்கள் கிளப்பியதும் பள்ளிவாசலை முஸ்லீம்களிடம் இருந்து பிடுங்கி, இந்து - முஸ்லீம் நினைவுச் சின்னமாக்கும்படியும் இந்த மதச்சார்பின்மை வேடதாரிகள் கோருகின்றனர். இது இந்து மதவெறி பாசிசத்துக்கு விட்டுக் கொடுக்கும் முதல் காரியமாக இருக்கும். பிறகு இது தொடரும்.

இவை அனைத்தையும் விட முக்கியமான இந்திய அரசு எந்திரத்தின் சக்தி வாய்ந்த ஒரு பெரும்பகுதி இந்து மதவெறியின் ஆயுதமாக உள்ளது. இந்து மதவெறி பாசிசத்தின் இறுதி வெற்றிக்கு இது நிச்சயமாகப் பயன்படும். ஆகவே நாடாளுமன்றத் தேர்தல் அரசியலுக்குள் அவர்கள் நடத்தும் போராட்டத்தின் மூலம் இந்துமத வெறி பாசிசத்தை முறியடிக்க முடியாது.

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# அவதூறுகளையே விமர்சனங்களாக அடுக்கும் வீரமணி கும்பல்

திராவிடர் கழகத்தின் 'உண்மை' ஏடு கடந்த செப்டம்பர் (1-30) இதழில் 'புதிய ஜனநாயகத்திற்கு மறுப்பு!' என்கிற அட்டைக் கட்டுரை எழுதியுள்ளது. இதையே 'மார்க்சிய லெனினியக் குழுவிற்கு மறுப்பு' என்கிற விளம்பரத் துண்டிலும் அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

'உண்மை' - 'கேடயம்' ஆகிய இரு ஏடுகளும் நடத்தி வந்த வாதப்பிரதிவாதத்தில் பெரியார் ஈ.வெ.ரா. மீதான அவதூறுக் கருத்தொன்றைக் 'கேடயம்' எழுதியிருந்தது. அதற்குப் பதிலளிப்பதாகக் கூறிக் கொண்டு மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர் மீது அவதூறுச் சேற்றைவாரி இறைத்திருந்தது (1-15 மே 90) உண்மை ஏடு. அதை 'மார்க்சிய - லெனினிய ஆசான்கள் மீது தி.க.வின் வக்கிரம்' என்று மறுத்து புதிய ஜனநாயகம் (16-30 ஜூன் 90) இதழில் எழுதியிருந்தோம். அதைப் 'பார்ப்பனத்தனமான புதிய ஜனநாயக விமர்சனம்' என்று முத்திரை குத்தி மறுப்பு எழுதியுள்ளது, செப்டம்பர் 'உண்மை' ஏடு.

பகுத்தறிவையும், சுயமரியாதையையும் வீரமணி கும்பலிடம் அடகு வைத்துவிட்ட பிழைப்புவாதக் கூட்டமே பெரும்பாலும் இப்போது தி.க.வில் எஞ்சியுள்ளது. அதுவும் வாதப் பிரதிவாதங்களுக்குள் புகுந்து உண்மையை அறிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக 'பார்ப்பனத்தனமான புதிய ஜனநாயக விமர்சனம்' என்று முத்திரை குத்திவிடும் மூடத்தனமான முயற்சியில் இறங்கியிருக்கிறது 'உண்மை' ஏடு. ஆனால் அதன் உள்ளே இருப்பதெல்லாம் வெறும் புரட்டுத்தான்!

### கொள்கைப் போருக்குப் பயந்து ஓடியது யார்?

'புதிய ஜனநாயகத்திற்கு மறுப்பு' எழுதிய 'உண்மை' ஏடு ஒரு முன்னுரை எழுதியுள்ளது. அதில் ('கேடயம்' - 'உண்மை' ஆகிய இரு ஏடுகளிடையே) "1989 தொடங்கி 1990 வரை நடந்து வரும் கொள்கை ரீதியிலான இப்போராட்டத்தில் (இப்போது இந்த விவகாரத்துக்குள்ளே புகுந்து அலசுவது எமதுநோக்கமல்ல என்று கூறும்) புதிய ஜனநாயகம் எப்போதுதான் 'புகுந்து' அலசப் போகிறது? 'உண்மை' முன்வைத்த கேள்விகளுக்கு 'கேடயம்' பதில் சொல்லவில்லை என்பதை 'உண்மை' சுட்டிக் காட்டியுள்ளது. 'கேடயம்' பதில் தர முடியாத 'உண்மை'யின் கேள்விகளுக்கு இதோ! நாங்கள் கொள்கை ரீதியிலான விளக்கங்களைத் தருகிறோம் என்று சொல்லி 'புதிய ஜனநாயகம்' முன்வந்திருந்தால் அதன் அறிவு நாணயத்தை, நாம் பாராட்டலாம்" என்று எழுதியுள்ளது. அதன் மூலம் கொள்கைப் போருக்குப் பயந்துவிட்ட அறிவு நாணயமற்றது 'புதிய ஜனநாயகம்' என்கிறது.

தி.க.வில் எஞ்சியுள்ள ஒரு சில பகுத்தறிவாளர்களின் பார்வைக்கு இங்கே சில உண்மை விவரங்களை வைக்கிறோம். 'உண்மை' ஏட்டிற்கா? 'புதிய ஜனநாயகத்'திற்கா? யாருக்குத் துணிவும், அறிவு நாணயமும் இல்லை என்பதை அவர்களே தீர்மானிக்கட்டும்.

1984 துவக்கத்தில் திராவிடர் இயக்கத்தை விமர்சித்து நமது தோழமை ஏடான 'புதிய கலாச்சார'த்தில் சில கட்டுரைகள் எழுதினோம். அவற்றுக்குப் பதிலளித்தும், எதிர் விமர்சனங்கள் தொடுத்தும், புத்திமதிகள் சொல்லியும் மதுரை பெரியார் பண்பாட்டுக் கழகத்தினர் ஒரு கடிதம் எழுதினர். 1984 ஏப்ரல் 'புதிய கலாச்சாரம்' ஏட்டில் அதைப் பிரசுரித்தோம். 1984 மே இதழில் பதிலும் எழுதினோம்.

பிறகு பெ.ப.க.வினர் பதில்களும் எதிர் கேள்விகளும் எழுதினர். நீண்டதாயிருந்த அக்கட்டுரையை அவர்கள் சார்ந்துள்ள தி.க. ஏடுகளில் வெளியிடுங்கள்; புதிய கலாச்சாரத்தில் பதில் எழுதுகிறோம் என்று பதிலளித்தோம். அதை ஏற்கும் வகையில் 1984 நவம்பரில், "மார்க்சிய - லெனினியக் குழு எழுப்பும் - மயக்கும் வினாக்களுக்குத் திட்டவட்டமான பதில்" என்று மூன்று நாள் தொடர் கட்டுரையை 'விடுதலை' பிரசுரித்தது.

அதற்கு "திராவிடர் இயக்கத்துடன் தொடரும் விவாதங்கள்" என்று 1984 டிசம்பர் புதிய கலாச்சாரத்தில் எழுதினோம். ஏறக்குறைய ஆறு ஆண்டுகளாகின்றன. தி.க. மற்றும் அதன் சார்பு அமைப்புகளிடமிருந்தோ, அவற்றின் ஏடுகளிலோ பதில் கிடையாது.

**ஏற்கனவே அச்சிடப்பட்ட கட்டுரைகளை முழுமையாக மீண்டும் நமது ஏட்டில் அச்சிடுவதுதான் துணிவும், அரசியல் நாணயமும் உள்ள செயல் என்கிறது 'உண்மை'. இது வீரமணி கும்பலிடம் உள்ள துணிவையும், அரசியல் நாணயத்தையும் குறிக்கவில்லை. பெரியார் ஈ.வெ.ரா. சேர்த்து வைத்து விட்டுப் போன சொத்தை அனுபவிக்கும் அகங்காரம் - திமிரைத்தான் காட்டுகிறது.**

கொள்கைப் போருக்குப் பயந்துவிட்ட, அறிவு நாணயமற்றவர்கள் யார்?

1981 பகுத்தறிவாளர் நாட்குறிப்பில் 'மார்க்சிய - லெனினியக் குழுக்களில் உள்ள பார்ப்பனரல்லாதார் சிந்தனைக்கு' என்ற கட்டுரை வெளியிட்டனர். அதிலே பழைய வாதங்கள் தாம் வைக்கப்பட்டிருந்தனவே ஒழிய 1984 டிசம்பர் புதிய கலாச்சாரத்தில் எழுப்பியிருந்த கேள்விகளுக்குப் பதில் இல்லை. 1988 ஜனவரி கேடயம் ஏடு 'தி.க.வில் உள்ள பகுத்தறிவாளர் சிந்தனைக்கு' என்ற கட்டுரை எழுதியது. அதைத் தொடர்ந்து "மார்க்சிய - லெனினியக் குழுக்களுக்கு ஒரு அறைகூவல்" என்கிற அட்டைக் கட்டுரை எழுதியது, 1988 மே மாத உண்மை.

இதைத் தொடர்ந்து 16-31 மே 88 'புதிய ஜனநாயகம்' ஏட்டில் 'உண்மை' ஏட்டிற்கு ஒரு சவால்! என்கிற பதிலை எழுதினோம். 'கேடயம்' ஏடு 1988 ஜூன் முதல் 1989 ஜனவரி வரை 'மார்க்சியமா? பெரியாரியமா?' என்கிற தொடர் கட்டுரை வெளியிட்டு, அதை ஒரு நூலாகவும் வெளியிட்டது. 1990 ஏப்ரல் - மே இதழ்களில் 'கேடயம்' ஏட்டிற்கு பதில் எழுதிய 'உண்மை' இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே 'புதிய ஜனநாயகம்' எழுதிய 'உண்மை' ஏட்டிற்கு ஒரு சவாலுக்கு பதில் எழுதவே இல்லை. 'உண்மை'க்கு இது தெரியாமலும் இல்லை. தெரிந்தும், புதிய ஜனநாயகம் ('88 மே) எழுதியுள்ளது என்று ஒருவரி குறிப்பிட்டு விட்டு கேடயத்துக்கு மட்டுமே பதில் எழுதியது. அப்படியிருக்கும் போது கொள்கைப் போருக்குப் பயந்துவிட்ட, அறிவு நாணயமற்றவர்கள் யார்?

ஆக, 1984 டிசம்பரில் 'புதிய கலாச்சாரம்' எழுப்பியிருந்த கேள்விகளுக்கு ஒரு முறையும், 1988 மேயில் 'புதிய ஜனநாயகம்' எழுப்பியிருந்த கேள்விகளுக்கு இன்னொரு முறையும் பதிலளிக்கப் பயந்து ஓடிவிட்ட தி.க.க்காரர்கள் 1987 முதல் '90 வரை நடத்தி வரும் கொள்கைப் போரில் புதிய ஜனநாயகம் எப்போது 'புகுந்து' அலசப் போகிறது என்று கேட்கிறார்கள். கொள்கைத் தெளிவும் துணிவும், அறிவு நாணயமும் தி.க.வுக்கு இருந்தால் நாம் ஏற்கனவே எழுப்பியுள்ள கேள்விகளுக்குப் பதில் சொல்லட்டும்.

மார்க்சிய - லெனினியக் குழுக்களுக்கு சவாலும் அறைகூவலும் விடும் தி.க.காரர்களைக் கேட்கிறோம்: முன்பு மயிலாடுதுறை இராமதாஸ், பின்பு கோவை கு.இராமகிருஷ்ணன், இப்போது நாகரசம்பட்டி சம்பந்தம் ஆகிய தி.க.க்காரர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு எதாவது, எப்போதாவது பதில் சொல்வதற்கு வீரமணி கும்பலுக்கு துணிவும், அறிவு நாணயமும் இருக்கிறதா?



படிப்பகம்

www.padippakam.com

## பெரியார் சேர்த்து வைத்த சொத்தை அனுபவிக்கும் அகங்காரம்

'கேடயம்' 'புதிய ஜனநாயகம்' ஆகிய ஏடுகளில் வரும் விமர்சனக் கட்டுரைகளை 'உண்மை' அப்படியே வெளியிடுகிறது. அதேபோல நாட்குறிப்பு கட்டுரை மற்றும் 'உண்மை' எழுதும் மறுப்பு கட்டுரைகளை 'கேடயம்', 'புதிய ஜனநாயகம்' ஆகிய ஏடுகள் வெளியிடுவதில்லை. 'உண்மை' காட்டிய வழியில் அதாவது விமர்சனத்துக்கு உட்படுத்தும் கட்டுரையை அப்படியே வெளியிட்டு பதில் சொல்லும் போக்கைப் பின்பற்றப் பயந்து விட்டோம் என்றும், இது அறிவு நாணயமற்ற செயல் என்றும் 'உண்மை' ஏடு எழுதுகிறது.

வீரமணி கும்பலிடம் கேட்கிறோம். பெரியார் பண்பாட்டுக் கழகத்தின் கடிதத்தை அப்படியே வெளியிட்டு, புதிய கலாச்சாரம் எழுதிய மறுப்புக் கட்டுரையை வெளியிட்டு 'விடுதலை' ஏடு பதில் எழுதத் துணியவில்லையே, அது ஏன்? '88 மே, 'உணமை' விடுத்த 'மார்க்சிய - லெனினியக் குழுக்களுக்கு ஒரு அறைகூவலு'க்குப் 'புதிய ஜனநாயகம்' எழுதிய மறுப்பையும், 'கேடயம்' எழுதிய 'மார்க்சியமா? பெரியாரியமா?' என்கிற தொடரையும் 'உண்மை' ஏடு வெளியிடவே இல்லையே, அது ஏன்?

புதிய ஜனநாகமும், கேடயமும் அவ்வாறு செய்யவில்லை என்பதற்காக, 'உண்மை' ஏடு தானே காட்டிய வழியில் இருந்து விலகிப் போவதுதான் துணிவும் அறிவு நாணயமும் உள்ள செயலா? விமர்சனத்துக்கு உட்படுத்தும் கட்டுரையை அப்படியே வெளியிட்டுப் பதில் சொல்லத் தயாரா என்று ஒரு பக்கத்தில் ஒன்பது முறை சவால் விடும் 'உண்மை'யும் அதன் மூலமான 'விடுதலை'யும் அவ்வாறுதான் எல்லா விவகாரங்களிலும் செய்து வருகிறதா? நாகரசம்பட்டி சம்பந்தம் ஜூனியர் விகடனில் எழுதும் தொடர் கட்டுரையை அப்படியே வெளியிட்டுப் பதில் சொல்லும் அறிவு நாணயத்தை 'உண்மை'யும், 'விடுதலை'யும் இனிமேலாவது கடைப்பிடிக்குமா?

ஆனால் விமர்சனத்துக்கு உட்படுத்தும் கட்டுரையை அப்படியே வெளியிட்டுத்தான் பதில் சொல்ல வேண்டும் என்பது துணிவுக்கும் அறிவு நாணயத்துக்குமான அளவுகோலாக நாங்கள் கருதவில்லை. விமர்சனத்துக்கு உட்படுத்தும் மாற்று தரப்பின் தேவையான வாதப் பகுதிகளை மேற்கோள் காட்டுவதும், அவ்வாறு செய்யும் போது பொருளை மாற்றிவிடும் வகையில் வெட்டியோ, குறுக்கியோ மேற்கோள் காட்டக்கூடாது என்பதும்தான் பொது மரபாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. வெவ்வேறு அமைப்புகளுக்கிடையே கொள்கைப்போர் நடக்கையில் அதனதன் வாதங்கள் - விமர்சனங்களை அதனதன் ஏடுகளில் வெளியிடுவதுதான் சாத்தியமானது, முறையானது. எதிர்த்தரப்பு தனது கருத்துக்களை வெளியிட வாய்ப்பில்லாத போதுதான் அவற்றை அச்சிடுவது அவசியமாகிறது; அப்போதும் எதிர்த்தரப்பு தனது கொள்கைப் பிரச்சாரத்துக்கான மேடையாக மாற்று அமைப்பின் ஏட்டைப் பயன்படுத்த முயன்றால் அதற்கு இடந்தர முடியாது.

இந்த நியாயமான அணுகுமுறைக்கு மாறாக ஏற்கனவே அச்சிடப்பட்ட கட்டுரைகளை முழுமையாக மீண்டும் நமது ஏட்டில் அச்சிடுவதுதான் துணிவும், அரசியல் நாணயமும் உள்ள செயல் என்கிறது. இது வீரமணி கும்பலிடம் உள்ள துணிவையும், அரசியல் நாணயத்தையும் குறிக்கவில்லை. பெரியார் ஈ.வெ.ரா. சேர்த்துவைத்து விட்டுப் போன சொத்தை அனுபவிக்கும் அகங்காரம் - திமிரைத்தான் காட்டுகிறது. இரண்டு ரூபாய்க்கு பலவண்ண அட்டையுடன் 36, 40, சில சமயம் 50 பக்கங்கள் அளவுக்கு அச்சிட்டுத் தரும் வீரமணி கும்பலிடம் இருக்கும் மிதப்பிலே இந்தச் சவால் வருகிறது. 'புதிய ஜனநாயகம்' போன்ற புரட்சிகர ஏட்டிற்கு அத்தகு சொத்தோ, வசதியோ கிடையாது என்பதையும் அறிந்தே வீரமணி கும்பல் குதிக்கிறது. எனவேதான் கொள்கை விவகாரங்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு மறு அச்சிடுவது பற்றி மீண்டும் மீண்டும் சவடால் அடிக்கிறது.

### மார்க்சிய - லெனினிய ஆசான்கள் மீது 'உண்மை' ஏடு எழுதியது அவதூறுதான்!

''அவர் (பெரியார்) மிகப்பெரிய பார்ப்பனரல்லாத தனவந்த குடும்பத்தில் பிறந்தார். மிகப் பெரிய தனவந்தராகவே இறுதி வரையில் வாழ்ந்தார்'' என்று கேடயம் எழுதியது. இது அக்குழுவின் கருத்துத் தானே தவிர மார்க்சிய லெனினியக் குழுக்களின் கருத்து அல்லவென்பது 'உண்மை' ஏட்டிற்குத் தெரியும்.

**இருந்தும் கேடயத்துக்குப் பதில் சொல்வதாகப் புறப்பட்டு மார்க்சிய - லெனினிய** ஆசான்களுக்கு எதிரான வக்கிரமான அவதூறுகளில் 'உண்மை' ஏடு இறங்கியதைத் தான் 'புதிய ஜனநாயகம்' மறுத்து எழுதியது. ஆனால் 'உண்மை' ஏடு எழுதாததைப் 'புதிய ஜனநாயகம்' கற்பித்து எழுதியதாகவும், அது தெரிவித்த ஆதாரத்தை சரியாகப் படிக்காமல் அதாவது உரிய அளவுக்கு உழைக்காமல் பதில் சொல்லுவதாகவும் 'உண்மை' ஏடு எழுதுகிறது. இதனால், 'புதிய ஜனநாயகம்' எழுதியவை பார்ப்பனத்தனமான விமர்சனம் என்கிறது. புதிய ஜனநாயகத்தின் திருத்தல் வாதம் ஒன்று, இரண்டு, மூன்று... என வரிசைப் படுத்துகிறது. எது பார்ப்பனத்தனம்? எது திருத்தல் வாதம்? 'உண்மை' ஏடு எழுதியது வக்கிரமான அவதூறா? இல்லையா? என்பதை இனிப் பார்ப்போம்.

1 - 30 செப்டம்பர் உண்மை ஏடு - இப்போது பின்வருமாறு எழுதுகிறது: ''கார்ல் மார்க்சின் புகைப்பிடிக்கும் மற்றும் குடிப் பழக்கங்கள், அவரைத் தீவிரவகை புகைப்பிடிப்பாளாரகவும், பெருங் குடிகாரராகவும் கருதும் அளவுக்கு இருந்ததாக 'உண்மை' ஏடு சொல்லவில்லை. அவரைக் குடிகாரர் என்று முத்திரையும் குத்தவில்லை. '' ''முதலில் குடிபோதையில் உள்ள அளவு வேறுபாடுகள் குறித்தும் எந்தக் கட்டத்தில் நிதானம் இழக்கப்படும் என்பது பற்றியும் ஆராய்ச்சி முடிவுகள் பற்றிக் கணக்கில் கொள்ளாமல் கார்ல் மார்க்சின் குடிப்பழக்கம் அவரை குடிகாரர் (DRUNKARD) என்று கருதும் அளவுக்கு இருந்ததாக 'உண்மை' கூறியதாக 'கற்பனை' செய்து அவசரத்தில் இப்படி எழுதியுள்ளது, புதிய ஜனநாயகம்.''

ஆனால் 'புதிய ஜனநாயகம்'' விமர்சனத்துள்ளாக்கிய கட்டுரையில் இதே 'உண்மை' ஏடு என்ன எழுதியிருந்தது?

''தனது வறுமையான வாழ்வு நிலையிலும், கார்ல் மார்க்ஸ் குடிப்பதையும், புகைபிடிப்பதையும் நிறுத்தியது கிடையாது.



மார்க்ஸ் - எங்கெல்ஸ்; மார்க்சின் புதல்விகளான ஜென்னி, எலியனோர், லௌராவுடன் (1860-'70ம் ஆண்டுகளில்)

''1988 மே மாதத்திலேயே 'உண்மை' ஏட்டிற்கு ஒரு சவால் என்ற கட்டுரையை 'புதிய ஜனநாயகம்' எழுதியிருந்தும் இதுவரை பதில் எழுதவில்லை. இவ்வாறு உரிய அளவுக்கு உழைக்காமல் - அதுவும் சம்பளத்துக்கு வேலை செய்யும் - 'உண்மை' குழுவை பார்ப்பனத்தனமாக எழுதுகிறது என்று கூறலாமா?''



படிப்பகம்

www.padippakam.com

**தி.க.வில் எஞ்சியுள்ள ஒரு சில பகுத்தறிவாளர்களின் பார்வைக்கு இங்கே சில உண்மை விவரங்களை வைக்கிறோம். 'உண்மை' ஏட்டிற்கா? 'புதிய ஜனநாயகத்'திற்காக? யாருக்குத் துணிவும், அறிவு நாணயமும் இல்லை என்பதை அவர்களே தீர்மானிக்கட்டும்.**

புகை பிடித்துக் கொண்டும் குடித்துக் கொண்டும் இரவு முழுவதும் கண்விழித்து கார்ல் மார்க்சும் - எங்கல்சும் பேசுவார்கள் என்பதை MARX - ENGELS : THROUGH THE EYES OF THEIR CONTEMPORARYES எனும் நூலில் பக்கம் 46-இல் கார்ல் மார்க்சின் மருமகன் 'பால் லாபர்க்' தெரிவிக்கிறார். இத்தகைய போதைப் பழக்கங்கள் நிச்சயமாக பெரியாருக்குக் கிடையாது'' என்று தான் 1- 15 மே 'உண்மை' ஏடு எழுதியது.

இங்கே ''புகைத்துக் கொண்டும் குடித்துக் கொண்டும் இரவு முழுவதும் கண்விழித்துப் பேசிய''தாகவும், ''போதைப் பழக்கம்'' என்றும் உண்மை ஏடு எழுதியதற்கு என்ன பொருள்? மார்க்ஸை தீவிரவகைப் புகைப்பிடிப்பவராகவும், பெருங் குடிகாரராகவும், முத்திரை குத்தி அவதூறு செய்வதைத் தவிர வேறென்ன? குடிபோதையில் உள்ள அளவு வேறுபாடு, நிதானம் இழக்கும் கட்டம் பற்றிய ஆராய்ச்சி முடிவுகளை வைத்து தான் அப்போது 'உண்மை' ஏடு எழுதியதா? இல்லையே! ஆகவே புதிய ஜனநாயகம் எதையும் கற்பனை செய்யவில்லை. 'உண்மை' ஏடு எழுதியது - எழுதுவதுதான் வக்கிரமான அவதூறாகும்.

''உண்மை' கட்டுரையில் கார்ல் மார்க்சைக் 'காமவெறியன்' என்று எந்த இடத்திலும் சித்தரிக்கவில்லை. சமூகப் பொறுப்பின்மை என்பது வேறு, 'காம வெறியன்' என்பது வேறு. மார்க்ஸ் - ஜென்னி உறவைக் கேவலப்படுத்துவது வேறு'' என்று இப்போது (1 - 30 செப்.) 'உண்மை' ஏடு எழுதுகிறது.

ஆனால், 'புதிய ஜனநாயகம்' விமர்சனத்துக்கு உள்ளாக்கிய கட்டுரையில் இதே 'உண்மை' ஏடு என்ன எழுதியிருந்தது?

''தனது வறுமையான நிலையிலும் உணவிற்காக, ரொட்டித் துண்டிற்காக துயரப்பட்ட போதும், மார்க்ஸ் தனது பாலுணர்வுத் தேவைகளை சமூகப் பொறுப்பின்றி நிறைவு செய்து அடுக்கடுக்காக குழந்தைகளுக்கு தந்தை ஆகிக் கொண்டிருந்தார்'' என்றுதான் 1-15 மே 'உண்மை' ஏடு எழுதியிருந்தது.

இங்கே ''பாலுணர்வுத் தேவைகளை சமூகப் பொறுப்பின்றி நிறைவு செய்து அடுக்கடுக்காக குழந்தைகள்'' பெற்றார் என்று 'உண்மை' ஏடு எழுதியதற்கு என்ன பொருள்? மார்க்சைக் ''காமவெறியன்'' என்று சித்தரிப்பதாகாதா? இப்படிச் சித்தரித்ததற்கு 'உண்மை' ஏடு பொறுப்பாகாதா? புதிய ஜனநாயகத்தின் பார்வைக் கோளாறு தான் காரணமா?

எங்கல்சின் வாழ்க்கை பற்றி 1-15 மே 'உண்மை' கட்டுரை வெளியிட்ட தகவல்கள் 1845க்கு முன் நடந்தவை என்றும் 'உண்மை' அதனை 1845க்குப் பிறகு நடந்ததாகக் குழப்புவதாகவும் 'புதிய ஜனநாயகம்' உண்மைக்குப் புறம்பாக திருத்தல்வாதம் செய்துள்ளது என்று இப்போது 'உண்மை' ஏடு எழுதுகிறது. மான்செஸ்டரில் 1864 - '70 கால கட்டத்தில் 'முதலாளித்துவ சாகசங்கள்' புரிந்த எங்கல்சின் வாழ்க்கை பற்றி 'உண்மை' ஏடு எழுதிய ஆதாரத்தை சரியாகப் படிக்காமல் பார்ப்பனத்தனமாக (அதாவது உரிய அளவுக்கு உழைக்காமல்) 'புதிய ஜனநாயகம்' பதில் சொல்ல வந்துள்ளது என்றும் சாடுகிறது.

1845க்குப் பிறகு அதாவது 1864 - '70 காலகட்டத்தில் மான்செஸ்டரில் எங்கல்ஸ் வாழ்க்கை பற்றியது தான் 1-15 மே 'உண்மை' ஏடு எழுதியது. இதை 1845 ஆண்டுக்கு முந்தியது என்று 'புதிய ஜனநாயகம்' குறிப்பிட்டு 'உண்மை' ஏடு குழப்பியது என்று எழுதியதும் தவறுதான். அதற்காக நாம் சுய விமர்சனம் ஏற்கிறோம். ஆனால் இத்தவறு எங்கல்ஸ் மீதான 'உண்மை' ஏட்டின் அவதூறை எந்த வகையிலும் நியாயப்படுத்தி விடவில்லை.

ஆதாரத்தைச் சரியாகப் படிக்காமல் (அதாவது உரிய அளவுக்கு உழைக்காமல்) தவறு செய்து விட்டதென்று 'உண்மை' ஏடு முத்திரை குத்துவது போல பார்ப்பனத்தனமாகி விடுமா? இதே 1-30 செப். 'உண்மை' ஏடு ''ஒரு பணக்கார நண்பர் தனது ஏழை நண்பருக்கு உதவியது போல்தான் எங்கல்ஸ், கார்ல் மார்க்சுக்கு புரிந்த உதவியின் உள்ளடக்கம் அமைந்திருந்தது'' என்று எழுதுகிறது.

ஆனால் 'உண்மை' ஏடு குறிப்பிடும் ஆதாரத்திலேயே மார்க்சின் மருமகன் பால் லாபர்க் பின்வருமாறு எழுதியுள்ளார், ''பணம் அறிவு - எல்லாம் அவர்களுக்கிடையில் பொதுவாகவே இருந்தன'' இவ்வாறு குறிப்பிடும் பால் லாபர்க் ஒருவர் மற்றவரது ஆய்வுரைகளை எடுத்து தமது நூலில் சேர்த்துக் கொண்டதாக எழுதுகிறார். மேலும், ''மார்க்சின் குடும்பம் முழுவதற்கும் எங்கல்ஸ் தமது நட்பை விரிவுபடுத்தினார். மார்க்சின் புதல்விகள் அவருக்குச் சொந்தக் குழந்தைகள் போல இருந்தார்கள். சித்தப்பா என்று அவர்கள் அவரை அழைத்தார்கள். இந்த நட்பு மார்க்சின் இறப்பிற்குப் பின்னும் நிலைத்து நீடித்தது'' என்றும் எழுதுகிறார்.

இதைச் சரியாகப் படிக்காமல் மார்க்ஸ் - எங்கல்ஸ் பண உறவை ஏழை - பணக்கார நண்பர்களுக்கு இடையிலான உள்ளடக்கம் கொண்டது என்று உண்மை ஏடு கொச்சைப் படுத்துகிறதே, அதற்காக 'உண்மை'யின் விமர்சனம் பார்ப்பனத் தனமானது எனக் கூறலாமா? 1988 மே மாதத்திலேயே 'உண்மை' ஏட்டிற்கு ஒரு சவால் என்ற கட்டுரையை 'புதிய ஜனநாயகம்' எழுதியிருந்தும் இதுவரை பதில் எழுதாதது மட்டுமல்ல, 1987 - '90 இல் கேடயம் - உண்மை ஏடுகளுக்கிடையே நடக்கும் கொள்கைப் போராட்டத்தில் புகுந்து எப்போது தான் அலசப் போகிறது என்று வேறு 'உண்மை' ஏடு கேட்கிறது. இவ்வாறு உரிய அளவுக்கு உழைக்காமல் - அதுவும் சம்பளத்துக்கு வேலை செய்யும் - 'உண்மை' ஆசிரியர் குழுவை பார்ப்பனத்தனமாக எழுதுகிறது என்று கூறலாமா?

எங்கல்சின் வாழ்க்கையைப் பொருத்தவரை 1845-ம் ஆண்டு ஒரு திருப்பு முனையாகும். 1841-42 ஆகிய ஓராண்டு பெர்லினில் இராணுவச் சேவையிலும், கல்வி பயில்வதிலும் செலவிட்டார். பிறகு 1842இல் இங்கிலாந்தில் குடியேறினார். மார்க்ஸ் எங்கல்ஸ் ஆகிய இருவரது குடும்பமும் வாழ்வதற்கே நிதியின்றித் தவித்தபோது, எங்கல்ஸ் தனது தந்தையின் தொழில் நிறுவனத்திலேயே எழுத்தராக வேலைக்குச் சேர்ந்தார். பிறகு அதே நிறுவனத்தின் பங்குதாரரானார். மான்செஸ்டரின் புறநகரில் ஒரு சிறுவீட்டில் குடும்பம் நடத்திய போதும், தொழில் காரணமாக முதலாளிகளுடன் கூட்டங்கள், விருந்துகள், விளையாட்டுக்களில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது.

1844ல் மார்க்சைச் சந்தித்துப் பழகினார். இதற்கிடையே ஆலைத் தொழிலாளர் குடியிருப்புகளில் அலைந்து திரிந்து அவர்களின் துன்ப துயரங்களைக் கண்டறிந்தும், பல்வேறு ஆவணங்களைப் படித்தும் 1845ல், ''இங்கிலாந்தில் 'தொழிலாளர் வர்க்கத்தின் நிலைமை'' என்கிற அரிய நூலை எழுதினார். ''இங்கிலாந்து வந்த பிறகுதான் எங்கல்ஸ் சோசலிஸ்ட் ஆனார். அதற்குமுன் இல்லை'' என்று லெனின் திட்டவட்டமாக எழுதுகிறார்.

எங்கல்ஸ் இங்கிலாந்தில் குடியேறி ஒரு சோசலிஸ்டாக மாறிய பிறகும் முதலாளி வாழ்க்கை, பழக்கங்களைக் கொண்டிருந்த போதும் அவற்றுக்கு எதிராகப் போராடி, விடுபடவே விரும்பினார். அந்த வாழ்க்கையை 1870இல் முற்றாகத் துறந்து சாகும்வரை அதாவது 26 ஆண்டுகள் முழு நேர புரட்சிகர அரசியல் வாழ்விலே ஈடுபட்டார். ஆகவே, எங்கல்சின் சமூகப்பின்னணி, வாழ்க்கை முழுவதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு முடிவுக்கு வருவதற்குப் பதில், அவர் தனது பணக்கார வாழ்வு நிலையிலிருந்து கொண்டே 'வர்க்கப் போராட்ட'த் தலைவராக விளங்கியது தெரிகிறது என்று 1-15 மே 'உண்மை' ஏடு எழுதியது.

பெரியார், பாரதிதாசன் போன்றவர்கள் ஆரம்ப காலத்தில் காங்கிரசில் இருந்தனர். பின்னாளில் திராவிட - பகுத்தறிவுவாதிகளாயினர். முன் பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டு 'இந்திய தேசியவாதிகள்' அவர்களது வாழ்க்கை வரலாற்றைப் புரட்டுவது எப்படியோ அப்படித்தான் எங்கல்ஸ் வாழ்க்கை பற்றியும் 'உண்மை' ஏடு புரட்டுகிறது.

(அடுத்த இதழில் தொடரும்)

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

இந்தியாவின் அண்டை நாடான, மன்னராட்சி நிலவும் பூடானில் துருப்கா எனும் புத்த மதத்தைச் சேர்ந்த பேரினவாதிகள், சிறுபான்மையினரான இந்து மதத்தைச் சேர்ந்த நேபாளி மக்கள் மீது அண்மைக் காலமாக இனவெறியைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். மன்னர் சிங்யீ-யின் பூடான் மயமாக்கும் திட்டப்படி, நீண்ட கூந்தல் வைத்திருக்கக் கூடாது என்று நேபாளி பெண்கள் சடை அறுக்கப்படுகிறது; நேபாளி மக்கள் தமது தாய்மொழியில் படிக்க பள்ளிகளில் உரிமையில்லை. இறந்தவர்களுக்கு இறுதிச்



சடங்கு நடத்தக்கூட அனுமதி மறுக்கப்படுகிறது. இவற்றுக்கெதிராகப் போராடும் நேபாளி மக்களை நாட்டை விட்டு ஓடுங்கள் என்று ராணுவம் விரட்டுகிறது. இதனால் ஆயிரக்கணக்கில் நேபாளி மக்கள் மே.வங்கத்தில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர். இந்நிலையில் மே.வங்க முதல்வர் ஜோதிபாசு, பூடான் மன்னரின் விருந்தினராகச் சென்று இந்திய மண்ணில் நேபாளி மக்களின் இன உரிமை போராட்ட நடவடிக்கைகளை ஒரு போதும் ஆதரிக்க மாட்டோம் என்று உறுதியளித்துவிட்டு வந்துள்ளார். போலிக் கம்யூனிஸ்டுகள் சமூக வெறியர்களாகச் சீரழிந்து விட்டதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

ஈராக்குக்கு எதிராக சௌதி அரேபியாவில் முற்றுகையிட்டுள்ள அமெரிக்க ராணுவம் பாலைவன வெப்பத்தில் தாக்குப் பிடிக்க முடியாமல் அடிக்கடி சோர்வடைந்து விடுகிறது. அமெரிக்க ஹெலிகாப்டர் விசிறிகளில் மணல் துகள்கள் சிக்கிக் கொள்வதால் தொடர்ந்து பழுதடைகின்றன. கடும் வெப்பத்தால் நுண்ணிய ராடார் கருவிகள் சரியாக இயங்குவதில்லை. வியட்நாம் போரைப் போல அமெரிக்க ராணுவம் பாலைவன முற்றுகைப் போரில் சிக்கிக் கொண்டு விட்டதாக அமெரிக்கப் பத்திரிக்கைகளே விமர்சிக்கின்றன. இந்நிலையில் போர்வெறி பிடித்த அமெரிக்கா மேலும் ஒரு லட்சம் துருப்புக்களையும் நவீன டாங்கிகளையும் வளைகுடாவில் கொண்டு போய் குவித்துள்ளது. இதனால் ஏற்படும் பொருளாதாரச் சுமை தம் மீது திணிக்கப்படுவதை எதிர்த்து அமெரிக்க மக்கள் தமது தேசியக் கொடியை எரித்து ஆர்ப்பாட்டங்களில் இறங்கி வருகின்றனர்.

இந்து ஓட்டுக்களை இழக்க விரும்பாமல் வகுப்புவாத எதிர்ப்பு நாடகமாடும் ஓட்டுக் கட்சிகள் சாதிக்க முடியாததை அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி [ULFA] ஒரு எச்சரிக்கை மூலம் சாதித்துள்ளது. இந்து வெறியன் அத்வானி கைது செய்யப்பட்டதும் வட மாநிலங்களில் பாரதீய ஜனதா கடையடைப்பு போராட்டத்தை நடத்திய போது, அசாம் பராக் பள்ளத்தாக்கில் ஹிலாகாந்தி எனுமிடத்தில் கலவரத்தைக் கட்டவிழ்த்துவிட முயற்சித்தது. அதைத் தொடர்ந்து அ.ஐ.வி.மு, ''அத்வானிக்கோ சகாபுதீனுக்கோ இங்கே இடமில்லை. ராம ஜென்ம பூமி விவகாரத்தைக் கிளறி அப்பாவி மக்களைப் பலியிட அசாமில் அனுமதிக்க முடியாது. விசுவ ஹிந்து பரிஷத் இங்கே வாலாட்டினால் அதன் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்'' என்று எச்சரித்து ஒரு ஆர்.எஸ்.எஸ். பிரமுகரைக் கடத்திச் சென்றது. ஆயுதமேந்தி நிற்கும் போராளி அமைப்பான அ.ஐ.வி.மு.யிடம் வாலாட்டினால் தீர்த்துக் கட்டி விடுவார்களே என்று பீதியடைந்த இந்து வெறியர்கள் ஆகஸ்ட் 29 அன்று கௌகாத்தியில் நடத்தவிருந்த பேரணியை ரத்து செய்துவிட்டு ஓடி ஒளிந்து கொண்டனர்.

''கோர்பச்சேவுக்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவருக்கு ஏராளமான பணம் கிடைக்கும். அவர் பெரும் பணக்காரராகி விடுவார். ஆனால் எங்களைப் போன்ற சாமானிய மக்களுக்கு என்ன கிடைக்கும்?'' என்று ரொட்டிக்காக ரேஷன் கடை முன்னே 2 மணிநேரம் கால்கடுக்க வரிசையில் நிற்கும் மாஸ்கோ நகரப் பெண்களே வேதனையுடன் கூறுகின்றனர். மாபெரும் சமூகப் புரட்சியை நடத்தியுள்ளதாக நோபல் பரிசு பெற்ற கோர்பியை உலகெங்குமுள்ள முதலாளித்துவ வாதிகள் பெருமையுடன் பாராட்டுகின்றனர். அவர்களது அகராதியில் சொந்த நாட்டு மக்களைப் பட்டினி போடுவதுதான் சமூகப் புரட்சி போலிருக்கிறது!

வளைகுடா நெருக்கடியைத் தொடர்ந்து பெட்ரோலை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு அரசு ஓயாமல் பிரச்சாரம் செய்த போதிலும் அதிகார வர்க்கம் இதைப் பொருட்டாக மதிப்பதில்லை. குறிப்பாக எண்ணெய் - எரிவாயுக் கமிஷனின் [ONGC] அதிகார வர்க்க ஒட்டுண்ணிக் கும்பல் எந்தக் கவலையுமின்றி நமது வரிப்பணத்தைப் பாழாக்கி வருகிறது. 200 கி.மீ. சாலை வழியே பயணம் செய்ய 4 மணி நேரமும் 250 ரூபாய் மதிப்புள்ள பெட்ரோலும்தான் செலவாகும். ஆனால் டோர்னியர் எனும் குட்டி விமானத்தில் ஒன்றரை மணி நேர வான்வழி விரைவுப் பயணத்தையே அதிகார வர்க்கம் மேற்கொள்கிறது. இத்தகைய ஒரு பயணத்துக்கு மட்டும் ரூ.30,000 செலவாகிறது.

மக்களின் பெயரால் அரசு உற்பத்தி செய்யும் பொருட்களுக்கும் சாமானிய மக்களுக்கும் என்றைக்குமே சம்பந்தம் இருப்பதில்லை. ஜனதா ஆட்சிக் காலத்தில் இந்தியன் ஆயில் நிறுவனம் பாமர மக்களும் பயன்படுத்தும் வகையில் 'நூதன்' என்ற ஸ்டவ்வை குறைந்த விலையில் ரூ 40க்கு தயாரிப்பதாகக் கூறியது. பின்னர் அது படிப்படியாக விலையேறி இன்று கிட்டத்தட்ட ரூ.100 ஆக உயர்ந்துவிட்டது. அதை போல நடுத்தர வர்க்கத்தினரும் பயன்படுத்தும் வகையில் ரூ.40,000 விலையில் மாருதி கார் தயாரிக்கும் திட்டம் பாசிச இந்திரா காலத்தில் துவங்கப்பட்டது. பின்னர் அது ஒன்றரை லட்ச ரூபாயாக உயர்ந்து இப்போதைய புதிய மாடல் ரூ 4 லட்சமாகிவிட்டது. மக்களிடமிருந்து அன்னியப்பட்டுப் போயுள்ள அரசு மக்களுக்கா உற்பத்தி செய்யும்?

பெரு நகரங்களிலுள்ள நட்சத்திர ஓட்டல்களில் தினந்தோறும் பல்லாயிரக் கணக்கான ரூபாய் மதிப்பள்ள உணவுப் பொருட்கள் குப்பையில் கொட்டப்படுகிறது. பம்பாய் ஓபாராய் ஓட்டலில் தினமும் 20 கிலோ அளவுக்கு உணவுப் பண்டங்கள் கீழே கொட்டப்படுகின்றன. சீ-ராக் எனும் ஐந்து நட்சத்திர ஓட்டலில் தயாரிக்கப்படும் உணவில் தினமும் 10% பாழாகிறது. டெல்லியிலுள்ள மயூரா ஷெராட்டன் ஓட்டலில் நாளொன்றுக்கு 79 கிலோ அளவுக்கு எலுமிச்சம்பழ விதைகள் குப்பையில் கொட்டப்படுகிறது. லிட்டர் கணக்கில் பழச்சாறு சாக்கடையில் கொட்டப்படுகிறது. 500 பேர் விருந்துக்கு வருவதாகக் கூறி அதில் பாதிப்



படிப்பகம்

www.padippakam.com



பேர்தான் வருகின்றனர். இதுதவிர உணவை மீதம் வைப்பதென்பது அவர்களின் கலாச்சாரமாக உள்ளது. இறைச்சி போன்றவற்றை குளிர்பதனப் பெட்டியில் வைத்து ஓரிரு நாட்கள் பாதுகாக்க முடியும். ஆனால் இதர உணவுப் பதார்த்தங்கள் அடுத்த நாளே கெட்டுப் போய்விடுவதால் குப்பையில் கொட்டுகிறோம் என்கின்றனர் ஓட்டல் நிர்வாகத்தினர். பெருநகரத் தெரு நாய்களுக்கும் பன்றிகளுக்கும் கிடைத்த பாக்கியம் கூட பசித்த வயிறுடன் தவிக்கும் இந்திய ஏழைக்குக் கிடைக்கவில்லை. ஒருபுறம் பசித்த வயிறுகள்; மறுபுறம் பாழடிக்கப்படும் உணவு. பாசிச ராஜீவ் உருவாக்கி வளர்த்த ஐந்து நட்சத்திர கலாச்சாரத்தின் 'சாதனை' இதுதான்!

**அ**யோத்தியிலும் அதைச் சுற்றியும் 6,000 ராமர் கோயில்கள் உள்ளன. ஒவ்வொரு கோயிலையும் இதுதான் உண்மையான ராமஜென்ம பூமி என்ற ஒவ்வொரு பூசாரியும் கூறுகின்றனர். ராமர் கடவுளின் அவதாரம். அவர் ஒரு சிறிய பூசையறையில் அவதரித்தார் என்பதும் அதற்கு ராம ஜென்ம பூமி என்று பெயர் சூட்டுவதும் முட்டாள்தனமானது. பாபர் மசூதியை இடித்துவிட்டு ராமர் கோயிலைக் கட்ட முயற்சிப்பது அதர்மமானது. பாரதீய ஜனதா தனது குறுகிய தேர்தல் அரசியல் நோக்கங்களுக்காக இப்பிரச்சினையைக் கிளப்பி விட்டுள்ளது. இந்துக்கள் இதற்கு பலியாகக் கூடாது என்று ஹனுமான்காரி என்ற இந்து 'சாது'க்களில் முக்கியமானவரான ஞானதாஸ் என்பவர் பகிரங்கமாக பத்திரிக்கைகளுக்குப் பேட்டியளித்துள்ளார். சாதுக்கள் என்ன, ஆண்டவனே நேரில் வந்து சாட்சி சொன்னாலும் இந்து வெறியர்கள் ஏற்றுக் கொள்ளவா போகிறார்கள்?

## வனத்துறை அதிகாரிகள் செய்த கோலை!



**ம**துரை, கம்பம் பகுதியை அடுத்து தமிழக - கேரள எல்லைப் பகுதியில் உள்ள சிறு மலை நகரம் குமுளி. இங்கு 7.10.90 அன்று நண்பகல் ஃபாரெஸ்ட் அலுவலகத்தினுள் இழுத்துச் செல்லப்பட்ட விறகு வெட்டும் தொழிலாளி முருகன், அடுத்த 15 நிமிடத்தில் பிணமானார்!

பகுதிமக்கள் வெகுண்டெழுந்து ஒன்று திரண்டனர். அதிகாரிகளின் விசாரணைக்கு உத்திரவிடக். கோரி சாலை மறியல் செய்தனர். விவசாயிகள் சங்கம் என்ற அமைப்பு இதற்காக முன்முயற்சி எடுத்து போராடியது. போலீஸ் டி.எஸ்.பி. வந்து பார்வையிட்டார். விசாரணைக்கோ, கொலைகாரர்களைக் கண்டு பிடிக்கவோ உத்திரவிடவில்லை.

கணவனை இழந்து நிர்கதியான முருகனின் துணைவியார் கொதிப்புடன் டி.எஸ்.பி.யைப் பார்த்து ''உன் மனைவி இறந்தால் இப்படி தாமதமாக வருவீயா?'' என்றார்.

இதைக் கேட்டு வெறிவந்தது போல் குதித்த டி.எஸ்.பி அந்த அபலைச் சகோதரியை தனது காலில் விழுந்து மன்னிப்பு கேட்க வைத்தான்.

இந்த அநியாயத்தை உத்தமபாளையம் வட்டம் விவசாயிகள் விடுதலை முன்னணி மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தியது. பொதுகூட்டம், பிரசுரம், போஸ்டர், தட்டி எழுதிவைத்து மக்களைப் போராட்டத்திற்கு அறைகூவி அழைத்தது.

பிரச்சாரத்தை பலவழிகளில் முடக்கப் பார்த்து வாலறுந்து போனது, ஃபாரஸ்ட் ரேஞ்சர் கொலைகார கூட்டம். இந்த அரசு எந்திரத்திடம் கெஞ்சிப் பயனில்லை; கொலைகாரர்களை நாமே நேரடியாக தண்டிக்க வேண்டுமென்று பிரச்சாரத்தை எடுத்துச் செல்கிறது, உத்தமபாளையம் வி.வி.மு.

**நா**காலாந்தின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வரும் நாகா சோசலிஸ்ட் கவுன்சிலின் போராளிகளை அழித்தொழிப்பது என்ற பெயரில் இந்திய ராணுவம் கடந்த அக்டோபர் மாத மத்தியில் கிராமம் கிராமமாக சோதனை நடத்தி அப்பாவி மக்களைத் தாக்கி அட்டூழியம் புரிந்தது. அவர்களின் அற்ப உடமைகளைச் சூறையாடியும் பெண்கள் மீது பாலியல் வன்முறையை ஏவியும் பயங்கரவாத பீதியூட்டியது. இத்தாக்குதலில் 500க்கும் மேற்பட்டோர் படுகாயமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.



நாகாலாந்து மாநில அரசாங்கமே இந்திய ராணுவத்தின் அட்டூழியங்களைக் கண்டித்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியது. ஆனாலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஐயோ பாவம்! இந்திய ராணுவத்தை விமர்சிப்பது தேசவிரோதமானது என்று மாநில அரசுக்குத் தெரியாது போலிருக்கிறது.

**இ**ன்றைய நிலையில் நாட்டில் புழங்கும் கருப்புப் பணத்தின் மதிப்பு ரூ 40,000 கோடி. அரசுக்குப் போட்டியாக பொருளாதாரத்தை நடத்துமளவுக்கு கருப்புப் பண பேர்வழிகள் முன்னேறி விட்டார்கள் என்று நிதி மந்திரி மது தண்டவதே அண்மையில் ஒப்பாரி வைத்துள்ளார். இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப் போகிறாராம். என்ன நடவடிக்கை தெரியுமா? கருப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்கும் பாசிச இந்திராவின் அதே நடவடிக்கைதான்!

**உ**ள்நாட்டுப் போரினால் நிலைகுலைந்து போயுள்ள இனவெறி இலங்கை அரசு, சுவிஸ் வங்கியைப் போல ரகசியக் கணக்கு வைக்கும் முறையை இலங்கை வங்கிகளில் கொண்டு வர முடிவு செய்துள்ளது. உலகெங்குமுள்ள ரகசிய உலகப் பேர்வழிகளின் கருப்புப் பணத்தை இலங்கையில் முதலீடு செய்வதற்கான ஏற்பாடுதான் இது. இனி பாசிச ராஜீவ் போன்ற ஆயுதபேரக் கொள்ளையர்களுக்கு கொண்டாட்டம் தான். கொள்ளையடித்த பணத்தை அண்டை நாட்டிலேயே ரகசியமாகப் பதுக்க வாய்ப்புள்ள போது இனி அவர்கள் சுவிஸ் நாட்டுக்கு ஓட வேண்டிய அவசியமில்லை.

**வ**ளைகுடா நெருக்கடியை ஒட்டி ஜப்பான் தனது துருப்புக்களை ஐ.நா. சமாதானப் படையின் ஓர் அங்கமாக சௌதி அரேபியாவுக்கு அனுப்பப் போகிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அன்னிய நாட்டுக்கு ஜப்பான் தனது படையை அனுப்புவது இதுவே முதன்முறை. இம்முடிவை எதிர்த்து ஜப்பானின் எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் வெளிநடப்பு செய்தன. ஜப்பானின் அரசியல் சட்டம்கூட தற்காப்பு நோக்கத்தைத் தவிர பிற காரணங்களுக்காக தனது ராணுவத்தை அன்னிய நாட்டில் நிறுத்தக் கூடாது என்றுதான் கூறுகிறது. ஆனால் இவை எதையும் பொருட்படுத்தாமல் துருப்புக்களை அனுப்ப ஜாப்பானிய ஏகாதிபத்திய வாதிகள் துடிக்கின்றனர். அமெரிக்க - ரஷிய வல்லரசுகளுக்கு இணையாக வளர்ந்து வரும் ஜப்பான், மீண்டும் தனது டோஜோயிச மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான முயற்சியே இது.

படிப்பகம்

www.padippakam.com



நகரசுத்தி தொழிலாளர்களின் நரக வாழக்கை.

# மலம் அள்ளும் தொழிலாளர்களின் அவலம்

தாழ்த்தப்பட்டவர்களை கைத்தூக்கிவிட அரசு, அதிகமாக செய்வதாக அலட்டிக் கொள்கிறது. தற்போதைய மண்டல்கமிஷன் - இட ஒதுக்கீடு அதற்கான ஒரு பெரும் முயற்சி என்கிறது. தாழ்த்தப்பட்டவர்களை தனிக் குடியிருப்புகளில் வைத்து இழிவுபடுத்தும் ஆதிக்க சக்திகளுக்கு துணை போகும் அரசு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு தவணை முறையில் போலி கௌரவத்தை இலவசமாக்கி தன்னுடைய கறையை கழுவிக்கொள்கிறது.

உண்மையில், தாழ்த்தப்பட்டவர்கள் இந்து மேல்சாதிவெறி சனாதன அடிப்படையில் விலங்கினும் கீழாக நடத்தப்படுகின்றனர். நாட்டின் நிர்மாணத்தில் பிரதான பங்கு வகிக்கும் தாழ்த்தப்பட்டவர்களின். பங்களிப்பை, உழைப்பை, அதற்குரிய கௌரவத்தோடு ஆளும் வர்க்கங்கள் எந்நாளும் அங்கீகரித்தது இல்லை. மாறாக, பொது இடங்கள், பொது நிகழ்ச்சிகளில் அவர்களுடைய சமூக கௌரவத்தை திட்டமிட்டு சிறுமைப்படுத்துகிறது.

உதாரணத்திற்கு, கிராமங்களில் சாவு மேளம் அடிக்கவும், பிணத்தை எரிக்கவும் இடுகாட்டு காவலுக்கும் 'வெட்டியான்கள்' என்ற தாழ்த்தப்பட்ட சாதியினரைத்தான் ஒதுக்குகின்றனர். அவர்கள் மறுத்தாலும் சாதிவெறியர்கள் விடுவதில்லை. மிரட்டிப் பணிய வைக்கின்றனர்.

அரசோ சட்டப்பூர்வமாக நகர்புறங்களில் மலம் அள்ளவும் சாக்கடை அள்ளவும் 'தோட்டிகள்' என்று தாழ்த்தப் பட்டவர்களைத்தான் நியமிக்கிறது. மற்ற மேல்சாதியினர் ஒதுக்கிய வேலைகளை அவர்கள் தலையில் சுமத்துகிறது. மருத்துவமனைகளில் பிண அறைகளை சுத்தம் செய்வது, அழுகிய பிணங்களைச் சுமப்பது எல்லாம் அவர்கள் தான்!

மனித நாகரீகம் விண்ணைத் தொட்டு விட்டது. விஞ்ஞானம், இயந்திர மனிதனை உருவாக்கிவிட்டது. இருந்தாலும் தாழ்த்தப் பட்டவர்கள் தலையில் மலம் சுமக்கும் அவலம் இன்னும் நீடிக்கிறது. கங்கையின் தூய்மை கெட்டு அதன் புனிதம் அழிந்து வருவதாக அலறுகிறது, அரசு. அதற்கான பாதுகாப்புக்கு பல சட்டங்களையும் பலநூறு கோடி ருபாய்க்கு திட்டங்களையும் இயற்றுகிறது.

ஆனால், மலத்தையும் சாக்கடையையும் தலையில் சுமப்பதற்கு சகமனிதனை - தாழ்த்தப்பட்டவர்களை - பயன்படுத்துகிறது.

இந்திய நகர்ப்புறங்களில் அரசுக் கணக்குப்படி கழிப்பிட வசதியுள்ள குடியிருப்புகள் 46.4 சதவிகிதம்! இதில் 25.4 சதவிகிதம் கையால் வாரி சுத்தமாக்கப்படும் கழிப்பிடங்கள்! மீதி இருப்பவை பாதாள சாக்கடையோடு இணைக்கப்பட்டிருக்கும் கழிப்பிடங்கள்! இவையில்லாமல் புறநகர்ப் பகுதிகள், பாதாள சாக்கடை வசதியில்லாத சிறுநகரங்களில் கழிப்பிடக் கழிவுகள் தனித்தனி மலக் குழிகளில் (Septic Tank) இறக்கப்பட்டு ஆண்டுக்கு சிலமுறை மொத்தமாக அள்ளப்படுகின்றன. அரசுக் கணக்குப்படி மலம் சுமக்கும் வேலையில் இந்தியா முழுவதும் 4 லட்சம் தாழ்த்தப்பட்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (அரசு குறைத்து காண்பித்துள்ள கணக்கு)

கழிப்பிடத்திலோ, மலக்குழிகளிலோ அவர்கள் மலத்தை தகர முறத்திலும் வாளியிலும் வாரி எடுக்கின்றனர். அதை தோளிலும் தலையிலும் சுமந்து சென்று அப்புறப் படுத்துகின்றனர். தாங்கமுடியாத நாற்றமும், நச்சு வாயுவும் குப்பென்று அடிக்கும் பாதாள சாக்கடையில், மலச்சேற்றில் - வெறும் உடம்போடு இறங்குகிறார்கள். மூச்சடக்கி மலச் சேற்றில் மூழ்கி அடைப்புகளை கையால் எடுத்து வெளியில் போடுகிறார்கள். சமயத்தில், மலச்சேற்றினுள் மூச்சடக்க முடியாமல் புரையேறி வாயிலும், மூக்கிலும் மலம் உள்ளே போய்விடும். வெளியில் வந்து தொண்டையை கனைத்துக் கொண்டு வெளியில் துப்பிவிட்டு, மீண்டும் பணியில் இறங்கிவிடுவார்கள்.

சாதாரணமாக பலபேர் போகும் பொது கழிப்பிடங்களுக்கு போனாலே பல பேருக்கு 'கக்கூஸ் படை' வந்துவிடும். அரிப்பு தாங்க முடியாது! மலத்தையே சுவாசித்து, மலம் சுமந்து வாழும் அவர்கள் உடல் உறுப்புகள் பலவும் நஞ்சாகி விகாரமாகிறது. உடம்பு தோல் பாசி பிடித்த தரை போல் மாறி கெட்ட நீர் ஒழுகி தாளமுடியாத எரிச்சலில் அவதிப்படுகிறார்கள். இதற்கு தற்காலிகமாக சாராயம்தான் அவர்களுக்கு மருந்து! பிறகு போதை பழக்கத்திலிருந்து மீள முடியாமல் அவர்கள் குடும்பம் கவனிப்பாரற்று பட்டினியில் வாடுவதும், குடும்பத்தலைவர் நோயில் இறந்து போகும் கொடூரமும் தொடர்கிறது.

பணியின் போது குறைந்தபட்சம் கையுறைகள், பாதுகாப்பான காலணிகள் கூட அவர்களுக்கு வழங்குவதில்லை. ரசாயன நச்சு கழிவுகள் போன்றது மலம்! உடலில் உள்ள காயத்திலோ, புண்ணிலோ மலம் புகுந்தால் நஞ்சு பரவி அங்கங்களை இழக்க நேரிடும்! இவ்வளவு ஆபத்தும், அவமானமும் நிறைந்த மலம் சுமக்கும் வேலையை நாமே செய்யும் போதுதான் அதன் கொடுமை புரியும்!

நிலப்பிரபுக்களின் உடம்பு பிடித்து விடவும், விசிறவும், குடைபிடிக்கவும், அவர்கள் துப்பும் எச்சிலை தாம்பூல கிண்ணத்தில் பிடித்து வெளியில் கொட்டவும் கூலி ஏழைகள் இருப்பார்கள். நிலப்பிரபுக்களின் மனைவிகளைக் குளிப்பாட்டி, கூந்தலை துவட்டி சாம்பிராணி புகை பிடிக்க கூலி ஏழைப் பெண்களை பயன்படுத்துவார்கள். இதே வேலையைத்தான், மேல் சாதி வெறிபிடித்த அரசு எந்திரம் சட்டபூர்வமாக நகர சுத்தி தொழிலாளர்களை செய்விக்கிறது.

மனுதர்மம்தான் ஆளும் கும்பல்களின் அறிவிக்கப்படாத அரசியல் சட்டமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசு வேலை



படிப்பகம்

www.padippakam.com

ாய்ப்பு அலுவலகங்கள், மலம் அள்ளுவது ான்ற நகரசுத்தி வேலைகளுக்கு தாழ்த்தப் ட்டவர்களுக்கு மட்டும்தான் அறிவிப்பு ள் அனுப்புகிறது. எழுத்தறிவற்ற தற்குறி ள், விதவைகள், அநாதைகள், எல்லா மல்சாதிகளிலிருந்து பதிவு செய்து வைத்தி ந்தாலும் அவர்களுக்கு னுப்புவதில்லை.

'செய்யும் தொழிலே தெய்வம்' என்று ருக்கு உபதேசம் செய்யும் மேல்சாதி கும் ல் தவறியும் தங்கள் சுற்றுப்புறத்தைக் கூட ாங்களே சுத்தம் செய்வதில்லை! உதாரணத் ிற்கு அலுவலக அறையில் எலி செத்து கிடந்தாலும், தெருவில் நாய் செத்து கிடந்தாலும் மூக்கை பிடித்துக் கொண்டு அங்கேயே வளைய வருவார்களே தவிர அவற்றை அப்புறப்படுத்த மாட்டார்கள். அக்கும்பல் மேல்சாதி உயர் கௌரவத்தை காத்துக் கொள்வதிலேயே குறியாய் இருக்கும்.

மற்ற தொழிலாளர்களுக்கு இருக்கும் எந்த ஒரு உரிமையும் கழிப்பிட துப்புரவு தொழிலாளர்களுக்கு மறுக்கப்படுகிறது. இவர்கள் விடுமுறை எடுத்தால் வேலைக்கு தங்கள் உறவினர்களை பதிலியாக அனுப்பி வைக்க வேண்டும். மற்ற பிரிவு ஊழியர்கள் போல், அவர்கள் வேலையை மற்றவர் செய்வதில்லை! அதே ஊழியர்கள்கூட அவ்வேலையை செய்வதில்லை!

இன்னும், மாநகராட்சி, பஞ்சாயத்து யூனியன், உள்ளூராட்சி அலுவலகங்களின் கீழ் வேலை செய்யும் நகரசுத்து தெழிலாளர்களின் நிலைமை அவலம் நிறைந்தது. தங்களுடைய அலுவலகத்திலேயே இவர்கள் மற்ற தொழிலாளர்கள் போல உட்காரக்கூட அனுமதிக்கப் படுவதில்லை. தங்கள் அலுவலகத்தின் வெளியே கும்பலாக காத்திருக்கிறார்கள். அலுவலகத்தினுள் சென்று அரட்டை அடித்துவரும் அதிகாரிகள், காத்திருக்கும் தொழிலாளர்களை ஆடுமாடுகள் போல் பிரித்து தேவையான பகுதிகளுக்கு வேலைக்கு ஓட்டி செல்கிறார்கள்.

இந்த அதிகாரிகள் பினாமிகள் மூலம் ஏலம் எடுத்திருக்கும் கட்டண கழிப்பிடங்களையும் இவர்களுடைய இலவச உழைப்பின் மூலம் சுத்தம் செய்து கொள்கிறார்கள். மாதச் சம்பளத்தையும் அவர்களுக்கு முழுமையாகக் கொடுப்பதில்லை. தங்கள் 'தண்ணி விருந்து' செலவுக்கு என்று ரூபாய் 50, 100 பிடித்துக் கொண்டு மீதியைத் தருகிறார்கள். அவர்களுக்கு சம்பளப் பட்டியல் எழுதும் 'கிளார்க்'குகள் கூட அவர்களிடம் ரூ.10, ரூ.20 என்று வாங்கி கொள்கிறார்கள். துப்புரவு தொழிலாளர்கள் இவையெல்லாம் தங்களுக்கு இழைக்கப்படும் அவமானமாகவோ, அடக்குமுறையாகவோ கருதி எதிர்க்க முடிவதில்லை!

தினவெடுத்த அதிகாரிகள் கீழ்த்தரமாக திட்டினால்கூட பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் கபடமின்றிச் சிரிக்கிறார்கள். அவையெல்லாம் அதிகாரிகளின் உரிமை என்று விட்டுக் கொடுக்கிறார்கள். தொடர்ந்து வேலை கொடுப்பதும், மாதச் சம்பளம் கொடுப்பதும் அரசு ஊழியராக இருப்பதும் மிகப்பெரும் பரோபகாரமாக நினைக்கிறார்கள். இவர்களுடைய எழுத்தறிவின்மையையும் அறியாமையையும் தங்களுக்கு மூலதனமாக்கிக் கொண்டு அவர்களை அருவருப்பாக நடத்துகிறது, அதிகார வர்க்கம்.

தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை கொஞ்சம் கொஞ்சமாக உணர தொடங்கிய நகரசுத்தி தொழிலாளர்கள் இந்தியாவிலேயே முதன்முதலாக குஜராத் மாநிலத்தில் ஒன்றுபட்டு போராடினார்கள். அதிகாரவர்க்கமும், அரசு எந்திரமும் தனது பற்களை திறந்து காட்டியது. 'இழிவான வேலையிலிருந்து விடுதலை அளிக்கிறோம்' என்று கூறி தவணை முறையில் அவர்களை வீட்டுக்கு அனுப்பியது. அவர்களுக்கு மாற்றுவேலைகளில் பயிற்சி அளிக்கவோ, சிறுதொழில் துவங்க உதவிகளோ - எதுவும் செய்யவில்லை.

அரசாங்கத்தின் நரித்தனத்தால் அவர்களுடைய போராட்டம் தேக்கநிலையை அடைந்தது. மே.வங்க ஜோதிபாசு, அரசாங்கம் கூட பீகார், ஒரிசா மாநிலங்களைச் சேர்ந்த தாழ்த்தப் பட்டவர்களைத்தான் தொழில::ளர்களாக பணிக்கு அமர்த்துகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மாசுக்கட்டுப்பாடு என்று பொதுச் சுகாதாரத்திற்கு ஏராளமாக கண்ணீர் வடிக்கிறார்கள், முதலாளித்துவ அறிவுஜீவிகள்! அதில் ஒரு சொட்டு கண்ணீரைக்கூட தன்னுடைய மலத்தை அள்ளும் சகமனிதனுக்காக அவர்கள் சிந்துவது இல்லை. அவ்வளவு ஏன்? தங்கள் கழிப்பிடங்களில் பதிக்கும் பளிங்கு கற்களை பராமரிப்பதற்கு காட்டும் கவனத்தில் நூறில் ஒரு பங்குகூட நகரசுத்தி தொழிலாளியின் அவல வாழ்க்கையை பராமரிப்பதற்கு காட்டுவதில்லை!

நவீன விஞ்ஞான வளர்ச்சியில், நகரசுத்தி தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய தொழிலுக்கும் மாற்று ஏற்பாடு செய்வது அசாதாரணமானது ஒன்றுமில்லை! மேற்கு நாடுகளில் எல்லாம் தானியங்கி இயந்திரங்கள்தான் இவ்வேலைகள் அனைத்தையும் செய்கின்றன. அதற்கேற்ப நவீன முறையில் கழிப்பிட, சாக்கடை திட்டங்கள் பராமரிக்கப்படுகின்றன. மேலைநாடுகளில் இருந்து வக்கிர - களிவெறி ஆட்டங்களை காப்பியடிக்கும், இறக்குமதி செய்யும் ஆளும் கும்பல், இம்மாதிரியான உருப்படியான வளர்ச்சிகளை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை! காரணம், இவ்வளவு அற்பக்கூலிக்கு மலம் அள்ளுவதற்கு எந்த இயந்திரமும் கிடைக்காது, தாழ்த்தப்பட்டவர்களை தவிர!

ஆனால் நகரசுத்தி தொழிலாளர்கள், சாக்கடை அடைப்புகளையும் வேண்டாத கழிவுகளையும் அனுமதித்து பழக்கப்பட்டவர்களல்ல! தன்மீது அசிங்கங்கள் தற்காலிகமாக ஒட்டிக் கொண்டாலும் கூட சாக்கடையை அப்புறப்படுத்தி வெளியேற்றும் வரை தங்கள் பணியில் ஓயாதவர்கள். அதே வழியில், தங்களை கழிவுகளை விட கேவலமாக நடத்தும் இந்துமேல்சாதிவெறி ஆளும் கும்பலை, அரசு எந்திரத்தை அப்புறப்படுத்த வேண்டியதன் அவசியத்தை மிக விரைவில் உணர்வார்கள்!

● பச்சையப்பன்

பாதுகாப்பு சாதனமின்றி பாதாள சாக்கடையில் இறங்கி அடைப்புகளை நீக்கும் நகரசுத்தி தொழிலாளி.





படிப்பகம்

# ஜெர்மன் பிளவுக்கு காரணம் யார்?

ஜெர்மனியை ஒன்றிணைப்பது தான் தங்கள் வாழ்வின் லட்சியமாக இருந்ததைப் போலவும் தற்போது கடும் முயற்சிகளுக்குப் பின் அந்த லட்சியம் நிறைவேறி விட்டதைப் போலவும் மேலை ஏகாதிபத்தியங்கள் சித்தரிக்கின்றன. இணைப்பையொட்டி நடந்த விழாவில் இட்லரிசத்திற்கும் 'ஸ்டாலினிசத்திற்கும்' பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர். உலகம் காணாத பாசிசக் கொடுங்கோலன் இட்லரையும், அவனை வீழ்த்திய பாட்டாளிவர்க்கத்தின் வீரப்புதல்வனையும் ஒரே தட்டில் வைப்பதன் மூலம் தங்களது ஏகாதிபத்திய மகா சாம்ராச்சியக் கனவுகளுக்குத் தடையாயிருந்த ஸ்டாலினை இப்போது 'பழிவாங்க' முயற்சிக்கிறார்கள். அது மட்டுமல்ல;

ஜெர்மனியை இரண்டாகப் பிளந்தது ஸ்டாலின் தான் என்பதைப் போலவும், ஏதோ சூழ்ச்சி செய்து அவர் இதைச் சாதித்து விட்டதைப் போலவும், அமெரிக்காவும் மேலை ஏகாதிபத்தியங்களும் இதில் சம்பந்தப்படவில்லை என்பது போலவும் கதை கட்டிவிடுகிறார்கள். இவையனைத்தும் பொய் என்பதை நிரூபிப்பதற்கும், இன்று ஜெர்மனியில் மீண்டும் புதிய நாஜி கும்பல்கள் தலைதூக்குவதற்கும், இனவாதம் தலையெடுப்பதற்கும் அமெரிக்க, மேலை ஏகாதிபத்தியங்களே பொறுப்பு என்பதை விளங்கிக் கொள்வதற்கும் நாம் வரலாற்றைப் புரட்டிப் பார்க்க வேண்டும்.

○ ○ ○

சோவியத் மக்களின் அளப்பரிய தியாகம், வீரம், இரண்டு கோடிப் பேரின் உயிர் ஆகியவற்றை விலையாகக் கொடுத்து இதுவரை உலக வரலாறு கண்டிராத ஒரு போரில் (1945 -மே'8ந்தேதி) இட்லரை ரசியச் செம்படை முறியடித்தது. ஜெர்மன் படைகள் ரசியாவைச் சுடுகாடாக்கிக் கொண்டிருந்தபோது 'ஒழிந்தது கம்யூனிசம்' என்று மிகுந்த மகிழ்சியுடன் அதைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தன 'நேச' நாடுகளான அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள். ஆனால் இட்லரின் படைகளை முறியடித்து பெர்லினை நோக்கி செம்படைகள் நகரத் தொடங்கியவுடனே அவசரம் அவசரமாகத் தமது படைகளையும் ஜெர்மனிக்கு அனுப்பி அதன் பெரும்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டன மேலை ஏகாதிபத்தியங்கள். ஜெர்மனியை நான்காக பிரித்து நான்கு நாடுகளும் ஒவ்வொரு பகுதிக்குப் பொறுப்பேற்றன. ஜெர்மனியின் கிழக்குப் பகுதி ரசியக் கட்டுப்பாட்டிற்கு வந்தது.

மீண்டும் புதிய ஜெர்மனியைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஜெர்மன் கம்யூனிஸ்டு கட்சி ஏற்றது. இட்லரைத் தோற்கடிப்பதில் பிரதான பாத்திரமாற்றியவர்கள் என்பதனால் மற்ற சக்திகளைப் புறக்கணித்து அதிகாரம் முழுவதையும் கம்யூ. கட்சி தன் கையில் எடுத்துக் கொண்டு விடவில்லை. கம்யூனிஸ்டுகள், சமூக ஜனநாயகவாதிகள், தொழிற்சங்கங்கள், மற்றும் முதலாளித்துவ அரசியல்வாதிகள் அடங்கிய பெர்லின் நகர கவுன்சிலை மே-17-ம் தேதி கம்யூனிஸ்டு கட்சி உருவாக்கியது. இக்கவுன்சில் தான் நகர நிர்வாகத்தை மேற்கொண்டது.

அனைத்தையும் சீரமைக்கும் கடும்பணியை செம்படை ஏற்றது. தங்கள் சகோதரர் மீதும் தாய்நாட்டின் மீதும் ஜெர்மன் பாசிஸ்டுகள் நடத்திய வெறியாட்டங்கள் தோற்றுவித்த விஷக்கருத்துக்களைப் பொறுமையாக எதிர்கொண்டும் இதை அவர்கள் செய்ய வேண்டியிருந்தது. அனைத்திற்கும் மேலாக யுத்தத்தினால் சீர்குலைந்து போயிருந்த ரசியா, ஜெர்மனியின் மறுநிர்மாணத்திற்கு உணவும் பொருளும் கொடுத்து உதவியது.

போர் நிறுத்தம் ஏற்பட்ட ஒரே மாதத்தில் - ஜூன் 10-ம் தேதியன்றே ஜனநாயக அமைப்புகள் மற்றும் கட்சிகள் துவங்கிக் கொள்ளலாமென்று ரசிய ராணுவத் தலைமையகம் அனுமதியளித்தது. அமெரிக்கா பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய ஏகாதிபத்திய நாடுகளின் கட்டுப்பாட்டில் இருந்த ஜெர்மன் பகுதிகளில் இவ்வுரிமை பல மாதங்களுக்குப் பின்னர் தான் வழங்கப்பட்டது. அதுவும் வரம்புக்குட்பட்டதாகத்தான் இருந்தது.

மீண்டும் ஒரு ஜனநாயக ஜெர்மனியைக் கட்டியெழுப்புவதற்கு ஜெர்மன் கம்யூனிஸ்டு கட்சி கீழ்க்கண்ட திட்டத்தை முன்வைத்தது:

நாஜிக்கட்சி முன்னணியாளர்களை எல்லா அதிகாரப் பொறுப்புகளிலிருந்து வெளியேற்றுவது; மக்களுக்கு ஜனநாயக உரிமைகளனைத்தும் வழங்குவது; கல்வித்துறையை ஆக்கிரமித்திருந்த நாஜிகளை விரட்டியடிப்பது; யுத்தத்திற்குப் பின்பலமாக இருந்த அனைத்து முதலாளிகளின் சொத்தையும் பறிமுதல் செய்து நாட்டுடமை ஆக்குவது; யுத்தத்தை ஊக்குவித்த ஜங்கர் நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்து உழுபவனுக்குச் சொந்தமாக்குவது; வீடற்றோர், வேலையற்றோர் மற்றும் வறியவர்களின் பிரச்சனைகளுக்கு பிரதான முக்கியத்துவம் தருவது; அண்டை நாடுகளுடன் நேச உறவு, எல்லா மட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக பூர்வமான நிர்வாக அமைப்புகளை உருவாக்குவது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு, பாசிச எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சியின் இந்தத் திட்டம் பரவலான வரவேற்பை பெற்றது. இத்திட்டத்தை அமல்படுத்த பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியம் ஒரு முன் நிபந்தனை என்பதால் கம்யூனிஸ்டு கட்சியும், சமூக ஜனநாயகக் கட்சியும் ஒரு கூட்டுக் கமிட்டியை உருவாக்கின. கட்சிகள், சங்கங்கள் அமைப்பதற்கு வழங்கப்பட்டிருந்த உரிமையைப் பயன்படுத்தி கிறித்துவ ஜனநாயகக் கூட்டமைப்பு, லிபரல் ஜனநாயகக் கட்சி போன்ற முதலாளித்துவ கட்சிகளும் தோன்றின. மேற்கூறிய நான்கு கட்சிகளும் இணைந்து பாசிச எதிர்ப்பு ஐக்கிய முன்னணியைத் தோற்றுவித்தன. கட்சி

இட்லரிசத்தை வீழ்த்திய சோவியத் செம்படையின் நிர்மாணப் பணிகள்! பஞ்சத்தில் வாடிய ஜெர்மன் மக்களுக்கு உணவு தயாரித்துக் கொடுக்கிறார்கள் செஞ்சேனை வீரர்கள்!



www.padippakam.com

ள் ஒவ்வொன்றும் மற்ற கட்சிகளின் தனித் துவத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பதும் ஒருமனதான முடிவுகள் மட்டுமே அமுல்படுத்தவேண்டும் என்பதும் செயல்பாட்டுக்கான வழிமுறைகளாக வகுக்கப்பட்டன.

1945 ஆகஸ்டு 2 -ம் தேதி போட்ஸ்டாம் எனும் இடத்தில் ஸ்டாலின் - ட்ருமன் - அட்லி ஆகியோரிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் ஜெர்மனியின் பாசிச எதிர்ப்பு ஐக்கிய முன்னணி முன்வைத்த திட்டத்தை பிரதிபலிப்பதாகவே இருந்தது. ஜெர்மானிய ராணுவத்தைக் கலைப்பது, நாஜிக் கட்சியையும் அதன் இதர அமைப்புகளையும் கலைப்பது, ஜெர்மன் அரசியல், சமூக வாழ்வில் எந்த வடிவத்திலும் அது மீண்டும் தலையெடுக்க விடாமல் தடுப்பது, ஜெர்மன் ஏகாதிபத்திய முதலாளிகளின் பொருளாதார வலிமையை ஒடுக்குவது, இட்லர் ஆக்கிரமித்த அண்டை நாட்டுப் பகுதிகளை அவர்களிடம் திரும்பத் தருவது என போட்ஸ்டாம் ஒப்பந்தம் முடிவு செய்தது.

ஆனால் ஜெர்மனியின் ஐக்கியத்தைப் பாதுகாக்க ஒரு மத்திய அரசு உருவாக்கப்படவேண்டும் என்றும், தாங்கள் விரும்பும் அரசியலமைப்பைத் தெரிவு செய்து கொள்ளும் ஜனநாயக உரிமை ஜெர்மன் மக்களுக்கு வழங்கப்படவேண்டும் என்றும் ரசியா முன்வைத்த யோசனையை அமெரிக்காவும், பிரிட்டனும் ஏற்க மறுத்தன. ரசியாவின் விடாப்பிடியான முயற்சியினால்தான் குறைந்த பட்சம் ஜெர்மனியை ஒரு நாடாக நீடிக்கச் செய்வது என்ற கருத்தையே அமெரிக்காவும் பிரிட்டனும் ஏற்றன.

ரசியா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய 'நேச'நாடுகளின் தலைமைகள் இணைந்த ஒரு குழு மொத்த ஜெர்மனியின் மைய நிர்வாக உறுப்புகளை கண்காணிப்பது என்றும், இந்தக் கண்காணிப்புக் குழுவின் ஒரு மனதான முடிவுகளை மட்டுமே அமல் செய்வது என்பதும் அனைவராலும் ஏற்கப்பட்டது. இந்த அடிப்படையில் நிதி, தொழில், வெளிவர்த்தகம், போக்குவரத்து ஆகிய துறைகள் மட்டும் மத்திய நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. ஜெர்மனியும், தலைநகரான பெர்லினும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் ஒரு நாட்டின் கட்டுப்பாட்டில் விடப்பட்டன. கூட்டுத் தலைமைச் செயலகம் பெர்லினில் இயங்கியது. மே 8-ம் தேதி பெர்லினை செம்படை கைப்பற்றியவுடன் உருவாக்கப்பட்ட பெர்லின் நகர கவுன்சில் இயற்றிய அனைத்து சட்ட திட்டங்களையும் இந்தக் கூட்டுத் தலைமையகம் அங்கீகரித்தது.

பாசிச எதிர்ப்பு ஐக்கிய முன்னணியின் திட்டத்திற்கும், போட்ஸ்டாம் ஒப்பந்த ஷரத்துகளுக்கும் ஜெர்மன் கம்யூனிஸ்டு கட்சியும், ரசியாவும் எவ்வாறு விசுவாசமாக இருந்தன என்பதும் அமெரிக்காவின் தலைமையில் பிரிட்டனும் பிரான்ஸும் இதற்கு எவ்வாறு துரோகமிழைத்தன என்பதும் தான் இனிவரும் வரலாறு.

நிலச்சீர்திருத்தம்: நாஜிகளின் உலக ஆக்கிரமிப்புப் போர்வெறிக்கும், இனவெறிக்கும் அடிப்படையாக இருந்த இரண்டு வர்க்கங்கள் - ஜங்கர் நிலப்பிரபுக்களும், ஏகபோக முதலாளிகளும் தான். கிழக்கு ஜெர்மனியின் விளை நிலங்களில் 30 சதவீதம் இவர்களிடம் இருந்தது. 3 லட்சம் சிறிய நடுத்தர விவசாயிகளுக்குச் சொந்தமாக இருந்த நிலத்தைப் போல, ஒன்றரை மடங்கு நிலம் 6000 ஜங்கர் நிலப்பிரபுக்களின் பிடியில் இருந்தது. தமது துணையுடன் தான் லட்சக்கணக்கான விவசாயிகளை இவர்கள் நாஜிசத்தின் செல்வாக்குக்கும், அடக்குமுறைக்கும் உட்படுத்த முடிந்தது.ராணுவ ரீதியில் முறியடிக்கப்பட்டிருந்த நாஜிகளை வேரோடு பிடுங்கியெறிய வேண்டுமெனில் ஜங்கர் நிலப்பிரபுக்களின் ஆதிக்கம் ஒழிக்கப்பட வேண்டியிருந்தது


எனவே நிலச்சீர்திருத்தத்திற்கான பிரச்சாரத்தை நிலமற்ற, ஏழை விவசாயிகள் மத்தியில் ஜெர்மன் கம்யூனிஸ்டு கட்சி தீவிரமாக நடத்தியது. 100 ஹெக்டேர் உச்சவரம்பாக நிர்ணயிக்கப்பட்டு அதற்கு மேற்பட்ட நிலமனைத்தும் பறிமுதல் செய்யப்பட வேண்டுமென்றும், நாஜிக் கட்சியையும் யுத்தத்தையும் ஆதரித்த நிலப்பிரபுக்களின் அனைத்து நிலமும் பறிமுதல் செய்யப்பட வேண்டுமென்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. பிராந்திய நிர்வாகக் கவுன்சில்கள் இதற்கான சட்டங்களை இயற்றி அமல்படுத்தின. 3,30,000 நிலமற்ற விவசாயிகளுக்கு 20 லட்சம் ஹெக்டேர் நிலம் பிரித்து விநியோகிக்கப்பட்டது; 50,000 நடுத்தர விவசாயிகளுக்கு சராசரியாக ஒன்றரை ஹெக்டேர் நிலமும், காய்கறி போன்றவை பயிரிட்டுக் கொள்வதற்காக தொழிலாளிகள், கைவினைஞர்கள், அலுவலக ஊழியர்கள் அடங்கிய 1,80,000 பேருக்கு அரை ஹெக்டேர் நிலம் வீதம் விநியோகிக்கப்பட்டது.

ரசிய கட்டுப்பாட்டுப் பகுதியில் (கிழக்கு ஜெர்மனியில்) அமல்படுத்தப்பட்ட இச்சீர்த்திருத்தத்தின் விளைவாக மேற்கு ஜெர்மனியிலும் நிலமற்ற விவசாயிகள் இக்கோரிக்கையை முன் வைத்தனர். இருப்பினும் 1945 செப்டம்பரில் கிழக்கு ஜெர்மனியில் அமல்படுத்தப்பட்ட நிலச்சீர்திருத்தம் மேற்கு ஜெர்மனியில் சட்டமாவதற்கு இரண்டாண்டுகள் ஆனது. சட்டமும் காகிதச் சட்டமாகவே இருந்தது. அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சு அரசுகளின் ஆதரவுடன் நிலமுதலைகள் தங்கள் நிலங்களைத் தக்கவைத்து கொண்டனர். சட்டத்தை அமல்படுத்தும் அதிகாரம் பழைய நாஜி வர்க்கத்திடமே இருந்ததால் சீர்திருத்தம் முற்றிலுமாக முடக்கப்பட்டது.

### தொழிலாளிவர்க்க ஐக்கியமும் ஏகபோக மூலதனம் நாட்டுடமை ஆக்கப்படுவதும்

கிழக்கு ஜெர்மன் பகுதிகளில் நிலச்சீர்திருத்தும் கறாராக அமல்படுத்தப்பட்ட உடனேயே அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சு கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளில் எதிர்புரட்சி சக்திகள் எச்சரிக்கை அடையத் தொடங்கின. மேற்கு ஜெர்மன் பகுதியைச் சேர்ந்த கிறித்தவ ஜனநாயகக் கூட்டமைப்பு கட்சியின் தலைவரான கோன்ராட் அடெனார் அமெரிக்க, பிரெஞ்சு, பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் உள்ள ஜெர்மன் பகுதிகளைத் தனி நாடாக அறிவிக்க வேண்டுமென அக்'45-இலேயே அறிவித்து விட்டார். வர்க்கப் போராட்டம் கூர்மையடையத் தொடங்கியது. எதிர்ப்பைச் சந்திக்கவும் பாசிசக் கும்பல்களை முற்றிலுமாக நசுக்கவும் தொழிலாளிவர்க்கம் தன்னை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. பாசிச எதிர்ப்பு ஜனநாயக ஜெர்மனியை நிறுவுவது என்பதைக் குறைந்தபட்ச குறிக்கோளாகவும், சோசலிசத்தை நீண்டகாலக் குறிக்கோளாக

பல நூற்றாண்டு கால அநீதி முடிவுக்கு வருகிறது; கிழக்கு ஜெர்மன் ஜனநாயக குடியரசால் நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் விநியோகிக்கப்படுகிறது!



படிப்பகம்

www.padippakam.com




ஜூன் 1948ல் மேற்கு ஜெர்மனியில் புதிய நாணய முறையை ஏகாதிபத்தியவாதிகள் உருவாக்கியதை எதிர்த்து மேற்கு பெர்லின் நகரத் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டம்.

வும் கொண்டு கம்யூனிஸ்டு கட்சியும், சமூக ஜனநாயகக் கட்சியும் ஐக்கிய சோசலிசக் கட்சி எனும் பெயரில் ஏப்ரல் '46 இல் ஒன்றிணைந்தன.

இரண்டு உலகப் போர்கள் உருவாவதற்குக் காரணமாக இருந்தவர்களும், நாஜிக் கட்சியை ஊட்டி வளர்த்து அதிகாரத்தில் அமர்த்தியவர்களுமான ஜெர்மன் ஏகபோக முதலாளி வர்க்கத்தின் உடைமைகளைப் பறிமுதல் செய்யும் வேலையில் கிழக்கு ஜெர்மன் தொழிலாளி வர்க்கம் இறங்கியது. போட்ஸ்டாம் ஒப்பந்தத்தின் அடிப்படையிலும், பாசிச எதிர்ப்பு ஐக்கிய முன்னணியின் திட்டத்தின் அடிப்படையிலும் நாஜிக் கட்சியை ஆதரித்த ஃபிலிக் போன்ற ஏகபோக முதலாளிகளின் நிறுவனங்கள் அனைத்தும் நட்டஈடின்றி பறிமுதல் செய்யப்பட்டு நாட்டுடைமை ஆக்கப்பட்டன.

ரசியாவின் விடாப்பிடியான போராட்டத்தின் விளைவாக ஆலை நிர்வாகத்தில் அனைத்து ஜெர்மன் தொழிலாளர்களுக்கும் அதிகாரம் அளிக்கும் ஆலை கவுன்சில் சட்டம் ஏப்ரல் 1946 இல் நேச நாடுகள் கவுன்சிலில் சட்டமாக்கப்பட்டது.

கிறித்தவ மத நிறுவனங்கள், முதலாளித்துவக் கட்சிகள் மற்றும் கட்சி சாராத தொழிற்சங்கங்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரின் ஆதரவுடன் கிழக்கு ஜெர்மனியில் நிறைவேறிய இச் சீர்த்திருத்தங்கள் எதுவும் மேற்கு ஜெர்மன் பகுதியில் நிறைவேறவில்லை.

**கலாச்சாரத் துறையில்:** வெறும் அரசியல் ராணுவ ரீதியிலானதாக மட்டுமல்லாமல் கலாச்சாரத் துறையிலும் நஞ்சாகப் பரவியிருந்த பாசிஸ்டுகளைக் களையெடுப்பதும், மறுநிர்மாணம் செய்வதும் ஜனநாயக சக்திகளின் அவசரக் கடமையாக இருந்தது. நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதம் ஆசிரியர்கள் நாஜிக் கட்சி உறுப்பினர்களாய் இருந்தனர். அவர்கள் அனைவரையும் நீக்கிவிட்டு மிகக் குறுகிய காலத்தில் 50,000 ஆசிரியர்களை புதிதாக நியமிப்பது, இழுத்து மூடப்பட்ட ஆயிரக்கணக்கான பள்ளிகளை மீண்டும் திறப்பது, மத நிறுவனங்களின் பிடியிலிருந்து கல்வி நிறுவனங்களை மீட்பது, கலை இலக்கியத் துறையில் பாசிஸ்டுகளை ஒழித்து இட்லரால் வேட்டையாடப்பட்ட ஜனநாயக வாதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பது, பாசிஸ்டு இளைஞர் அமைப்புகளை ஒழித்து ஜனநாயக இளைஞர் அமைப்புகளை உருவாக்குவது போன்ற பல்வேறு நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் கிழக்கு ஜெர்மன் பகுதியில் நிறைவேற்றப்பட்டன.

தங்களை மிகப்பெரும் பாசிச எதிர்ப்புப் போராளிகளாகச் சித்தரித்துக் கொள்ளும் அமெரிக்க மற்றும் மேலை ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் நலனைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்திற்காக இட்லர் எதிர்ப்புக் கூட்டணியில் இணைந்தார்கள். ஆனால் இட்லரின் தோல்விக்குப் பின் பாசிசத்தின் வேரான ஏகபோக, ஏகாதிபத்திய முதலாளிகள், ஜங்கர் நிலப்பிரபுக்களின் அரசியல் பொருளாதார ஆதிக்கத்தை ஒழிப்பது, நாஜி போர் குற்றவாளிகளைத் தண்டிப்பது, நாஜி அதிகாரிகளை பதவியிலிருந்து நீக்குவது போன்ற பாசிச எதிர்ப்பு நடவடிக்கைகள் என்று வரும்போது பின்வாங்கினர். 'கம்யூனிச அபாயத்திற்கெதிராக' அவர்களுடன் கூட்டு சேர்ந்து கொண்டனர். அதே நேரத்தில் ஜெர்மன் பாசிசத்தின் அடக்கு முறைக்குப் பலியானவர்களும், கருத்து ரீதியாகப் பலியானவர்களுமான ஜெர்மன் உழைக்கும் மக்களை - ஜெர்மன் நாட்டை - குற்றவாளிகளாக நடத்தினர்; அவமதித்தனர்.

போட்ஸ்டாம் ஒப்பந்தத்தின் அடிப்படையில் கறாரான முறையில் கிழக்கு ஜெர்மனியில் சீர்திருத்தங்கள் அமலாக்கப்படத் தொடங்கியவுடனேயே அவ்வொப்பந்தத்தை மீறுவதென மேலை ஏகாதிபத்தியங்கள் முடிவு செய்துவிட்டன. ஒப்பந்தத்தி அடிப்படையில் ஜெர்மனி முழுவதற்குமா மைய நிர்வாக உறுப்பொன்றைத் தோர் விக்க அவை மறுத்தன. ஒன்றுபட்ட ஜெர் னியை உருவாக்குவதைப் பற்றி பேச மறு துக் கொண்டே ஐரோப்பா முழுவதையு ஒன்றுபடுத்துவது பற்றி கதையளந்த மேற்கு ஜெர்மன் பகுதிகளிலிருந்த முதல ளித்துவக் கட்சிகள் மற்றும் சமூக ஜனநா கக் கட்சியின் வலதுசாரிப் பிரிவினர் முல ஜெர்மனியைப் பிளவுபடுத்துவதற்கு ஆத வாகக் கருத்துப் பிரச்சாரம் செய்தனர்.

கிழக்கு ஜெர்மனியின் ஐக்கிய சோ விஸ்டு கட்சி ஜெர்மனி முழுமைக்குமா ஒரே அரசியல் நிர்ணயச் சட்டம், ஒரே அர வேண்டுமென்ற பிரச்சாரத்தை செப்.194 இல் துவக்கியது. பாசிச எதிர்ப்பு ஜனநாய அரசியல் சட்ட நகல் ஒன்றையும் முன்வைத் தது. ஜெர்மன் மக்கள் தாங்கள் சேர்ந்திருப் பதா பிரிந்து செல்வதா என்பதைத் தீர்மா னிக்க பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்றும் கோரியது. அமெரிக்க, பிரெஞ்சு, பிரிட்டிஷ் அரசுகளும், அவர்க ளது எடுபிடியாக இயங்கிய மேற்கு ஜெர்மன் முதலாளித்துவக் கட்சிகளும் இதை எதிர்த்தன.

லண்டனில் நடைபெற்ற நான்கு நேச நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தில் ஜெர்மனி முழுவதிலிருந்தும் வந்திருந்த மக்கள் பிரதிநிதிகள் தங்கள் கருத்தை முன்வைக்க அனுமதி கோரினர். ஜெர்மனியின் எதிர்காலம் குறித்து முடிவு செய்யும் உரிமை ஜெர்மன் மக்களுக்குத் தான் உண்டு என்ற கருத்தை வலியுறுத்தி வந்த ரசியா அவர்களை அனுமதிக்கக் கோரியது. அமெரிக்கா உள்ளிட்ட மற்ற மூன்று நாடுகளும் கருத்துக் கூறுவதற்குக் கூட அவர்களை அனுமதிக்கவில்லை. ஜெர்மன் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்தனர்; தங்களது ஆதிக்க வெறியை வெட்கக்கேடான முறையில் வெளிக்காட்டிக் கொண்டனர்.

ஜனவரி'48 இல் அமரிக்கா, பிரிட்டனின் செல்வாக்குக்கு உட்பட்ட பகுதிகளில் தனித்தனியே உச்சநீதிமன்றம், ரிசர்வ் வங்கி ஆகியவை ஒப்பந்தத்துக்கு விரோதமாக அமைக்கப்பட்டன. 5 லட்சம் ஜெர்மன் துருப்புகள் அடங்கிய ராணுவம் ஒன்றை அமைக்க வேண்டுமென அமெரிக்க ராணுவ கவர்னர் அமெரிக்க அரசுக்கு யோசனை முன்வைத்தார்.

போட்ஸ்டாம் ஒப்பந்தத்தை மீறி ஜெர்மனியை பிளவுபடுத்தும் நடவடிக்கைகள் துரித கதியில் தொடர்ந்தனர். இதை எதிர்க்கும் முகத்தான் ஜெர்மன் ஐக்கியத்திற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமெனக் கோரி கையெழுத்தியக்கம் ஒன்றை நடத்துமாறு கிழக்கு ஜெர்மன் மக்கள் காங்கிரஸ் அறைகூவல் விட்டது. மேற்கு ஜெர்மன் பகுதியில் இக் கையெழுத்தியக்கத்தைத் தடை செய்து கையெழுத்து வாங்க முனைவோரை எல்லாம் அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சு நிர்வாகங்கள் கைது செய்தன. ஆனால் இதையும் மீறி மொத்த ஜெர்மன் வாக்காளர்களில் 40% பேர் இம் மனுவில் கையெழுத்திட்டு அனுப்பினர்.



படிப்பகம்

www.padippakam.com

ஒன்றுபட்ட ஜெர்மனிக்கு ஆதரவான கோரிக்கை வலுப்பதைக் கண்டு அஞ்சிய மேலை ஏகாதிபத்திங்கள் பிளவை துரிதப்படுத்தின. தங்களது கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளில் பழைய நாணயம் (Currency) செல்லாது என அறிவித்து புதிய நாணயத்தை அறிமுகப்படுத்தின. இதன் விளைவாக கிழக்கு ஜெர்மனிக்கும் மேற்கு ஜெர்மனிக்குமிடையே இருந்த அனைத்து பொருளாதார உறவுகளும் துண்டிக்கப்பட்டன. நான்கு நேசநாடுகளின் கூட்டுக் கட்டுப்பாட்டில் இருந்த பெர்லின் நகரம் குழப்பத்தில் ஆழ்த்தப்பட்டது. தாங்களே வெளியிட்ட அறிவிப்புகள், ஒப்பந்தங்களை எல்லாம் மீறிய இந்த நடவடிக்கை மூலம் ஜெர்மனியை உடைத்து விட்டதை மறைமுகமாக அறிவித்தன மேலை ஏகாதிபத்தியங்கள்.

தாங்களே தோற்றுவித்த இந்த நெருக்கடியில் இருந்து உலகின் கவனத்தைத் திசைதிருப்பவும், பதற்ற நிலையை உருவாக்கவும் அமெரிக்கா தனது அடுத்த சதித்திட்டத்தையும் உடனே அரங்கேற்றியது. பாசிச எதிர்ப்பு நேசநாடுகள் கூட்டணி நீடித்துக் கொண்டிருக்கும் போதே மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளை ஒன்றிணைத்து "வட அட்லாண்டிக் ஒப்பந்த கூட்டமைப்பு (நேட்டோ -(NATO) ) எனும் ராணுவக் கூட்டை அமெரிக்கா உருவாக்கியது. இட்லரின் கிழக்கு ஐரோப்பிய ஆக்கிரமிப்பிற்கு தலைமை தாங்கிய நாஜி ராணுவத் தளபதிகளை இதற்கு ஆலோசகர்களாக நியமித்துக் கொண்டது. இந்த நடவடிக்கைகள் மூலம் போட்ஸ்டாம் ஒப்பந்தத்தை கேலிக்குள்ளாக்கியது. (இதற்கு வெகு காலத்திற்குப் பின்னர்தான் வார்சா ஒப்பந்த நாடுகளை ரசியா உருவாக்கியது)

மேற்கண்ட நடவடிக்கைகளால் நடைமுறையில் பிளவுபடுத்தப்பட்ட ஜெர்மனியை ஒன்றிணைக்க ரசியா மீண்டும் முயன்றது. கிழக்கு - மேற்கு ஜெர்மனிகளுக்கிடையே போக்குவரத்து, வர்த்தகம் ஆகியவற்றிற்கு விதிக்கப்பட்டிருந்த தடை ரசியா முயற்சியினால் மே'49 இல் தளர்த்தப்பட்டது. ஒன்றுபட்ட ஜெர்மனியின் மக்கள் ஒரு ஜனநாயக பூர்வமான தேர்தலின் மூலம் தங்களுக்கு விருப்பமான சமூக அமைப்பையும் அரசையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும், சேர்த்திருப்பதா பிரிந்து போவதா என்பதைத் தீர்மானித்துக் கொள்ளவும் உரிமை வழங்கப்பட வேண்டுமென ரசியா மீண்டும் வலியுறுத்தியது. இதை மேலை ஏகாதிபத்தியங்கள் ஏற்க மறுத்தன.

எனவே வேறு வழியின்றி மே 1949 இல் கிழக்கு ஜெர்மன் பகுதியில் தனியே பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. அமெரிக்க, பிரெஞ்சு, பிரிட்டிஷ் பகுதிகளிலிருந்த பல்வேறு அமைப்புகள் தத்தம் சார்பில் தெரிவு செய்த 528 பிரதிநிதிகளும் இத்தேர்தலில் பங்கு பெற்றனர். மேலை ஏகாதிபத்திய நாடுகள் இன்று பிரச்சாரம் செய்வது போல கிழக்கு ஜெர்மனியை ஸ்டாலினோ, ஜெர்மன் கம்யூனிஸ்டு கட்சியோ சூழ்ச்சியின் மூலம் விழுங்கி விடவில்லை. தேர்தலுக்குப் பின் ஜெர்மன் மக்கள் கவுன்சிலில் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதித்துவத்தைப் பார்த்தாலே இது புரியும். ஐக்கிய சோசலிசக் கட்சி - 90 இடங்கள்; கிறித்தவ ஜனநாயகக் கூட்டமைப்பு - 45; லிபரல் ஜனநாயகக் கட்சி - 45; தேசிய ஜனநாயகக் கட்சி - 15; ஜெர்மன் விவசாயிகள் கட்சி - 15; ஜெர்மன் சுதந்திரத் தொழிற்சங்க சம்மேளனம் - 30; சுதந்திர ஜெர்மன் இளைஞர் அமைப்பு - 10; ஜனநாயக மாதர் கூட்டமைப்பு - 10; விவசாயிகள் பரஸ்பர உதவிக்கழகம் - 5; பாசிசத்திற்கு பலியானோர் சங்கம் - 5; விவசாயிகள் கூட்டுறவு - 5; கலாச்சார மையம் - 10; பெர்லின் சமூக ஜனநாயகக் கட்சி - 5; கட்சி அமைப்பு சார்பற்ற தனிநபர்கள் - 35.

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் பெரும்பாலோர் முதலாளித்துவ, நடுத்தர வர்க்க கட்சியினர் தானேயொழிய கம்யூனிஸ்டுகள் அல்லர். பல ஆண்டுகளாக நாஜிகள் செய்த கம்யூனிச எதிர்ப்பு, ரசிய எதிர்ப்பு பிரச்சாரம், மக்களிடையே ஏற்படுத்தியிருந்த தாக்கம் இதற்கொரு காரணம். இதையும் மீறி ஐக்கிய சோசலிச கட்சி-90 இடங்களைப் பிடிக்க முடிந்ததற்கும், அமெரிக்க, மேலை ஏகாதிபத்தியங்களுடன் மற்ற பாசிச எதிர்ப்பு அமைப்புகள் சென்றுவிடாமல் தடுத்ததற்கும் காரணம் பாசிச எதிர்ப்பு ஜனநாயகத் திட்டத்தையும் போட்ஸ்டாம் ஒப்பந்தத்தையும் உண்மையாக அமல்படுத்தியதுதான். இந்த புதிய ஜெர்மன் மக்கள் கவுன்சில் ஜெர்மன் ஐக்கியத்துக்காக விடுத்த கோரிக்கைகள் செவிடன் காதில் ஊதிய சங்காகின.

நாற்பதாண்டுகள் உருண்டோடி விட்டன. இந்த இடைப்பட்ட காலத்தில் நேட்டோவுக்கு எதிராக ரசியா கிழக்கு ஐரோப்பிய நாடுகளை சேர்த்து வார்சா ஒப்பந்த கூட்டணியை உருவாக்கியது. குருச்சேவ் காலத்தில் பெர்லின் சுவர் எழுப்பப்பட்டது. ரசியாவும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் முதலாளித்துவ நாடுகளாகச் சீரழிந்தன. அதன் விளைவாக ஜெர்மனி உள்ளிட்ட கிழக்கு ஐரோப்பிய 'கம்யூனிஸ்டுகள்' தூக்கியெறியப்பட்டனர்.

இவற்றையெல்லாம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஜெர்மனி உடைந்ததற்கான பழியையே ஸ்டாலின் மீது சுமத்துகின்றன மேலை ஏகாதிபத்தியங்கள். ஆனால் இரண்டாம் உலகப் போருக்கு முன்னும், பின்னும் எவ்வகையிலேயும் ஜெர்மன் பாசிஸ்டுகளுடன் கூட்டு சேர்ந்து ரசியாவை ஒழிப்பதற்கே அமெரிக்காவும், மேலைநாடுகளும் முயன்று வந்துள்ளன என்பது வரலாற்று உண்மை. ரசியாவின் தொடர்ந்த போராட்டத்தினால்தான் நூரன்பர்க் விசாரணை நடந்தது - ஜெர்மன் பாசிசத்தின் கொலைவெறி உலக மக்களிடையே அம்பலமானது. இத்தனைக்கும் இடையில் நாஜிகளுடனான தங்களது கள்ள உறவை மேலை நாடுகள் தொடர்ந்தன; இன்றுவரை தொடர்கின்றன.

தற்போது உருவாகியுள்ள 'ஒன்றுபட்ட' ஜெர்மனியில் புதிய நாஜிகள் வளர்ந்து வருவதற்கு அன்று முதல் இன்றுவரை அமெரிக்க, மேலை ஏகாதிபத்தியங்களே காரணம். வரலாற்றுப் புரட்டுகளை மீறி இனிவரும் நிகழ்ச்சிகள் இதை நடைமுறையில் மீண்டும் நிரூபிக்கும்.

1945 இல் சோசலிசத்திடம் ஜெர்மனியைப் பறிகொடுக்க வேண்டி வருமோ என்ற அச்சத்தினால் மேலை ஏகாதிபத்தியங்கள் ஜெர்மனியைப் பிளந்தன; இன்று அந்த அபாயம் நீங்கிவிட்ட நிலையில் மேற்கு ஜெர்மன் ஏகாதிபத்தியம் கிழக்கு ஜெர்மனியை விழுங்கியிருக்கிறது. அன்று ஜெர்மனியைப் பிளந்த போதும் சரி, இன்று "இணைக்கும் போதும்" சரி முடிவு எடுத்தவர்கள் ஏகபோக முதலாளிகள்தான் - ஜெர்மன் மக்கள் அல்ல.

● பாலன்

# ஆதீனம் கல்லூரியின் அகங்காரம்!

மாயவரம், தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி இந்து மேல்சாதிவெறி கூடாரமாகவும் ஊழலின் வளமான இடமாகவும் இயங்குகிறது. கடந்த 10 ஆண்டு காலமாக சட்டப்பூர்வமாக இக்கல்லூரியில் நிரப்பப்படவேண்டிய தாழ்த்தப்பட்டோருக்கான பணியிடங்களில் மேல் சாதியினரையே நிரப்புகிறது.

இக்கல்லூரியில் எழுத்தராக பணிபுரியும் கோ.முத்துக்குமாரசாமி தருமபுரம் ஆதீனம் சந்நிதானத்தின் அண்ணன் மகன் ஆவர்.

இவர்தான் பணியிடங்களை நிரப்புவதற்கு பணம் வாங்கும் புரோக்கர். தேவையான பணியிடங்களுக்கு பொருத்தமான தாழ்த்தப்பட்ட நபர்கள் இல்லையென்று வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சான்றிதழ் வாங்கி விடுவேன் என்று மிரட்டியே தாழ்த்தப்பட்டவர்களின் பணியிடங்களுக்கு பணம் கறப்பவர்.

இக்கல்வியாண்டில் அக்கல்லூரியில் ஆங்கில பேராசிரியர் பணியிடம் தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் வணிகவியல் துறையிலும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒரு பணியிடம் உள்ளது. ஆனால் அந்த பணியிடத்தை மேல் சாதியினருக்கு ஒதுக்குவதற்கு சதிவேலை நடக்கிறது. இதற்கு வசதியாக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நபர்களை கோரவில்லை.

இதுமட்டுமல்ல, தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசிடம் வாங்கும் உதவித்தொகையையும் ஆண்டு தோறும் உரிய காலத்தில் வழங்குவதில்லை! இவ்வாண்டும் அப்படித்தான், உதவித்தொகை வழங்குமாறு ஆணை வந்தபிறகும் கூட நிர்வாகம் தரவில்லை!

பற்றற்ற துறவிகள் தான் - பண்டாரங்கள், ஆதீனங்கள், சங்கரமடங்கள், வாரியார்கள், மேல்மருவத்தூர் ஆதிபராசக்திகள் என்று இன்னும் நம்மை நம்பச் சொல்கிறார்கள். இல்லை. கள்ளச்சாராய பேர்வழிகள் மாதிரி இவர்களும் கல்வி வியாபாரிகள், மூன்று சீட்டு பேர்வழிகள், சாதிவெறியர்கள் தான் என்பதை அம்மணமாக காட்டுகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல் 'புரட்சி' செய்யும் போலிகள்!

அன்று பிரபல தமிழ் சினிமா நடிகரின் பிறந்த நாள். அவரது ரசிகர்களான இளைஞர்கள் தமது தலைவரது பிறந்தநாளைக் கோலாகலமாகக் கொண்டாடி விட்டு கும்பலாக மருத்துவமனைக்குச் சென்று ரத்த தானம் செய்தனர். பத்திரிக்கைகள் இதைப் படமெடுத்துப் பாராட்டி எழுதின.

அன்று ஆகஸ்ட் 15. அடையாத சுதந்திரத்தை அறிவிக்கும் நாள். புரட்சி பேசும் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் இளைஞர் அமைப்பான இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தைச் சேர்ந்த ஆயிரம் பேர் திரண்டு அன்று சென்னையில் ரத்த தானம் செய்தனர்.

ரசிகர் மன்ற இளைஞர்களும் ரத்ததானம் செய்கின்றனர். 'மார்க்சிஸ்ட்' கட்சி இளைஞர்களும் ரத்ததானம் செய்கின்றனர். கடைசியில் ரசிகர் மன்றத்துக்கும் வாலிபர் சங்கத்துக்கும் வித்தியாசம் இல்லாமல் போனது. இப்படி ரசிகர் மன்றத்தோடு ஒப்பிட்டு கொச்சைப் படுத்துவது வக்கிரமானது என்று 'மார்க்சிஸ்ட்' கட்சி இளைஞர்கள் வாதிடலாம். ஆனால் வாலிபர் சங்கத்தின் செயல்பாடுகளை கூர்ந்து நோக்கும் எவரும் அதற்கும் ரசிகர் மன்றத்துக்கும் அதிகம் வித்தியாசமில்லை என்ற முடிவுக்கே வர முடியும்.

ரசிகர் மன்றத்துக்காரன் பேருந்து நிறுத்தங்களில் கால அட்டவணை பலகையை எழுதி வைக்கின்றான். வாலிபர் சங்கத்தினரும் அதேபோல எழுதி வைக்கின்றனர். ரசிகர் மன்ற இளைஞர்கள் மாலை நேரங்களில் தெரு ஓரத்தில் நின்றபடியே கேரம் போர்டு விளையாடிப் பொழுது போக்கி அரட்டையடிக்கின்றனர். வாலிபர் சங்கத்தினரும் அவ்வாறே செய்கின்றனர். ரசிகர் மன்ற இளைஞர்கள் தனது 'நாயகன்' புதிய திரைப்படத்தில் தோற்றமளிக்கும் பாணியில் புது மாடல் தொள தொள பேண்ட் - சட்டையும் பின் மண்டையில் கொண்டை போட்டாற் போன்ற கிராப்பும் வெட்டிக் கொண்டு திரிகிறான். வாலிபர் சங்க இளைஞர்களின் நடை - உடை - பாவனைகளும் அதே போலத் தான் உள்ளது.

இது அபத்தமானது; நாங்கள் இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டம், மக்களின் அடிப்படை சுகாதார வசதிகள், ரேஷன் கடை ஊழல்கள், சாலை - மின்விளக்கு - குடிநீர் - மருத்துவமனை வசதிகள் முதலானவற்றுக்காகத் தொடர்ந்து போராடி வருகிறோம். இதே போல பேருந்து - ரயில் கட்டண உயர்வு, பள்ளி - கல்லூரிகளில் கட்டாய நன்கொடை வசூலிப்பு, ஆபாசத் திரைப்படங்கள் முதலானவற்றுக்கு எதிராகவும் இளைஞர்களைத் திரட்டிப் போராடுகிறோம். இளைஞர்களை புரட்சிகர ஜனநாயகப் பாதையில் பயிற்றுவிக்கிறோம் என்று வாதிடுகின்றனர்.



கல்கத்தாவில் பேருந்துக் கட்டண உயர்வை எதிர்த்துப் போராடுவோரின் மண்டையைப் பிளக்கும் போலீசு. உழைக்கும் மக்களுக்கான ஆட்சியா?

இந்தப் பிரச்சினைகளுக்காக இவர்கள் என்னென்ன போராட்டம் நடத்தினார்கள், எப்படிப் போராடினார்கள் என்பது ஒரு புறமிருக்கட்டும். இவர்கள் குறிப்பிடும் பிரச்சினைகள் இந்தியா முழுவதும் உள்ளது. போலிக் கம்யூனிஸ்டுகள் ஆளும் மே.வங்கம், கேரளாவிலும் கூட இந்தப் பிரச்சினைகள் உண்டு. 'உழைக்கும் மக்களுக்கான அரசு', 'வர்க்கப் போராட்டத்துக்கான கருவி' என்றெல்லாம் சித்தரிக்கப்படும் 'இடதுசாரி' அரசு இப்பிரச்சினைகளை எப்படி தீர்க்கிறது. அதன் தொழிற்சங்க, விவசாய - இளைஞர் சங்கங்கள் எப்படி போராடுகின்றன என்பதுதான் இங்கே முக்கியமானது.

மே.வங்கத்தில் போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆட்சி 10 ஆண்டுக்கும் மேலாகத் தொடர்கிறது. அங்கே இன்னமும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப் படவில்லை என்பது நாடறிந்த உண்மை. தாங்கள் அதிகாரத்தில் இல்லாத மாநிலத்தில் இதே பிரச்சினைகளுக்காக இயக்கம் நடத்தும் இப்போலிக் கம்யூனிஸ்டுகள், மே.வங்கத்தில் இவற்றை அறவே புறக்கணிக்கின்றனர். அதன் வெகுஜன அமைப்புகள் 'இடதுசாரி' அரசின் தொங்கு சதையாக வாய்மூடிக் கிடக்கின்றன. எதிர்த்துப் போராடுவோரை சதிகாரர்களாகச் சித்தரித்து மிருகத்தனமாக அடக்கவும் செய்கின்றனர்.

### 'மார்க்சிஸ்டுகள்' உடைத்தால் மண்குடம்!, மற்றவர்கள் உடைத்தால் பொன்குடம்!

இங்கே பாசிச எம்.ஜி.ஆர் அரசும், கருணாநிதி அரசும் பேருந்துக் கட்டணங்களை அநியாயமாக உயர்த்தின. அப்போதெல்லாம் ''உலக வங்கி உத்திரவுக்கு அடிபணியாதே! கட்டண உயர்வை ரத்து செய்!'' என்று பேருந்துகளில் போஸ்டர் ஒட்டிய போலிக் கம்யூனிஸ்டுகள், மே.வங்கத்தில் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தியதோடு, அதை நியாயப்படுத்தவும் செய்தனர். இரு மாதங்களுக்கு முன்பு பேருந்து - டிராம் கட்டண உயர்வை எதிர்த்து எதிர்க் கட்சியினர் போராடியபோது மே.வங்க 'இடது சாரி' அரசு பாசிச எம்.ஜி.ஆரைப் போலவே மிருகத்தனமாக ஒடுக்கியது. இங்கே கட்டண உயர்வை எதிர்த்துப் போஸ்டர் ஒட்டும் வாலிபர் சங்கத்தினர், அங்கே போலீசாருடன் சேர்ந்து கொண்டு போராடுவோரின் மண்டையைப் பிளந்தனர்.

இதுவே இப்போது மே.வங்க வாலிபர் சங்கத்தின் புரட்சிகர நடவடிக்கையாகி விட்டது. ஆளும் 'இடதுசாரி' அரசை விமர்சிப்போரும், அதன் மக்கள் விரோத செயல்பாடுகளை அம்பலப்படுத்துவோரும் புரட்சியின் எதிரிகளாகத் தாக்கப்படுவதுதான் தொடர்கிறது. அதற்கேற்ப இளைஞர் அமைப்புகளின் தன்மையும் மாறி, புரட்சிகர உணர்வு கொண்ட இளைஞர்களுக்குப் பதிலாக குண்டர் படை பாசறையாகிவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

கல்கத்தா நகராட்சித் தேர்தல் இதை தெளி வாகவே நிருபித்துக் காட்டியது. இதர ஓட்டுக் கட்சிகளைப் போலவே, கையில் நாட்டு வெடி குண்டும் துப்பாக்கியும் ஏந்தி வாக்காளர்களைப் பீதியூட்டி விரட்டிவிட்டு கள்ள ஓட்டுப் போடும் 'புரட்சி'ப் பணியை போலிக் கம்யூனிஸ்டு அணிகள் சாதித்துக் காட்டினர்.

வாலிபர் சங்கம் மட்டுமல்ல; மாணவர் மாதர் சங்கங்களும், தொழிலாளர் - விவசாய சங்கங்களும் இதே அளவுக்குத் தரம் தாழ்ந்து ஆளும் 'இடதுசாரி' அரசின் தொங்கு சதைகளாகிவிட்டன.

### மாதர் சங்கத்தின் மாய்மாலம்

ஏறத்தாழ இரு மாதங்களுக்கு முன்பு டெல்லி செல்லும் தாதர் எக்ஸ்பிரசில் பயணம் செய்த சில இளம் பெண்கள் சமூக விரோதிகளால் ஓடும் ரெயிலிலேயே கற்பழிக்கப் பட்டனர். இச்செய்தி வெளியானதும் 'மார்க்சிஸ்ட்' கட்சித் தலைமையின் கீழுள்ள ஜனநாயக மாதர் சங்கம், சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்தது. இந் நிகழ்ச்சிக்கு ஒரு மாதத்துக்கு முன் கல்கத்தா புறநகரில் வங்க தேச அகதிகள் தங்கியுள்ள பிராட்டி என்னுமிடத்தில் ஒரு சமூக விரோத கும்பல் 6 பெண்களை நிர்வாணமாக்கி நடக்கவிட்டு ரசித்து பின்னர் அவர்களைக் கற்பழித்தது. இக் கொடுஞ் செயலின் சம்பந்தப்பட்டவன் ஒரு ஆட்டோ ஓட்டுநர். அவன் சார்ந்துள்ள ஆட்டோ ஓட்டுநர் சங்கம் சி.ஐ.டி.யு.வுடன் இணைக்கப் பட்டதாகும். குற்றம் சாட்டப்பட்ட ஆட்டோ ஓட்டுநரின் அண்ணன் அப்பகுதி 'மார்க்சிஸ்ட்' கட்சிப் பிரமுகர். இத்தனையும் தெரிந்த பிறகு மே.வங்க மாதர் சங்கம் போர்க்கொடி தூக்குமா என்ன? ஓடும் ரயிலில் நடந்த கற்பழிப்புக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் செய்த மாதர் சங்கம் அங்கே வாய்மூடிக் கிடந்தது. ஆர்ப்பாட்டம் கிடக்கட்டும்; குறைந்த பட்சம் ஆறுதல் சொல்லக் கூட அது முன்வரவில்லை.

இச் சம்பவத்துக்கு ஒரு மாதம் முன்னர் பண்டாலா எனுமிடத்தின் இரு பெண் மருத்துவ ஊழியர்கள் சமூக விரோதிகளால் பட்டப்பகலில் தாக்கப்பட்டு மாண்டனர். மே.வங்க ஜனநாயக மாதர் சங்கம் இதற்கெதிராக எதுவும் செய்ய வக்கற்று நெருப்புக் கோழியாக தலையை மண்ணில் புதைத்துக் கொண்டது.

தாங்கள் ஆட்சியில்லாத மாநிலங்களில் எதிர்ப்பும் போராட்டமும் நடத்துவது கூட கூட்டணிக் கட்சி - ஆட்சிகளின் தன்மைக்கேற்ப மாற்றிக் கொள்வதென்பது 'மார்க்சிஸ்டு'களின் புதிய நடைமுறையாகி விட்டது. இப்போது அவர்கள் தேசிய முன்னணியின் தோழமைக் கட்சி. முன்பு ராஜீவ் ஆட்சி திணித்த விலையேற்றச் சுமையை எதிர்த்துப் போராட்டங்கள் நடத்திய 'மார்க்சிஸ்டுகள்' இப்போது தேசிய முன்னணி அரசு திணிக்கும் விலையேற்றத்தைக் கண்டித்து அறிக்கை விடுவதோடு சரி. எம்.ஜி. ஆரின் சாராயக் கொள்கையை எதிர்த்த 'மார்க்சிஸ்டுகள்', கூட்டணிக் கட்சி என்பதால் கருணாநிதியின் மலிவு விலை சாராயத்தை வரிந்து கட்டிக் கொண்டு ஆதரிக்கிறார்கள். மாதர் சங்கத் தலைவி பாப்பா உமாநாத் இது கள்ளச் சாராயத்தை ஒழிக்கும் என்றுவேறு நியாயப் படுத்துகிறார்.



–பிராட்டியில் நடந்த கற்பழிப்புக்கு எதிராக பகுதிவாழ் மக்களின் ரயில் மறியல் போராட்டம். 'மார்க்சிஸ்டு' மாதர் சங்கம் இக்கற்பழிப்பு கொடுமைக்கு எதிராக வாய் திறக்கவில்லை.

### விவசாய சங்கமா? பஞ்சாயத்து சங்கமா?

மக்கள் ஜனநாயகப் புரட்சியைத் திட்டமாகக் கொண்டு விவசாயிகளை வர்க்கப் போராட்டத்தில் பயிற்றுவிப்பதாகக் கூறும் போலிக் கம்யூனிஸ்டுகள் வங்கத்தில் உருவாக்கிய விவசாய சங்கங்களை பஞ்சாயத்துப் பதவிப் போராட்டத்துக்கான அமைப்புகளாக மாற்றியதற்கு மேல் வேறொன்றும் செய்யவில்லை. கடந்த 10 ஆண்டுகளாக வங்கத்தில் 'மார்க்சிஸ்டு'களின் விவசாய சங்கங்கள் போராடியதாக வரலாறில்லை. வர்க்கப் போராட்டத்துக்குப் பதில் பஞ்சாயத்து பதவிக்கான போராட்டம்தான் அங்கே நடந்துள்ளது. கட்சி இதழ்களிலும், இதர நாளேடுகளிலும் அரசின் சாதனைகளை விளக்கி விளம்பரம் கொடுப்பதுதான் பஞ்சாயத்துக்களின் வேலையாக உள்ளது. வறுமை ஒழிப்பு, வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு ஏதோ கம்யூனிசம் பூத்துக் குலுங்குவதைப்போல இந்த விளம்பரங்களில் குறிப்பிடுகின்றனர். இவை 'இடதுசாரி' அரசு தனிச்சிறப்பாக உருவாக்கிய திட்டங்களோ அல்லது விவசாய சங்கங்களின் மாநாட்டுத் தீர்மானத்தின் கீழ் உருவான திட்டங்களோ அல்ல. மதிய அரசுத் திட்டத்தின் கீழ் வரும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற வேலை உத்திரவாதத் திட்டம் முதலானவைதான். இது தவிர பஞ்சாயத்துகளுக்கு ஒதுக்கப்படும் குடிநீர் - வடிகால் திட்டம், சாண எரிவாயுத் திட்டம் போன்றவற்றைத்தான் இப்படி பெருமையோடு குறிப்பிடுகிறார்கள்.

வங்கத்தில் உருவான இந்த மந்த நிலையின் எதிரொலியாக நாடெங்கும் உள்ள 'மார்க்சிஸ்டு'களின் விவசாய சங்கங்கள் செயலிழந்து முடமாகி விட்டன. ஒரு புறம் கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையின் கீழான போர்க் குணமிக்க விவசாய சங்கங்களும் மறுபுறம் சரத் ஜோஷி, திகாயத் முதலானோர் தலைமையிலான பணக்கார விவசாயிகளது சங்கங்களும் உருவாகி வளர்ந்த பிறகு 'மார்க்சிஸ்டு'களின் சங்கங்கள் இருக்கின்ற இடம்கூடத் தெரியவில்லை.

### தொழிற்சங்க மலட்டுத்தனம்

எல்லாவற்றையும் விட, பாட்டாளி வர்க்கப் பாசறையாக வர்ணிக்கப்படும் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் தொழிற்சங்கமான சி.ஐ.டி.யு. கடந்த 10 ஆண்டுகளாக வலுவான எந்த ஒரு போராட்டத்தையும் நடத்தவில்லை. அவசர நிலைக்கு முன்பு நடந்த மகத்தான ரயில்வே தொழிலாளர் போராட்டத்தில் பங்கேற்று அதில் சில முன்னோடிகள் தியாகிகளான பிறகு அதுவரை இருந்த சி.ஐ.டி.யு.வின் போர்க் குணம் கூட மழுங்கிப் போனது. ஆலை மூடல், ஆட்குறைப்பு, கதவடைப்பு, விலையேற்றம், கருப்புச் சட்டங்கள் என்று பல முனைகளிலும் ஆளும்

கல்கத்தா நகராட்சித் தேர்தல். கையில் ஆயுதம் ஏந்தி கள்ள ஓட்டுப் போடும் 'மார்க்சிஸ்டு' குண்டர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

வர்க்கங்களும் முரட்டுத்தனமாக தொடர்ந்து தாக்கிவரும் நிலையில் தர்ணா, மறியல், உண்ணாவிரதம் முதலான நீர்த்துப் போன போராட்ட முறைகளைக்கூட கைவிட்டு தீர்மானம் போடுவது, மனு கொடுப்பது, வழக்கு தொடுப்பது, கோரிக்கை தினம் நடத்துவது என்பதாக அதன் செயல்பாடுகள் சுருங்கிவிட்டது. அரசியல் போராட்டங்களல்ல; பொருளாதாரக் கோரிக்கைக்கான தொழிற்சங்கவாத போராட்டங்களைக் கூட நடத்தத் திராணியற்று இதர ஓட்டுக் கட்சிகளின் தொழிற் சங்கங்களைப் போல பேரங்கள், பேச்சு வார்த்தைகள் நடத்துமளவுக்கு சிறுமைப்பட்டுக் கிடக்கிறது.

இங்கே, "மூடிய ஆலைகளைத் திற! நலிந்த ஆலைகளை அரசே ஏற்று நடத்து!" என்று கோரிக்கை எழுப்பும் சி.ஐ.டி.யு.வினர் வங்கத்தில் நூற்றுக் கணக்கான சணல் ஆலைகள் மூடப்பட்டபோது செயலற்றுக் கிடந்தனர். "டாட்டா - பிர்லா கூட்டாளி, பாட்டாளிக்கும் பகையாளி!" என்று கோஷம் போட்ட 'மார்க்சிஸ்ட்' சங்கத்தினர், மே.வங்க - கேரள 'இடதுசாரி' அரசுகள் டாட்டா, பிர்லா, அம்பாணியுடன் கை கோர்த்துக் கொண்டபோது, பன்னாட்டு ஏக போகங்களுக்கு பாய் விரித்தபோது ஊமையாக நின்றனர்.

வங்கம் மட்டுமல்ல; இதர மாநிலங்களிலும் அது கிட்டத்தட்ட முடக்கப்பட்டு விட்டது. தமிழகத்தில் '79 - '80 ஆண்டு டி.வி.எஸ் - டி.ஐ. சைக்கிள் போராட்டத்துக்குப் பிறகு கிட்டத்தட்ட முதுகெலும்பே முறிக்கப்பட்ட நிலையில்தான் உள்ளது. 'மார்க்சிஸ்ட்' தொழிற்சங்கத்தின் கிழடு தட்டிப் போன பழைய தலைமை போனதும், புதிய திரிபுவாத நாயகர்களால் தொழிலாளர்களின் நம்பிக்கையைப் பெற முடியவில்லை. வீர தீரப் போராட்டங்களில் இறங்கவும் அவர்கள் தயாரில்லை. சட்ட வரம்புகளை உடைத்துக் கொண்டு முன்னேறவும் இச்சட்டவாதக் கம்யூனிஸ்டுகள் துணிவில்லை.

### நீர்த்துப் போன போராட்டமுறை பிழைப்புவாத சங்கங்கள்

இப்போதெல்லாம் காந்தீய முறையில் எதிரிக்கோ தமக்கோ பாதிப்பு இல்லாத வகையில் போராட்டங்களை நடத்துவதென்பதே 'மார்க்சிஸ்டு'களின் நடைமுறையாக உள்ளது. மேலைநாடுகளில் போலி சோசலிஸ்டுகள் பிரபலப்படுத்திய மனித சங்கிலி எனும் சாத்வீகப் போராட்டத்தைப் பின்பற்றுவதே அவர்களின் இப்போதைய போராட்ட முறையாக உள்ளது. வங்கத்திலே கள்ள ஓட்டுப் போட துப்பாக்கி தூக்கும் போலிகள், மதவெறிப் பாசிசக் கட்சியான பாரதீய ஜனதாவை வளர விட்டுவிட்டு அயோத்தி விவகாரம் இன்று முன்னணிக்கு வந்ததும், வகுப்புவாதத்தை எதிர்த்து மனித சங்கிலி போராட்டம் நடத்துகின்றனர். 'இடதுசாரி' அரசின் தொங்கு சதையாக மாறி நீர்த்துப் போன போராட்ட முறைகளில் ஊறிவிட்ட அதன் வெகுஜன அமைப்புகள் இதற்கு மேல் வேறென்ன செய்யும்?

இந்த லட்சணத்தில் ஒவ்வொரு முறையும் மாநாடு கூட்டப்படும் போதெல்லாம், ஊழியர்களை வர்க்கப் போராட்டத்தில் வளர்த்தெடுக்க தவறிவிட்டோம் என்று 'மார்க்சிஸ்டு' தலைவர்கள் அங்கலாய்த்துக் கொள்கின்றனர். அண்மையில் 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதிபாசு மே.வங்க பள்ளிகளில் இந்திய மாணவர் சங்கத்தைக் கட்டுமாறு ஆசிரியர்களுக்கு உத்திரவு போட்டுள்ளார். அரசாங்க தயவில், அதன் உத்திரவில் உருவாகும் மாணவர் அமைப்பு எப்படியிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.



கடவுளை நம்பும் 'மார்க்சிஸ்டு'! - ராமன் பட்டாதிரிபாடு; 'மார்க்சிஸ்டு' தலைவர் நம்பூதிரிபாடின் மைத்துனர். போலிக்கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்ததும் இவருக்கு திருவிதாங்கூர் தேவஸ்தான தலைவர் பதவியளித்து கௌரவித்துள்ளனர்.

அரசு - போலீசின் தொல்லைகளிலிருந்து தப்பிக்கவும் பிழைப்புவாத நோக்கங்களுக்காகவும் தமிழகத்தில் எம்.ஜி.ஆர் ஆட்சியின் போது ஆட்டோ ரிக்ஷாக்கள் அ.தி.மு.க. கொடியுடன் பறந்தன. இன்று கருணாநிதி ஆட்சிக்கு வந்ததும் தி.மு.க. கொடியைக் கட்டிக்கொண்டு ஆட்டோக்கள் பறக்கின்றன. அன்னை சத்யா நடைபாதை வியாபாரிகள் சங்கம், அன்னை அஞ்சுகம் சங்கமாக உருமாறியது. மே.வங்கத்திலுள்ள 'மார்க்சிஸ்டு'களின் சங்கங்களுக்கும் இவற்றுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?

### பூசையறையில் புரட்சி! மடாலயத்தில் 'மார்க்சிஸ்'டுகள்!

வெகுஜன அமைப்புகள் மட்டுமல்ல; போலிக் கம்யூனிஸ்ட் கட்சியே கூட இதர ஓட்டுக் கட்சிகளிடமிருந்து வேறுபடுத்த முடியாத அளவுக்கு பொருத்தமான முதலாளித்துவக் கட்சியாகச் சீரழிந்து விட்டது. புரட்சிக்கு மக்களை அணி திரட்டுவதாகக் கூறிய போலிக் கம்யூனிஸ்டுகள், முதற்கட்டமாக நாடாளுமன்ற ஜனநாயகத்தை அம்பலப்படுத்துவதாகக் கூறி அதில் பங்கேற்பதை நியாயப்படுத்தினர். நாடாளுமன்ற நாற்காலி அளித்த சுகத்தில் பின்னர் அரசாங்கத்தில் பங்கேற்பதை நியாயப்படுத்தி இதன் மூலம் மக்களுக்கு சில நிவாரண உதவிகள் செய்ய முடியும் என்றனர். 'மார்க்சிஸ்டு'களின் ஆட்சியில் மக்களுக்கு மயிரளவு நிவாரணம் கிடைத்தது என்றால் முதலாளிகள் மலையளவு ஆதாயம் அடைந்தனர்.

போலிக் கம்யூனிஸ்டுகள் முதன் முதலாக ஆட்சிக்கு வந்தபோது பீதியடைந்து வங்கத்தை விட்டு ஓடிய முதலாளிகள் இப்போது வங்கத்திலும் கேரளாவிலும்தான் மூலதனத்துக்கு உத்திரவாதம் உள்ளது; இங்குதான் தொழில் அமைதி நிலவுகிறது என்று ஓடோடி வருகின்றனர். போலிக் கம்யூனிஸ்டுகள் மார்தட்டிக் கொள்ளும் மே.வங்க நிலையான ஆட்சி உண்மையில் முதலாளிகளின் சுரண்டலுக்கு குந்தகம் இல்லாத, அதைக் கட்டிக்காக்கும் நிலையான ஆட்சியாகத்தான் உள்ளது.

அதெல்லாம் இருக்கட்டும். போலிக் கம்யூனிஸ்டுகள் உண்மையில் புரட்சி செய்யும் நோக்கமுடையவர்களாக இருந்தால் கோடிக்கணக்கில் செலவிட்டு நவீன கணிப்பொறி வசதியுடன் அடுக்கு மாளிகையில் கட்சி அலுவலகம் நடத்துவார்களா? அவர்கள் குறிப்பிடும் புரட்சியின் எதிரிகளான பெரு முதலாளிகளிடமிருந்தும் நிலப் பிரபுக்களிடமிருந்தும் தாக்குதல் வருவதாக இருந்தால் இப்படி மாநிலந்தோறும் கட்சி அலுவலகமும், நினைவு இல்லமும், ஆப்செட் அச்சகமும் நிரந்தரமாக நிறுவிக் கொள்ளத்தான் முடியுமா?

அரசியல் பலம்தான் அமைப்பு பலத்தைத் தரும் என்பது மார்க்சிய அரிச்சுவடி. சித்தாந்த அரசியல் ரீதியில் சீரழிந்து சந்தர்ப்ப வாதிகளாகிவிட்ட போலிக் கம்யூனிஸ்டுகள் தோற்றத்தில் பெரிய கட்சியாகத் தெரிந்தாலும் அதன் பலம் ஒதிய மரத்தைப் போலத்தான் உள்ளது. உண்மையில் அக்கட்சியின் பலம் ஆலய மடாலயங்களிலும், கூட்டுறவு சங்கங்களிலும் பஞ்சாயத்துகளிலும் தான் உள்ளது. கோயில் தேவஸ்தானக் கமிட்டிகளிலும், வட்டித் தொழில் நடத்தும் கூட்டுறவு சங்கங்களிலும் பங்கேற்று சொத்து சேர்க்குமளவுக்கு 'மார்க்சிஸ்டு'கள் முன்னேறி விட்டார்கள். 5 பைசா, 10 பைசா என்று உழைக்கும் மக்களிடமிருந்து நிதி திரட்டி இயக்கம் நடத்தும் புரட்சிகர பாரம்பரியத்தைக் கைவிட்டு அரசாங்க நிதியில் 'மார்க்சிஸ்டு'கள் மஞ்சள் குளிக்கிறார்கள். இதர ஓட்டுக் கட்சிகள் அரசாங்க பதவிகளின் மூலம் கட்சிக்கு நிதி திரட்டுவதைப் போலத்தான் கேரளத்திலும் மே.வங்கத்திலும் நடக்கிறது.

சொல்லிலே புரட்சி; செயலிலே எதிர்ப் புரட்சி. ஏந்துவது செங்கொடி; ஆட்சியை எதிர்த்தால் குண்டாந்தடி. ஊருக்கு கம்யூனிச உபதேசம்; சொந்த வாழ்க்கையில் முதலாளித்துவம் — இப்படி எந்த வகையில் பார்த்தாலும் புரட்சிக்கான அறிகுறி அறவே இல்லாத போலிக் கம்யூனிஸ்டுகள் முதலாளித்துவ ஓட்டுக் கட்சியாக சீரழிந்து போய் விட்டார்கள். இத்தகைய அயோக்கியத்தனத்தை அம்மணமாக ரஷியாவில் செய்த மைக்கரக போலிக் கம்யூனிஸ்டுகளின் குரு பீடத் தலைவர் கோர்பசேவுக்கு நோபல் பரிசளித்து முதலாளித்துவ வாதிகள் கௌரவிக்கின்றனர். இதே போல இந்தியப் போலிக் கம்யூனிசத் தலைவர்களுக்கு பரிசளிக்கிறார்களோ இல்லையோ; ஆனால் புரட்சியில் இறங்கும் உழைக்கும் மக்கள் இக் கம்யூனிசத் துரோகிகளுக்கு நிச்சயம் பாடம் புகட்டியே தீருவார்கள்.

● குமார்.



படிப்பகம்

www.padippakam.com




● இந்திய அரசியல் அமைப்பில் நடப்பது அரசியல் ஆதிக்கமா? சாதி ஆதிக்கமா? இந்தியாவிற்கு வர்க்கப் போராட்டத்துடன் சாதியப் போராட்டமும் தேவை என்று கருதுகிறேன். ஏனெனில் பெரும்பாலான நிகழ்ச்சிகளிலும் பின்னணியாக, மறைமுக பயங்கரவாத ஆயுதமாக, ஆதிக்க அடையாளமாக சாதி இருப்பதாக உணர்கிறேன். ஆனால் சில கம்யூனிசக் கட்சிகளில் சாதியக் கண்ணோட்டமின்றி பிரச்சினைகளை நோக்குகின்றனர். காரணம் கேட்டால், 'பொதுவான போராட்டங்களில் பங்கு பெற்றால் சாதிய உணர்வு மறைந்துவிடும்' என்று கூறுகின்றனர். சாதிய வேர்களைப் பிடுங்காமல், களையெடுப்பது போல் சாதிப் புரட்சி இல்லாவிட்டால் சமுதாயமே(னி) சீழ்பிடிப்பது நிச்சயம் என்று தோன்றுகிறது. தகுந்த விளக்கம் தரவும்.

— ஜெனிஃபர், திண்டுக்கல்.

● தற்போதைய இந்திய சமுதாய சூழ்நிலையில் நாம் நடத்த வேண்டியது வர்க்கப் போராட்டத்தையா அல்லது வர்ண (சாதி)ப் போராட்டத்தையா?

— மணிமாறன், சென்னை.

● நம்நாட்டில் தற்சமயம் நடைபெறும் இன, மத, சாதி, வகுப்புக் கலவரங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றால் வருங்காலத்தில் புரட்சிகரக் குழுக்கள் கூறுவது போல் வர்க்க அடிப்படையில் மக்களைத் திரட்டுவது எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்பது தெரியவில்லை. மேற்கூறிய கலவரங்களில் ஈடுபடுபவர்கள், பிற்போக்கான சிந்தனையுடையவர்கள் என்றாலும் தங்கள் சமூகத்திற்காக நிற்பவர்கள்; இவர்களைப் போன்றவர்களைத்தான் வர்க்க அடிப்படையிலும் திரட்ட முடியும். இவர்கள் தொடர்ச்சியான போராட்டங்களாலும் இழப்புகளாலும் இவர்களின் மனங்களில் ஏற்படும் கறைகளை அகற்றி அவர்களை வர்க்க உணர்வுக்குத் திருப்புவது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பது தெரியவில்லை. புரட்சிகரக் குழுக்கள் தங்கள் ஆயுத, சித்தாந்த, நடைமுறைப் போராட்டங்களை கொஞ்ச நாளைக்கு ஒத்தி வைத்து, குறைந்தபட்சம் மக்களிடம் இன, மத, சாதி, வகுப்புக்களின் உண்மை நிலைமைகளைக் கூறி, மக்களை இம்மாயையில் இருந்து விடுபட வைக்க முதல் நடவடிக்கையாகப் புரட்சிகரக் குழுக்கள் ஒன்றிணைந்து இதற்காக செயல்பட்டால் என்ன?

— வி.பி., உசிலம்பட்டி.

☆ நமது நாட்டிலுள்ள சாதிய அமைப்பின் மீதுள்ள நியாயமான வெறுப்பும், எப்போதோ நடந்திருக்க வேண்டிய மிகவும் தாமதப்பட்டுவிட்ட புரட்சியின் அவசர - அவசியத் தேவை பற்றிய உணர்வும் வாசகர்களின் கேள்விகளில் தெரிகிறது. சாதிய ஆதிக்கம் - கொடுமைகளைப் பற்றியும், அவற்றைக் களைவதன் அவசியம் குறித்தும் வாசகர் ஜெனிஃபர் எழுதியுள்ளார். இன, மத, சாதி, வகுப்புக் கலவரங்கள் வர்க்க அடிப்படையில் மக்களைத் திரட்டுவதற்குத் தடையாய் இருப்பது பற்றி வாசகர் வி.பி. எழுதியுள்ளார். பிரச்சினையின் முக்கியத்துவம் குறித்து வாசகர்களின் இந்தக் கருத்துக்கள் சரியானவையே. ஆனால், அதற்கு அவர்கள் வைக்கும் தீர்வுகளை நாம் ஏற்க முடியாது.

இந்தியாவில் வருணாசிரம - பார்ப்பனீய இந்து மதவெறியும் அதன் அடிப்படையில் சாதிய ஆதிக்கமும் நிலவுவதையே சட்டபூர்வ போலிக் கம்யூனிஸ்டுகள் மறுத்து வருகிறார்கள். இந்துமத வெறியையும், மேல் சாதி ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடுவதற்குப் பதில் சாதி, மத ஒருமைப்பாடு மற்றும் மதச் சார்பின்மை என்கிற சமரசவாதங்களை வைக்கின்றனர். இதற்குக் காரணம் அக்கட்சிகளின் தலைமையே இந்து மதவெறி மற்றும் மேல்சாதி ஆதிக்க நலன்களைப் பிரதி நிதித்துவப்படுத்துகிறது.

அதே சமயம் சாதி - இனவாதக் குழுக்களும் பிரமுகர்களும் வேறொரு தவறான கருத்தைக் கொண்டுள்ளனர். இந்தியாவிலுள்ள வருணசிரம பார்ப்பனீய இந்து மதம் மற்றும் சாதீய அமைப்பு மார்க்சிய - லெனினிய வர்க்கக் கண்ணோட்டத்துக்கு விதிவிலக்கானது; இந்தியாவில் மட்டுமே தனிச்சிறப்பாக நிலவக் கூடியது - என்கிறார்கள். இதுவும் ஏற்கக் கூடியதல்ல. முதலாளித்துவத்துக்கு முந்திய சமூக அமைப்புகள் - உற்பத்தி முறைகளை ஆய்வு செய்தபோது அடிமைச் சமுதாயத்துக்கு ரோமானியப் பழம்பண்டு சமூகத்தையும் நிலப்பிரபுத்துவ சமுதாயத்துக்கு ஜெர்மானிய நிலவுடமை சமூகத்தையும் வரைவிலக்கணங்களாக மார்க்சு எடுத்துக்கொண்டு பகுப்பாய்வு செய்தார். அவற்றிலிருந்து முதலாளித்துவத்துக்கு முந்திய சமூக அமைப்புகள் - உற்பத்தி முறைகளின் பொது விதிகளைத் தொகுத்து தனது வரலாற்றுப் பொருள் முதல் வாதக் கண்ணோட்டத்தை வரையறுத்தார். இந்தப் பொதுவிதிகள் உலகிலிருந்த எல்லா சமூக அமைப்புகளுக்கும் பொருத்தமாகவே உள்ளன; அதே சமயம் அப்பொதுவிதிகள் ஒவ்வொரு சமூக அமைப்பின் தனிச்சிறப்பான - கூடுதலான இயல்புகளை மறுப்பவையோ எதிரானவையோ அல்ல.

மார்க்சிய வர்க்கக் கண்ணோட்டத்தை - அதன் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தைப் பிரயோகிக்கும் போது ஒவ்வொரு நாட்டுப் புரட்சியாளர்களும் அதன் பொது விதிகளையும், அந்நாட்டின் தனிச்சிறப்பான அம்சங்களையும் சேர்த்தே பார்க்க வேண்டும் என்றுதான் மார்க்சு முதல் மாவோவரை வலியுறுத்தினார்கள். ஆனால் இங்குள்ள சட்டபூர்வப் போலிக் கம்யூனிஸ்டுகளும் சரி, சாதி - இனவாதக் குழுக்களும், பிரமுகர்களும் சரி — பொதுவிதிகள் அல்லது தனிச்சிறப்பான அம்சங்கள் ஆகிய இரண்டில் ஏதாவது ஒன்றை மட்டுமே பார்க்கிறார்கள். மற்றதை மறுக்கிறார்கள்.

## வருணாசிரம - பார்ப்பனிய இந்துவெறியும் சாதீய அமைப்பும் இந்தியாவுக்கு மட்டும் தனிச்சிறப்பானதா?

வருணாசிரம - பார்ப்பனீய இந்து வெறியும் அதன் அடிப்படையிலான சாதீய அமைப்பும் நமது நாட்டின் தனிச்சிறப்பான அம்சங்கள்; அவற்றை எதிர்த்து ஒழித்துக் கட்டவேண்டும். இதை ஏற்றுக் கொள்பவர்கள் மத்தியிலேயே மூன்று தீர்வுகள் முன்வைக்கப்படுகின்றன. முதலாவதாக சாதி - இனவாதக் குழுக்களும் பிரமுகர்களும் — நமது நாட்டில் வர்க்கங்களே சாதி வடிவங்களில் உள்ளன. எனவே சாதி ரீதியிலான புரட்சிதான் சரியான தீர்வாகும் என்கிறார்கள். குறிப்பாக நமது நாட்டைப் பொறுத்தவரை தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள்தான் பாட்டாளி வர்க்கமாக உள்ளனர்; இவர்களின் சர்வாதிகாரத்தை நிறுவுவதே புரட்சியின் கடமையாகும்; இன்னும் பிற்பட்ட சில சாதிகளை நட்பு சக்திகளாகக் கருதி ஐக்கிய முன்னணி அமைத்து பார்ப்பன - பனியா சாதிகளை எதிர்த்துப் புரட்சி நடத்த வேண்டும் என்கின்றனர். இவர்களிலே ஒரு பிரிவினர் ஆயுதப் போராட்டத்தின் மூலமும், இன்னொரு பிரிவினர் இட ஒதுக்கீட்டின் மூலமும் இந்தப் புரட்சியைச் சாதிக்க வேண்டும் என்கின்றனர்.

ஆனால் பார்ப்பன - பனியா கும்பல் தவிர வேறுபிற மேல் சாதிகளிலும், குறிப்பாக பிற்பட்ட சாதிகளிலும் நிலப்பிரபுத்துவ - தரகு அதிகார முதலாளி வர்க்கங்களின் பிரிவினர் உள்ளனர். இந்தச் சாதிகளிலும் உழைக்கும் வர்க்கப் புரட்சிப் பிரிவினர் உள்ளனர். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி சாதிகளிலும் ஊசலாடும் இடைத்தர சமூகத்தட்டு மக்கள் பிரிவினர் உள்ளனர். எனவே சாதிய ரீதியிலான புரட்சி வெறும் வாய்ச்சவடாலாகவே இருக்கிறது.

இரண்டாவதாக, வர்க்கப் போராட்டத்தையும் சாதியப் போராட்டத்தையும் இணைத்துப் புரட்சி செய்ய வேண்டும் என்று சில போலிப் புரட்சிக் குழுக்களும் சில மார்க்சிய - லெனினியக் குழுக்களும் சில ஆண்டுகளாகவே கூறிவருகின்றன. ஆனால் இதையும் எந்த அடிப்படையில், எந்த முறையில் சாதிப்பது என்று அக்குழுக்கள் கூறவே கிடையாது. அவற்றிலே சில குழுக்கள், பிரமுகர்கள்

படிப்பகம்

www.padippakam.com

1987 ஆகஸ்டில் சென்னையில் கூடி ''சாதியும் வர்க்கமும்'' பற்றி ஒரு ஆய்வரங்கம் நடத்தினார்கள். அதிலும் அதன் பிறகும் இந்த அறிஞர்கள் செய்துள்ள முடிவு எல்லாம் இந்தப் பிரச்சினை குறித்து மேலும், மேலும் மேலும் ஆய்வுகள் நடத்த வேண்டும் என்பது தானே தவிர முடிவும் தீர்வும் எதுவுமில்லை.

இன்னும் சில குழுக்கள், குறிப்பாக பீகாரில் சாதி மற்றும் வர்க்கப் போராட்டங்களை இணைக்க முயன்றனர். சாதி ரீதியிலேயே சில அமைப்புகளைக் கட்டினர். ஆனால் அதன் தலைமை இயல்பாகவே சாதிவெறி பிடித்துப் போய் பிற சாதிகளின் நிலமற்ற, ஏழை விவசாயிகள் பெண்கள் - குழந்தைகளையே வெட்டிக் கொல்லும் அளவுக்குச் சீரழிந்து போனது. அடுத்தடுத்த சாதிகள் அடுக்கு முறையில் சாதிய ஆதிக்கம் செலுத்தும் வகையில் இருப்பதால் இந்தக் கசப்பான முடிவு தவிர்க்க முடியாததானது.

மூன்றாவதாக, வர்க்கப் புரட்சியின் மூலம் வருணாசிரம - பார்ப்பனீய இந்துமத வெறியையும் அதன் அடிப்படையிலான சாதிய அமைப்பையும் தகர்த்திட வேண்டும் என்கிற சில மார்க்சிய லெனினியக் குழுக்களின் நிலைப்பாடும் முயற்சியும். இதுவே சரியானதெனக் கருதுகிறோம். ஆனால் 'பொதுவான போராட்டங்களில் பங்கு பெற்றால் சாதிய உணர்வு மறைந்துவிடும்' என்று சாதிய ஒடுக்குமுறைகளையும், இந்துமத வெறியையும் கண்டுகொள்ளாமல் இருக்கக் கூடாது. ஒவ்வொரு விவ்காரத்திலும் தனிச்சிறப்பான முக்கியத்துவம் அளித்து அவற்றுக்கு எதிராகப் போராடவேண்டும். வர்க்கரீதியாக அணிதிரட்டுவதில் கூட உறுதியாக இருக்கும் போது கிட்டத்தட்ட முழுக்கவும் உழைக்கும் மக்களாக உள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி சாதியினரும், பிற்பட்ட சாதிகளிலேயே பெரும்பான்மையினரான உழைக்கும் மக்களுமே புரட்சியின் தலைமை மற்றும் பிரதான சக்திகளாக இருக்க முடியும் இந்த முறையிலே வருணாசிரம - பார்ப்பனீய இந்துவெறிக்கும் சாதிய அமைப்புக்கும் எதிரான சக்திகளை ஒன்றுபடுத்தி அவற்றைத் தகர்க்க முடியும். இதற்கு முதற்பணியாக, முக்கியப் பணியாகச் செய்ய வேண்டியது, வர்க்க ரீதியில் திரட்டப்படும் அமைப்புகளுக்குள் சாதி ஆதிக்க வெளிப்பாடுகள், சாதிப் பாகுபாடுகள் அனைத்துக்கும் எதிராக இடையறாத போராட்டம் நடத்த வேண்டும். அப்போதுதான் அவை புரட்சிகர அமைப்புக்களாக இருக்கவும் ஒடுக்கப்படும் மக்களின் மக்களின் நம்பிக்கையைப் பெறவும், ஒடுக்கும் சாதி ஆதிக்கத்தை வீழ்த்தவும் முடியும்.

வாசகர் வி.பி.யின் பார்வையிலுள்ள சில தவறுகளையும் சுட்டிக் காட்டவேண்டும். (தேசிய) இனப்பிரச்சனையை மற்றவற்றின் கலவரங்களோடு சேர்க்க முடியாது. (தேசிய) இனங்கள் ஒடுக்கப்படுவதாலேயே இனப் போராட்டங்கள் வெடிக்கின்றன. அப்போராட்டங்கள் வர்க்கப் புரட்சிக்குத் தடை அல்ல. புரட்சியின் ஒரு பகுதியாக எடுத்து நடத்தப்படவேண்டியவையாகவே கருதுகிறோம். சாதி, மதக் கலவரங்களில் ஈடுபடும் உழைக்கும் மக்கள் - அணிகள் வென்றெடுக்கப்பட வேண்டியவர்களே. புரட்சியின் அனைத்துப் பிரச்சினைகளின் மீதுதான் புரட்சிக் குழுக்கள் ஒன்றிணைய முடியுமே தவிர சாதி, மத, வகுப்புவாத மாயையில் இருந்து மக்களை விடுபட வைப்பதற்காக மட்டும் ஒன்றிணைய முடியாது. புரட்சியை மட்டுமல்ல இந்தப்பணியைக்கூட எந்த அடிப்படையில், எவ்வாறு மேற்கொள்வது என்கிற நிலைப் பாட்டில் ஒற்றுமையில்லாதபோது நல்லெண்ணங்கள் மட்டும் போதா.

● *எல்லாப் பிரச்சனைகளுக்கும் வன்முறைதான் தீர்வு என்று சொல்லும் நீங்கள் பாலத்திற்கு வெடி வைப்பது, பாங்குகளை கொள்ளையடிப்பது, பஸ்ஸை பெட்ரோல் ஊற்றிக் கொளுத்துவது போன்ற வன்முறைகளை ஏன் ஆதரிப்பதில்லை? ஆனால் ஆந்திராவில் ஒரு வருடத்திற்கு முன்பு நக்சலைட்டுகள் கலெக்டர்களைக் கடத்திக் கொண்டு போனதை மட்டும் எந்த அடிப்படையில் ஆதரிக்கின்றீர்கள்? அவ்வாறு நக்சலைட்டுகள் செய்வது சரியா?*

*— ஜி.வடிவேலு, கள்ளக்குறிச்சி.*

■ பரபரப்பூட்டும், சாகச, பயங்கரவாதச் செயல்களை ஒரு போராட்டமுறையாக கொள்ள முடியாது. மேலும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் வன்முறை தான் தீர்வு என்பதும் எமது நிலைப்பாடல்ல. போலீசாருடன் மோதல் என்கிற பெயரில் நிராயுதபாணிகளான புரட்சியாளர்களைக் கைது செய்து, சித்திரவதை செய்து, சுட்டுக் கொல்வது போன்ற அரசு பயங்கரவாதச் செயல்களை முறியடிப்பதற்கும், துரோகிகள், ஆள்காட்டிகளை அழித்தொழிக்கவும் சில புரட்சிகரப் பயங்கரவாதச் செயல்கள் அவசியமானவைதான்.

புதிய ஜனநாயகம்

# ஆறாவது ஆண்டுவிழா

**நாள்: 17.11.90 இடம்: மதுரை**

## கருத்தரங்கம்

**காலை 9.30 முதல் மதியம் 1.00 வரை**

***இடம்:*** தியாகி பச்சையப்பன் அரங்கம்
(சேம்பர் ஆஃப் காமர்ஸ் அரங்கம்)
காமராசர் சாலை, மதுரை.

***தலைமை:*** தோழர் மாது, மாநில ஒருங்கிணைப்பாளர்
விவசாயிகள் விடுதலை முன்னணி, தமிழ்நாடு

. 'புதிய ஜனநாயகத்'தின் நோக்கமும் எதிர்கொள்ளும் சவால்களும்

**தோழர் எஸ்.மதியழகன்.**
ஆசிரியர், புதிய ஜனநாயகம்.

முதலாளித்துவ பத்திரிக்கை சூழலில் புரட்சிகர பத்திரிக்கையின் அவசியம்

சிறப்புரை: தோழர் அனுராதா காந்தி
அனைத்து மகாராஷ்டிரா தொழிலாளர் சங்கம்
[AMKU] நாக்பூர்.

## வாழ்த்துரை

**தோழர் சுந்தரபாண்டியன்,**
மாவட்ட அமைப்புச் செயலர், அரசு பணியாளர் சங்கம்,
பசும்பொன் தேவர் மாவட்டம்.

**தோழர். ஜி.ராமலிங்கம், வழக்குரைஞர்**
புதுக்கோட்டை

**தோழர். செண்பகம்,**
பாண்டியன் போக்குவரத்துக் கழகம், மதுரை.

**பேராசிரியர் இளமுருகன், தஞ்சை.**

□ □ □

**பிற்பகல் 2.00 முதல் 6-00 வரை**

- தோழமை அமைப்புப் பிரதிநிதிகளின் உரை'
- வாசகர்களின் கேள்விகளுக்கு 'புதிய ஜனநாயகம்' ஆசிரியரின் பதில்

## பொதுக்கூட்டம்

***இடம்:*** வடக்குமாசி வீதி - மேலமாசி வீதி சந்திப்பு
***நேரம்:*** மாலை 7.00 மணி
***தலைமை:*** தோழர் எஸ்.மதியழகன்
ஆசிரியர், புதிய ஜனநாயகம்.
***சிறப்புரை:*** தோழர். க்திரவன், மாநில இணை செயலர்
மக்கள் கலை இலக்கியக்கழகம், தமிழ்நாடு
தோழர் அனுராதா காந்தி,
[AMKU] நாக்பூர்

**''நக்சல்பாரி இடிமுழக்கம்''**
**கலை நிகழ்ச்சி நடைபெறும்.**

**அணி திரண்டு வருக!**


படிப்பகம்

www.padippakam.com

# மதவெறிக்கு எதிராக.....

ஆர்.எஸ்.எஸ். விசுவ இந்து பரிஷத், ந்து முன்னணி, பாரதீய ஜனதா — இப்படி ராளமான இந்துமதவெறி அமைப்புகள் னுடைய விஷநாக்கை இந்தியா முழுவ ம் நீட்டுகின்றன. இந்து மதவெறி தீயை ட்டிவிட்டு சிறுபான்மை முஸ்லீம் மக் ளை பலியிடுகின்றன.

மேற்கே பரோடா, சூரத் முதல் டக்கே ஜெகனாபாத் வைசாலி, கோண்டா ன்று உழைப்பாளி மக்களை இந்துமத வறி கும்பல்கள் கொத்துக் கொத்தாக வெட் ப் போடுகின்றன. ஆட்சி அதிகாரத்தைக் கப்பற்றுவதற்கே இப்படி மனித ரத்தத்தால் ந்தியாவை மூழ்கடிக்கிறது. இந்துமத வறி ஆர்.எஸ்.எஸ்; பா.ஜ.க. கும்பல். இந் மதவெறி கும்பலுக்கு எதிராக உழைப் ாளி மக்களை அறைகூவி அழைக்கின்றன, க்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயி ள் விடுதலை முன்னணி போன்ற புரட்சிகர அமைப்புகள். இந்து மதவெறியை அதன் யிர்நிலையில் தாக்கி அழிக்கும் சரியான கொள்கை முழக்கங்களுடன் வீச்சான பிரச் ார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

**கோவையில்...**

"மத்திய, மாநில அரசுகளே...

ஆர்.எஸ்.எஸ். போன்ற மதவெறி அமைப்புகளை தடை செய்!

பாபர் மசூதியை முஸ்லீம்களுக்கு சொந்தமாக்கு! என்ற முழக்கங்களுடன் 27.10.90 அன்று ஒண்டிப்புதூர் பகத்சிங் திடலில் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. தொடர்ந்து பிரச்சாரம் எடுத்துச் செல்லப்படுகிறது.

**மதுரையில்...**

27.10.90 அன்று மதுரையின் மையப் பகுதியான கட்டபொம்மன் சிலையிலிருந்து ஊர்வலமும், 60 அடி சாலையில் பொதுக் கூட்டமும் நடத்தப்பட்டது.

மதவெறியை மூட்டி உழைக்கும் மக்களை மோதவிட்டு ரத்தம் குடிக்கும் பா.ஜ.க வுடன் மற்ற ஓட்டுப் பொறுக்கி கட்சிகள், ராமஜென்ம பூமி - பாபர் மசூதி விவகாரத்தில் எப்படி சந்தர்ப்ப வாதமாக நடந்து கொள்கின்றன என்று அம்பலப்படுத்தப்பட்டது.

**கடலூரில்....**

மதத்தின் பெயரால் மக்கள் பிளவுறுவதைத் தடுக்கவும், இந்தியாவை இந்துமத வெறிக் கும்பல் இடுகாடாக மாற்ற எத்தனித்துள்ளதை எதிர்த்தும் ஜனநாயக சக்திகளே, உழைக்கும் மக்களே ஒன்றிணைவீர் என்ற அறைகூவலுடன் பிரச்சாரம் எடுத்துச் செல்லப்பட்டது. 24.10.90 அன்று திருப்பாதிரிப் புலியூரில் தேரடி வீதியில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. இந்து ஓட்டுக்கள் கைநழுவிப் போய்விடுமோ என்ற அச்சத்தில் இந்து மத வெறி பா.ஜ.க.வை கண்டிப்பதைக் கைகழுவிவிட்ட ஓட்டுப் பொறுக்கி கட்சிகளின் யோக்கியதை தோலுரித்துக் காட்டப்பட்டது.



# நம்பிக்கையின் ஒளிக்கீற்று

1917. 74 ஆண்டுகளுக்கு முன் காரிருள் சூழ்ந்த முதலாளித்துவ சுரண்டல் உலகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவெள்ளியாய் உதித்தெழுந்தது ரஷியாவின் நவம்பர் புரட்சி! தோழர் லெனின் தலைமையில் புரட்சியின் நாயகர்களான பாட்டாளிகளும் பஞ்சைப் பராரிகளும் வானத்தைக் கீறி வைகறையைப் பறித்தெடுத்தனர். ஏகாதிபத்தியம் காகிதப் புலியே என தோலுரித்துக் காட்டி, காலனி நாட்டு மக்களின் மனங்களில் விடுதலைக் கனலை ஏற்றிவைத்து சோசலிச சகாப்தத்தைத் துவக்கி வைத்தனர். சோசலிச நிர்மாணத்தில் புதிய சாதனைகளைப் படைத்த ரஷிய மக்கள் தோழர் ஸ்டாலின் தலைமையில் உலகை அச்சுறுத்திய பாசிசத்தின் பல்லைப் பிடுங்கி அதன் முதுகெலும்பை முறியடித்தனர். பாசிசத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகள் செங்கொடியின் கீழ் சோசலிச நாடுகளாக மலர்ந்தன. ரஷியப் புரட்சியின் ஒளியில் நீண்ட பயணமாய் சீன மக்கள் கிளர்ந்தெழுந்த போது அது செஞ்சீனமாய் ஒளிர்ந்தது.

ஆனால் இன்று ரஷியாவும் சீனாவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் முதலாளித்துவ நாடுகளாகச் சீரழிந்து கிடக்கின்றன. சோசலிசம் பூத்துக் குலுங்கிய சோவியத் நாட்டில் இன்று பாட்டாளி மக்கள் பட்டினியால் பரிதவிக்கின்றனர். ரஷியாவைப் போலவே கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடந்த முதலாளித்துவ மீட்சியைத் தொடர்ந்து அவை ஏகாதிபத்தியங்களின் வேட்டைக்காடாகி விட்டன. கி.ஜெர்மனியின் போலிக் கம்யூனிஸ்டுகளோ, நாட்டையே தாரை வார்த்துக் கொடுத்து ஏகாதிபத்திய உலகுடன் சங்கமமாகி ஜெர்மன் ஐக்கியத்தை நிறுவியுள்ளனர்.

கம்யூனிசத் துரோகிகள் தற்காலிகமாக வெற்றி பெற்றாலும், கம்யூனிசமே தோற்றுவிட்டது என்று முதலாளித்துவவாதிகள் அற்ப சந்தோஷத்தில் குதூகலித்தாலும் ரஷிய போல்ஷ்விக் புரட்சி மண்ணில் பாட்டாளி மக்கள் கம்யூனிசத்தைப் புறக்கணித்துவிடவில்லை. முதலாளித்துவ மீட்சியின் கோரமான விளைவுகளை அனுபவ ரீதியாக உணர்ந்துள்ள ரஷியப் பாட்டாளி மக்களில் ஒரு பிரிவினர் தமது அன்பிற்குரிய தலைவர்களும் ஆசான்களுமான லெனின், ஸ்டாலினது உருவப் படங்களை இதோ, 74வது நவம்பர் புரட்சிப் பேரணியில் ஏந்திச் செல்கின்றனர்.

தோழர் லெனினது கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, தோழர் ஸ்டாலினை அவதூறு செய்து இழிவுபடுத்தும் ரஷிய மண்ணில், முதலாளித்துவத்தை அம்மணமாக அரங்கேற்றிவரும் கம்யூனிசத் துரோகிகளைப் புறக்கணித்துவிட்டு இம்மக்கள் போல்ஷ்விக் புரட்சிப் பாதையை முன்னறிவிக்கிறார்கள். கோர்பி துரோகக் கும்பலுக்கு எதிராக முழக்கமிட்டுக் கொண்டு செல்கிறார்கள்.

முன்னாள் சோசலிச நாடுகளில் கம்யூனிச ஆசான்களின் பெயர்கள் மதிப்பிழந்துவிட்டதாக, கம்யூனிசமே தோல்வியடைந்துவிட்டதாக முதலாளித்துவ வாதிகள் மிகைப்படுத்தி புளுகிவரும் வேளையில், சுற்றிச் சூழும் பல வண்ணத் திரிபுவாதப் புகைமூட்டத்தின் நடுவே மீண்டும் நம்பிக்கையின் சிறுபொறி தெறித்துள்ளது. இச்சிறுபொறி பெருங்காட்டுத் தீயாக மாறும். ரஷியாவில் மீண்டும் நவம்பர்கள் தோன்றும். ஏகாதிபத்தியம் வீழ்த்தப்படும்; கம்யூனிசமே இறுதியில் வெல்லும்!

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd.No.TN/MS(S) 3





நாட்டின் ஆளும் - அதிகார்வர்க்க கும்பல் நவீன வாழ்க்கையின் சகல இன்பங்களிலும் புரளும்போது, உழைப்பாளியின் குழந்தைகள், கல்லுடைக்கும் கடுமையான வேலைகளில் ஈடுபட்டு தங்கள் குடும்பத்தைக் கட்டி காக்கின்றனர். நடுங்கும் குளிரில் அசாம் தேயிலை தோட்டங்களில், பீகார் நிலக்கரி சுரங்கங்களில், காசநோயோடு ராஜஸ்தான் கண்ணாடி தொழிற்சாலைகளில், நச்சு ரசாயன சிவகாசி பட்டாசு, தீப்பெட்டி தொழிற்கூடங்களில், கிராமபுறங்களில், நிலப்பிரபுக்களிடம் இளம் கொத்தடிமைகளாக... இப்படி சகல உழைப்பிலும் ஈடுபட்டு தாய்நாட்டை தங்கள் பிஞ்சு தோள்களால் தாங்கி நிற்கின்றன, உழைப்பாளி குழந்தைகள்...! இடுப்பிலிருந்து நழுவும் கிழிந்த ஆடை, பழங்கஞ்சி, எண்ணெய் காணாத தலை... உழைத்து உருகுலைந்து இக்குழந்தைகள் கண்டதெல்லாம் இவைதான்!

இதோ! வாரந்தர, மாதாந்திர, விழாக் கால லாட்டரிகள்! ஒரே நாளில் உழைப்பாளி மக்களை லட்சாதிபதியாக்குவதற்கு - அதிர்ஷ்ட தேவதை வீடுதேடி வருவதற்கு - பகுத்தறிவு கழக அரசுகள் தீட்டியுள்ள திட்டங்கள் இவை! கழக அரசின் ஊதாரிச் செலவுக்கு மக்களின் வரிப்பணம் மட்டும் போதவில்லை. எனவே, 'அதிர்ஷ்டம்', 'நல்ல நேரம்' ஆசைகாட்டி மக்களிடம் எஞ்சியிருப்பதையும் பிடுங்கிக் கொள்கின்றன. உதாரணத்திற்கு, பொன்மாரி, புதையல், கொடை வள்ளல் என்ற வாராந்திர ஒரு ரூபாய் லாட்டரி சீட்டுகளை தலா 15 லட்சம் அச்சடிக்கிறது, அரசு. தலா 9 லட்சம்தான் பரிசுதொகையாக கொடுக்கிறது. அதிலும் வருமானவரி என்று 40 சதவிகிதமும், தண்டவரி (Surcharge) 8 சதவிகிதமும் பிடித்துக் கொள்கிறது. அதாவது ஒரு லட்சம் ரூபாய் பரிசு தொகை விழுந்தால், ரூ.56,800 தான் கையில் கொடுக்கும்! ஆக, 15 லட்சம் சீட்டுகள் விற்று அதில் பரிசு கொடுப்பது வெறும் ரூ.4.5 லட்சம் ரூபாய்தான்! சென்ற ஆண்டு ரூ.45 கோடிக்கு அரசு லாட்டரி சீட்டு விற்றது. இதில் அரசு கொள்ளையடித்த பணம் மட்டும் 30 கோடி ரூபாய்! இந்தியநாட்டின் மொத்த லாட்டரி சீட்டுகளில் 60 சதவிகிதம் தமிழகத்தில் தான் விற்பனையாகிறது. தமிழகத்தில் பிற மாநில சீட்டுகளின் விற்பனைக்கு விதித்திருந்த தடையையும் இப்போது நீக்கி விட்டது, கருணாநிதி அரசு!

உழைப்பாளி மக்களை, கள்ளச்சாராயம், லாட்டரி சீட்டில் சீரழித்து, கொள்ளையடித்து, ஊதாரிச் செலவுகளில் திளைக்கு[ம்] ஆளும் கும்பல், அரசு எந்திரம் ஒருபுறம் உழைப்பாளிகளின் குழந்தைகள் கடுமை[யா]க உழைத்தும் தங்களுடைய வயிற்று பசியிலிருந்தும்கூட விடுபட முடியா[த] கொடுமை மறுபுறம். நம் மழலைச் செல்வ[ங்]களுக்கு இழைக்கப்படும் இந்த அவலத்தி[ற்]கெதிராக நாம் திரள்வது எப்போது?

# இதுதான் இன்றைய இந்தியா



படிப்பகம்